பக்கங்கள்: 28

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 17, ஞாயிற்றுக்கிழமை 01.01.2017 கதிர் 57

எமது வாடிக்கையாளர்
அனைவருக்கும் இனிய
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

Rasi Collections ராசி கலெக்ஷன்ஸ்

இல.199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 222 5571



# தீர்வு முயற்சிகளில் இருந்து வெளியேறுவது மடமைத்தனம்

## விளக்குகிறார் மாவை சேனாதிராசா

கொழும்பு, ஜனவரி 01

**தீர்வுக்கான முயற்சிகள், கலந்துரையாடல்கள், ஆலோசனைகள், விவாதங்கள் மட்டும்தான் இன்று வரை நடந்துள்ளன. அவை இன்னும் முடிவுக்குக் கொண்டு வரப் படவில்லை. அப்படியிருக் கையில் இந்த முயற்சிகளில் இருந்து வெளியேற வேண் டும் என யாரும் எண்ணுதல் அறிவுடைமையாகாது.**

**- இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களுள் ஒருவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.**

கிளிநொச்சிமாவட்டஇலங்கை தமிழரசுக் கட்சிக் கிளையின் வருடஇறுதி ஒன்றுகூடல் நேற்றுக் காலை கட்சியின் செயலகமான அறிவகத்தில் நடைபெற்றது.

கட்சியின்கிளிநொச்சிக்கிளைத் தலைவர் சி.சிறீதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஒளிவிழா இடம்பெற்றது.

மாகாண சபை உறுப்பினர்கள், கட்சியின்வட்டாரஅமைப்பாளர்கள் , பிரதேச அமைப்பாளர்கள், கிளைகளின் நிர்வாகிகள், செயற்பாட்டாளர்கள் ஒன்று கூடியிருந்த இந்நிகழ்வில் வணக்கத்திற்குரிய அருட்தந்தையர்களான டிக்சன் ஜோர்ஜ் துரைரட்ணம், அன்ரன்ஜோர்ஜ் ஆகியோர் நத்தார்செய்திகளை விடுத்து, ஆராதனைகளையும் ஆசீர்வாதங்களையும் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து நடை

பக்கம் 27 ›››





# ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மஹிந்தவால் முடியாது!

## அடித்துக் கூறுகின்றார் சம்பந்தன்

கொழும்பு, ஜன.01

''முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஒரு போதும் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. இதற்கு மக்கள் ஒரு போதும் ஆதரவு வழங்கமாட்டார்கள்."

– இவ்வாறு, எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாட்டு மக்களினால் தோற்கடிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ எப்படி ஆட்சியைக் கவிழ்க்க முடியும் என்றும் சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

2017ஆம் ஆண்டில் தற்போதைய ஆட்சியைக் கவிழ்ப்பதே தனது இலக்கு என்று இலங்கையில் பணியாற்றும் வெளிநாட்டு ஊடகவியாலாளர்களிடம் முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்றஉறுப்பினருமானமஹிந்த

பக்கம் 28 ›››

# புதிய அரசமைப்பால் நாடு துண்டுபடாது மகாநாயக்கருக்கு ஜனாதிபதி விளக்கம்

கொழும்பு, ஜன.01

தற்போதுமுன்மொழியப்படும் புதியஅரசமைப்புவரைபில்நாட்டுக்குத் தீமையான எந்தவொரு அம்சமும் உள்ளடக்கப்படவில்லை. அது எந்த வகையிலும் நாட்டைத் துண்டாடும் ஆவணமல்ல.

– இவ்வாறு அஸ்கிரிய, மல்வத்தை மகாநாயக்கர்களிடம் உறுதிபடத் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நேற்று தலதா மாளிகைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அங்கு வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் அஸ்கிரிய மகாநாயக்கதேரர் வண. வரகொட ஸ்ரீ ஞானரத்னதேரர் மற்றும்மல்வத்த மகாநாயக்கதேரர் ஆகியோரைத்தனித்தனியாகச்

பக்கம் 28 ›››

# காந்தி சிலை உடைப்புக்கு மாவை கண்டனம்

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று நகரில் மகாத்மா காந்தி சிலை உடைக்கப்பட்ட செய்தி மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது. இச்செயலானது மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்றகோட்சேயின்கொடிய செயலை விட மிகுந்த கொடுமையானதும் கோழைத்தனமானதுமாகும். இச்செயலை மக்கள்அனைவரும்கண்டிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவைவருமாறு:-

பக்கம் 28 ›››

## 2 அமைச்சர்கள் 10 எம்.பிக்கள் எதிரணிக்கு?

கொழும்பு, ஜன.01

தற்போதையஅரசில்அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டுபிரதிஅமைச்சர்களும் மற்றும் பத்து எம்.பிக்களும் அரசுத் தரப்பிலிருந்து அடுத்தவாரமளவில் எதிரணிக்குத் தாவத் தயாராகி வருகின்றனர் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(விவரமான செய்தி 6 ஆம் பக்கத்தில்)

## காலி விபத்தில் 2 இளைஞர்கள் பலி

கொழும்பு,ஜன.01

காலி, நுகதுவ பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

இந்த விபத்தில் கார் ஒன்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மோதியுள்ளன.

பக்கம் 28 ›››

## மின்சாரம் தாக்கி 4 யானைகள் பலி

கொழும்பு, ஜன.01

கெப்பற்றிக்கொலாவை, கடவல காட்டுப் பகுதியில் உயிரிழந்த நான்கு யானைகளின் உடலங்கள் சிதைவுற்ற நிலையில் நேற்றுக் காலை கண்டு பிடிக்கப்பட்டன.

பாதுகாப்பற்ற மின் கேபிள் இணைப்புகளால் இவை உயிரிழந்திருக்கலாம் என அனுராதபுரம் கால்நடை வைத்தியர் பிரிவுக்குப் பொறுப்பான டாக்டர் சந்தன ஜெயசிங்க தெரிவித்தார். (உ)

## அளப்பு அருணாசலம்



எது கவிழும்? ஆட்சியோ...? மஹிந்தவோ...? தீர்வோ...?

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள்,
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
'காலைக்கதிர்'
குடும்பத்தின்
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!

## மஹிந்தவுக்கு மறதி பொதுபலசேனா சீற்றம்

கடந்த 2015 ஆம் ஆண்டு நடத்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தராஜபக்ஷவின்வெற்றிக்காகத் தாங்கள் பரப்புரைகளில் ஈடுபட்டார்கள் என பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ இப்போது அதைமறந்துவிட்டார். அவர்தன்னைச்சுற்றியுள்ளவர்களின் ஆலோசனைப்படி வேறு விதமாகப் பேசுகிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தன்னைத் தோற்கடிப்பதற்கு ஐ.தே.கவுடனும், சம்பிக்க ரணவக்கவுடனும் இணைந்து பொதுபல

பக்கம் 28 ›››

## உப்பு, உவர் நிலத்திலும் விளையும் நெல் ரகம் புதிதாகக் கண்டுபிடிப்பு

உப்புமற்றும்உவர்நிலத்திலும் தாக்குப்பிடித்து விளையக்கூடிய – பூச்சிகள் மற்றும் நோய்த் தொற்றுகளுக்கு எதிராக நின்று பிடிக்கக்கூடிய – அதிக விளைச்சலைத்தரும் இரண்டு புதிய ரக நெல் இனங்களைத் தாங்கள் உருவாக்கியுள்ளனர் என பட்டலகொட நெல் ஆராய்ச்சி நிலைய நிபுணர்கள் அறிவித் துள்ளனர்.

அவற்றில் ஒன்று பி.ஜி. 369 ரகம். இது வெள்ளை நிற அரிசி. ஓர்ஏக்கருக்கு100முதல்125புசல் விளைச்சலைத் தரவல்லது.

மற்றது பி.ஜி. 3ஆர் ரகம். இது சிவப்பு சம்பா வகை. இது ஒரு ஏக்கருக்கு 140 முதல் 150 புசல் விளைச்சல் தரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# புதுவருட வாழ்த்துச் செய்திகள்

## சிறீதரன் எம்.பியின் வாழ்த்துச் செய்தி



2016ஆம் ஆண்டு தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்த அமைதியும் சமத்துவமும் மிக்க அரசியல் தீர்வு ஏற்படாததால் உருவாகிய மன உளைவுகள், நம்பிக்கை இன்மைகள் எல்லாம் புத்தாண்டில் நீங்க வேண்டும்.

எமது விடுதலைக்காக விதையாகிப்போன பல்லாயிரக்கணக்கான உயிர்களின் மேல் உறுதியாக சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் நீடித்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வு அடையப்பெற வேண்டும்.

அத்தகைய பாதையில் தளராத நம்பிக்கையோடு ஒன்றுபட்ட சக்தியாக பயணிப்பதற்குரிய திடசங்கற்பத்தை எமது மக்களும் எமது தலைவர்களும் எடுத்துக்கொள்ள வேண்டும் எனப் பிரார்த்தித்துக்கொண்டு உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைப் பகிர்ந்துகொள்கிறேன்.

**சி.சிறீதரன்,** நாடாளுமன்ற உறுப்பினர்.

## அங்கஜன் இராமநாதன் வாழ்த்து



பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வழுவன்று. உலகநியதியே என்ற பழந்தமிழரின் கூற்றுக்கு இணங்க மலருகின்ற புதிய ஆண்டில் தமிழ்மக்களுடைய அவசர, அவசிய தேவைகள், கனவுகள் நிறைவேற வேண்டும். அவர்களுடைய ஏக்கங்கள், துக்கங்கள் இந்த புதிய ஆண்டில் கழிய வேண்டும்.

ஈழத் தமிழ் மக்களின் வேண்டுகோள்கள் ஐக்கிய இலங்கைக்குள் இன்னமும் பழையனவாகவே இருக்கின்றன. நான் ஒரு அரசியல்வாதி என்பதற்கு அப்பால் யாழ். மண்ணின் மைந்தன் என்ற ரீதியில், தமிழ் மக்களின் சேவகன் என்ற ரீதியில், எமது மக்களின் அவசர தேவைகளான வேலைவாய்ப்பு, மீள்குடியேற்றம், விதவைகள் மறுவாழ்வு, போராளிகள் புனர்வாழ்வு போன்ற விடயங்களில் காலதாமதமின்றிச் செயற்பட்டு வருகின்றேன்.

ஈழத் தமிழர்களின் அரசியல் தேவைகளை இந்த புதிய ஆண்டிலும் நிவர்த்தி செய்யும் இந்த நல்லாட்சி அரசு என தமிழ் மக்கள் நம்பும் இவ்வாட்சியில் அரசியல் கட்சி பேதமின்றி தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் ஒரு புள்ளியில் சந்தித்தால் நிச்சயமாக நாம் எமது தேவைகளை வென்றெடுக்கலாம். அதற்கு இன்று பிறந்திருக்கும் இந்த ஆங்கிலப் புத்தாண்டு தமிழர்களுக்கு அனுகூல காலமாக அமையும் என நம்பிக்கை கொள்வதோடு அனைத்து தமிழ் மக்களுக்கும் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அங்கஜன் இராமநாதன்,** நாடாளுமன்ற உறுப்பினர்.

## ஜெகனின் வாழ்த்துச் செய்தி



சாந்தி, சமாதானம் நிறைந்த இந்தப் புத்தாண்டு எல்லா மத மக்கள் வாழ்விலும் சந்தோசத்தையும் ஏற்படுத்தும் ஆண்டாக விளங்க வேண்டும். இலங்கைத் தமிழ் மக்களின் நீண்ட கால அவல வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து அமைதித் தீர்வு காணும் ஆண்டாக இவ்வருடம் மலர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**வே.குகேந்திரன் (வி.கே.ஜெகன்)**
**(முன்னாள் யாழ். மாவட்ட எம்.பி., ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நிர்வாகச் செயலாளர்)**

## சந்திரகுமாரின் வாழ்த்துச் செய்தி




புத்தாண்டை நாம் வரவேற்பதன் அர்த்தம் வெறுமனே சம்பிரதாயமான ஒருநாள் மகிழ்ச்சியாகவோ ஒருநாள் கொண்டாட்டமாகவோ அமைந்துவிடாமல், ஆண்டு முழுவதும் நம் வாழ்க்கை முழுவதும் நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்துழைக்க வேண்டும்.

நம்முடைய கனவுகளையும் நம் முன்னே உள்ள சவால்களையும் நாம் வென்றெடுக்கும்போதே வாழ்க்கை இனிமையாகும். தாயக விடுதலை என்பதும் சமூக விடுதலை என்பதும் எமது கனவாகும். அந்தக் கனவை நிறைவேற்றுவதற்கு நம்முன்னே ஆயிரமாயிரம் சவால்கள் உள்ளன. அந்தச் சவால்களை வெற்றிகொள்வதற்காக நாம் இரத்தம் சிந்தியிருக்கிறோம். கடுமையாக உழைப்பைச் செலுத்தியிருக்கிறோம். எனினும் எங்களால் அந்த இலக்கை இன்னும் எட்ட முடியாதுள்ளது. ஆகவே நம் சிந்தனையிலும் செயற்பாடுகளிலும் மாற்றங்களை உண்டாக்க வேண்டியுள்ளது. அந்த மாற்றங்களே உண்மையான மாற்றங்களையும் வெற்றியையும் தரும். புதிய ஆண்டில் இந்தச் சிந்தனை மாற்றத்தையும் செயற்பாட்டு மாற்றத்தையும் நிகழ்த்தி, நம் வாழ்க்கையிலும் வரலாற்றிலும் மாற்றங்களை உண்டாக்குவோம்.

புதிய ஆண்டு என்பது மாற்றங்களுக்கான ஆண்டாக, அந்த மாற்றத்தின் வெற்றிக்கான ஆண்டாக அமையட்டும். உண்மையான அரசியல் மாற்றங்களையும் சமத்துவ, சமூக வாழ்வையும் உருவாக்கும் ஆண்டாக மலர வைப்பதற்கு சமத்துவ சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு உழைக்கும் என்ற மகிழ்சியான சேதியை இந்த

**மு. சந்திரகுமார்**
முன்னாள் அமைப்பாளர்,சமத்துவ, சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு

## வீணாகான குருபீட வாழ்த்து



தமிழ் உலகுக்கு ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன். யுத்தம் நிறைவடைந்த போதிலும் மக்களுக்கு இன்னும் முழுமையான அமைதியும் சந்தோஷமும் சுதந்திரமும் கிடைத்திருக்கின்றது எனக் கூறமுடியாது. இனங்களுக்கிடையில், மதங்களுக்கு இடையில், முரண்பாடுகளும் வேற்றுமைகளும் வளர்ந்த வண்ணம்தான் இருப்பதைக் காணமுடிகின்றது.

அதுமட்டுமல்லாது போதைப்பொருள் பாவனை முதலான பல சவால்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் மக்கள் காணப்படுகின்றார்கள். கடந்தகால துன்பங்கள் எல்லாம் விலகி மலரும் ஆங்கிலப் புத்தாண்டு சவால்களையும் தடைகளையும் தகர்த்தெறிந்து ஒவ்வொரு மக்களதும் நல்லெண்ணங்களையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்வதாக மலரட்டும்.

மதபோதனைகளாலும் பெரியோர் நல்வார்த்தைகளாலும் நற்செயல்களாலும் நல்லவைகள் பெருகவும் வேண்டாதவைகள் அற்றுப்போகவும் இறையருள் கைகூட வேண்டும்.

2017இல் எம்மக்கள் சாதனைகளையும் வெற்றிகளையும் சந்தோஷத்தையும் அமைதியையும் அன்பையும் நிறைவாகப் பெற்று நல்லவண்ணம் வாழ வாழ்த்தி வீணாகான குருபீட குருமார்கள் சார்பில் ஆசீர்வதிக்கின்றேன்.

சந்நிதாச்சாரியார்
**சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்**
குருமார் சந்நிதானம், வீணாகான குருபீடம்

## அமைச்சர் சத்தியலிங்கம் வாழ்த்து



பிறந்துள்ள புதிய ஆண்டிலாவது தமிழ்மக்களின் நம்பிக்கைகள் நனவாகட்டும்.

தமிழர்களின் கடந்த காலங்கள் துன்பகரமானவை. சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழ் மக்கள் இந்த தேசத்தில் இரண்டாந்தர பிரஜைகளாகவே ஆளும் வர்க்கத்தினரால் நடத்தப்பட்டு வந்துள்ளனர்.

நீண்ட வரலாற்றையும், கலாசாரத்தையும், மொழியையும் கொண்ட தமிழினம் கடந்த 68 வருடங்களாக நாட்டில் வாழுகின்ற ஏனைய இனங்களைப் போல சமமாக நடத்தப்படவில்லை. இதனால் விடுதலை வேண்டி நமது இனம் சகல வழிகளிலும் தொடர்ச்சியாக போராடிக்கொண்டுதான் இருக்கின்றது.

எனினும் இன்று வரை தீர்வெதுவும் கிடைக்கவில்லை. நம்பிக்கையே வாழ்க்கையாக ஒவ்வொரு வருடமும் கடந்து செல்கின்றது. பிறக்கும் 2017ஆம் ஆண்டிலாவது தமிழ் மக்களுக்கு நீடித்து நிலைக்கக்கூடிய நிரந்தர சமாதானம் கிடைக்கட்டும்.

கருத்து வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க இந்த ஆண்டில் திடசங்கற்பம் கொள்வோம்.

**ப.சத்தியலிங்கம்,**
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்

## அமைச்சர் டெனீஸ்வரன் வாழ்த்து



2017 ஆம் ஆண்டு சந்தோஷமும் சமாதானமும் அன்போடு கூடிய ஒற்றுமையும் உள்ள வளமான ஆண்டாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கடந்துவந்த 2016ஆம் ஆண்டிலே நடந்த நல்லதையும் தீயதையும் எண்ணிப்பார்த்து நமது குறைவுகளை நிவர்த்தி செய்து மலர்ந்துள்ள புதிய ஆண்டை வரவேற்போம். கடந்த ஆண்டு முழுவதும் நமக்கு உதவிய கடவுளுக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் கூறிக்கொள்வோம்.

மலர்ந்துள்ள இந்த ஆண்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் புதிய எண்ணங்கள், புதிய முயற்சிகள், நல்ல சிந்தனைகள் என்பனவற்றால் ஓர் உயிரூட்டமுள்ள விசேட ஆண்டாக அமைய வேண்டும்.

இந்த ஆண்டு இலங்கை முழுவதும் உள்ள மக்களுக்கு பிரகாசமான சந்தோஷம் நிறைந்த சுபீட்சமான வாழ்வு கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

நம்மால் முடிந்தவரை எல்லோரையும் நேசித்து இன, மத, சாதி பேதமின்றி எல்லோருக்கும் உதவி செய்வோம். வாழும் காலம் முழுவதும் எல்லா மக்களையும் நேசிப்போம். இந்த நாளிலே நல்ல சிந்தனையோடு என் உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பா.டெனீஸ்வரன்**
வடக்கு மாகாண மீன்பிடி,
போக்குவரத்து அமைச்சர்.

## பான் கீ மூன் ஓய்வு பெற்றார்

ஐக்கிய நாடுகள் சபையின் 8ஆவது பொதுச் செயலாளர் பான்கீமூன் நேற்றுடன் தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்றார்.

2007ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் 8 ஆவது பொதுச் செயலாளராக பதவியேற்ற பான் கீ மூனின் பதவிக் காலம் நேற்றுடன் நிறைவடைந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் 9 ஆவது பொதுச்செயலாளராக போர்த்துக்கல் நாட்டின் முன்னாள் பிரதமர் அன்டானியோ கட்டேரஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி பதவியேற்ற இவர், இன்று முதல் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகளிர் கல்லூரிக்கு பிரதி அதிபர்களாக இரு ஆண்களா?

யாழ்ப்பாணம், ஜன.01

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு இரண்டு ஆண்களை பிரதி அதிபர்களாக வடமாகாணக் கல்வி அமைச்சு நியமனம் செய்துள்ளது. இது குறித்து இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகளும் அங்குள்ள ஆசிரியைகளும் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

தரம் III அதிபர் நியமனம் வழங்கல் நேற்று முன்தினம் வடமாகாணக் கல்வி அமைச்சில் இடம்பெற்றது. இதில் இரண்டு ஆண் அதிபர்களுக்கு பிரதி அதிபர்களாக இந்து மகளிர் கல்லூரிக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுள் 16 பெண் அதிபர்கள் உள்ளனர். அவர்களுள் சிலர் உயர்வான புள்ளிகளையும் பெற்றுள்ளனர். அப்படியிருக்க ஆண்களைப்பிரதி அதிபர்களாக நியமித்துள்ளமை பலருடைய விசனத்துக்கும் உள்ளாகியுள்ளது. (இ)

## திருவெம்பாவை

அளவெட்டி,ஜன.01

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை திருவெம்பாவை வழிபாடுகள் ஆரம்பமாகி எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை வரை பத்துத் தினங்கள் நடைபெறும்.

தினமும் அதிகாலை 5மணிக்கு மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவைப் பாடல் பதிகங்கள் பாடி சிவனுக்கு முழுக்கு ஆராதனைகள் இடம்பெறும். இதனிடையே 3ஆம் திகதி புதன்கிழமை விநாயக சஷ்டி ஆராதனைகள் இடம்பெறும்.

## திருவாசக முற்றோதல்

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலயத்தில் நாட்டில் அமைதி சமாதானம் நிலவ வேண்டி திருவாசக முற்றோதல் இன்று காலை 7மணி தொடக்கம் இடம் பெறும்.

நாளை அதிகாலை 5 மணிக்கு திருவெம்பாவை வழிபாடு ஆரம்பமாகும். (இ)

வரி விளம்பரம்


விற்பனைக்கு

Lion பொம்மேரியன் நாய்க்குட்டி – கறுப்பு நிறம், சணல் ஆடு, யமுனா பாரி ஆடு, கிடாய், மறி, மொறிஸ் மைனர் கார் (லண்டன்)
என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0779181018
(R - 053)

# தர்ம அமைப்புக்குச் சொந்தமான காணியில் பொலிஸ் நிலையம்

## அகற்றக்கோரி நேற்று ஆர்ப்பாட்டம்





ஏறாவூர், ஜன.01

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலம்பாவெளி பகுதியில், தர்ம அமைப்பு ஒன்றுக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தை அகற்றக் கோரி நேற்று சனிக்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று மேற் கொள்ளப்பட்டது.

வாழைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், மயிலம்பாவெளி பிரதேச மக்கள், கருணாலயம் இல்ல மாணவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், எஸ்.வியாழேந்திரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது 'காணியை ஒப்படைத்து மக்கள் நல திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு தாருங்கள்', 'தர்ம நிறுவனத்தின் காணியை ஒப்படைத்து 150 ஆவது வருட பொலிஸ் தினத்தை பெருமையுடன் கொண்டாடுங்கள்', 'எங்களை அரவணைக்கும் சுவாமி இராமதாஸ் அமைப்பின் காணியை ஒப்படையுங்கள்' போன்ற சுலோகங்கள் தாங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டகாரர்கள் ஏந்தியிருந்தனர்.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டகாரர்கள் தெரிவித்தவை வருமாறு:-

மயிலம்பாவெளி காமாட்சி அம்மன் ஆலயத்துடன் இணைந்ததாக பிரதான வீதியுடன் காணப்படும் இந்தக் காணியை ஒப்படைக்க வேண்டும் என்று கடந்த காலத்தில் பல்வேறு கோரிக்கைகள் விடுத்திருந்தோம். ஏறாவூர்ப் பற்று அபிவிருத்தி குழு கூட்டத்தில் கூட இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தோம்.

இதேவேளை, கடந்த காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார திட்டங்களை முன்னெடுக்க சுவாமி இராமதாஸ் அமைப்பு முயன்று வரு கிறது. இந்த நிலையில் இந்தக் காணி வழங்கப்படாத காரணத்தால் இந்தத் திட்டம் தடைப்பட்டு வருகிறது. -என்றனர். (ச)

## 2 இளைஞர் கைது!

இளவாலை, ஜன.01

வீதியால் சென்ற இளைஞனை தாக்கி மோட்டார் சைக்கிளை கொள்ளையடித்த இரு இளைஞர்களை வெள்ளிக்கிழமை மாலை கைது செய்துள்ளனர் என்று இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானஇளைஞர்கள் இருவரும் வடலியடைப்பு பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள்என்று பொலிஸார் கூறினார்.

இளவாலை வடக்கு பெலவத்தை பகுதியில் வெள்ளிக்கிழமை நண்பகல் வேளை, இளைஞனை வழிமறித்த இரு இளைஞர்கள் அவரது மோட்டார் சைக்கிளைப் பறித்துச்சென்றிருந்தனர்.

இதையடுத்துஇருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். (ஐ-9)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த தினத்தில் ஐவருக்கு 'சிவத்தமிழ்' விருது



தெல்லிப்பழை,ஜன.01, சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 92 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் சிவத்தமிழ்ச் செல்வி பிறந்த நாள் அறக் கொடை விழா எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம்திகதிதெல்லிப்பழையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஐந்து பேருக்கு 'சிவத்தமிழ்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. வைத்திய நிபுணர்சேனாதிராசா ஆனந்தராசா(கொழும்பு), நாதஸ்வர வித்துவான் எம்.பி. பாலகிருஷ்ணன் (அளவெட்டி), பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் (பொன்னாலை), பேராசிரியர் அ.சண்முகதாஸ் (யாழ்ப்பாணம்), பண்டிதை திருமதி மகாதேவி பத்மநாதன் ஆகியோருக்கே இம்முறை 'சிவத்தமிழ்' விருது வழங்கப்படவுள்ளது. (ம)

## டெங்கு காய்ச்சலால் கல்முனையில் சிறுவன் பலி

டெங்கு காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 5 வயதுச் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் கடந்த 27 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட சிறுவன், தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. கல்முனையைச் சேர்ந்த அகமது அதீப் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதேவேளை, நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மகளைச் சித்திரவதை செய்த தந்தை: பாதிக்கப்பட்ட சிறுமி பொலிஸில்

தினமும் தந்தையின் துன்புறுத்தலுக்கு உள்ளான சிறுமி சண்டிலிப்பாய் மத்திய சபை தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க இளவாலை பொலிஸ் நிலையத்தில் பாதுகாப் பின் நிமித்தம் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

பற்றிமா வீதி பண்டத்தரிப்பைச் சேர்ந்த 14 வயதுடைய தனது மகளை தந்தை குடித்து விட்டு தினமும் துன்புறுத்தி வந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சிறுமியின் தந்தை மதுபோதையில் வந்து கையாலும், தடியாலும் தாக்கியுள்ளார்.

இது தொடர்பில் மத்திய சபைத் தலைவர் இளவாலை பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்திருந்தார். விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார், சிறுமியின் பாதுகாப்பு நிமித்தம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். தந்தையைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர். (ஐ-9)

## திருடியவருக்கும், வாங்கியவருக்கும் மறியல்

யாழ்ப்பாணம்,ஜன .01

தொலைத் தொடர்பு நிலையத்தை உடைத்துத் திருடியவரையும், திருட்டு பொருள்களை வாங்கி உடைமையில் வைத்திருந்தவரையும் மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இருவரையும் எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பி.சிவகுமார் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார். வல்வெட்டித்துறை வன்னிச்சையம்மன் கோயில் பகுதியில் உள்ள தெலைத் தொடர்பு நிலையம் கடந்த மாதம் உடைக்கப்பட்டுத் திருட்டுப் போயிருந்தது. இந்தத் திருட்டில் 10 இற்கு மேற்பட்ட தொலைபேசிகள் களவாடப்பட்டிருந்தன. சம்பவம் தொடர்பில் வழக்குப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்ட வல்வெட்டித்துறைப் பொலிஸார், பிரதான திருட்டுச் சந்தேகநபரான சமரபாகு பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரைக் கைது செய்திருந்தனர்.

பின்னர் மேலதிக விசாரணையின் போது திருட்டு பொருள்களை வாங்கி வைத்திருந்த பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பி.சிவகுமார் முன்னிலையில் முற்படுத்திய போது நீதிபதி விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ-9)

## கைதடி வளர்மதி ச.ச. நிலையத்திற்கு தெரிவுசெய்யப்பட்டது புதிய நிர்வாகம்

கைதடி, ஜன.01

கைதடி வளர்மதி சன சமூக நிலையத்திற்கு 2017 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சனசமூக நிலையம் ஆண்டு தோறும் பல்வேறு சமூக நலப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

2016 ஆம் ஆண்டு இயங்கிய நிர்வாகம் நிலையத்தில் அங்கத்தவர்களாக உள்ள பொது மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், 19 குடும்பங் களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாவும் விதவைக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்களையும் வழங்கியுள்ளது. மேலும், கஷ்ட நிலையிலுள்ள 10 குடும்பங்களுக்கு குழாய்க் கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

மேலும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எதிர்காலக் கற்றல் செயற்பாடுகளுக்கான உதவி களும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள நிர் வாகமும் 2017 ஆம் ஆண்டில் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம21)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# மஹிந்தரின் புதுக் கதை !

போருக்குப் பின்னர் தாம் அரசியல் தீர்வுக்குச் செல்ல விரும்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்த போதிலும், அவர்கள் தம்முடன் கலந்துரையாடக் கூட விரும்பவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

அரசியலில் உண்மைக்கு மாறான - முன் பின் முரணான- விடயங்கள் பேசுவது வாஸ்தவம்தான். ஆனால், அதற்காக முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைப்பதுபோன்று பேசக்கூடாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த விடயத்தில் அப்படித் தான் பேசியிருக்கின்றார் போலத் தோன்றுகின்றது.

இந்த உரையை வெளிநாட்டு ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் கூறியிருக்கின்றார். வெளிநாட்டு ஊடகவியலாளருக்கு ஆறு, ஏழு வருடங்களுக்கு முன்னர் நடந்த உள்நாட்டு விவகாரங்கள் பற்றிய மனப்பதிவு இருக்காது என்று கருதி அவர் இதைக் கூறியிருக்கலாம். உள்நாட்டு ஊடகவியலாளர்கள் மத்தியில் இந்தக் கருத்தை அவர் கூறியிருப்பாராயின், அந்த ஊடகவியலாளர்கள் அவரைப் பிய்த்தெடுத்திருப்பார்கள் என்பது நிச்சயம்.

போர் முடிவுற்ற பின்னர் - 2009 இற்குப் பிறகு - அடுத்த ஓரிரு வருடங்களில், அமைதித் தீர்வு காண்பதற்கான பேச்சு முயற்சிகள் என்று அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூப்பிட்ட போதெல்லாம், சத்தம் சந்தடியில்லாமல் அவரைப் போய்ப் பல தடவைகள் நேரில் சந்தித்திருக்கின்றார் சம்பந்தன். பல தடவைகள் மூன்றாம் ஆளுக்குத் தெரியாமல் தனித்தும், சில சமயங்களில் தமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சகாக்களுடனும் அவர் சென்று சந்தித்திருக்கின்றார்.

2011 ஆம் ஆண்டு முழுவதிலும் அமைதிப் பேச்சு முயற்சிகள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பேச்சுக் குழுவைக் கூப்பிட்டு வைத்து, பல தடவைகள் பேசி விட்டு, காதில் வெறும் பூச்சுற்றி அனுப்பிவைத்த விடயத்தை மறைத்துக் கொண்டு இப்போது புருடா கதை விடுகின்றார் மஹிந்த.

2011 ஜனவரி முதல் அந்த ஆண்டு இறுதி வரை, அவர் நியமித்த அமைச்சர்கள் மட்டக்குழுவுடன் அமைதித் தீர்வுக்கான முயற்சிகள் என்ற பெயரில் ஒரு தடவையல்ல, இரு தடவைகள் அல்ல, மொத்தம் 18 தடவைகள் சம்பந்தன் தலைமையிலான தமிழ்க் கூட்டமைப்புக் குழு பேசியது. மணித்தியாலக் கணக்கில் பேசி கடைசியில் கண்டது என்ன? அரசுத் தரப்பின் சுத்துமாத்துத்தான் எஞ்சியது!

இந்தப் பேச்சுகளின்போது, தீர்வுக்கான நகல் திட்டம் ஒன்றையே தயாரித்து முன்வைத்தது கூட்டமைப்பு. தீவிர தமிழ்த் தேசியவாதப் போக்குடையவர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஒரு முக்கிய இராஜதந்திர காய்நகர்த்தலாக அந்தத் திட்டத்தை தமிழர் தரப்பு முன்வைத்தது. அதற்குத் தனது பிரதிபலிப்பை எழுத்தில் தருவதாகச் சொன்ன அரசுத் தரப்பு, அதனைக் கடைசி வரை வழங்காமலேயே இழுத்தடித்து ஏமாற்றியது.

மொத்தம் பதினெட்டுச் சுற்றுக்கள் வரை நீடித்த அந்தப் பேச்சுகளை இரண்டு தடத்தில் நகர்த்துவதாகக் கூட்டமைப்பும் அப்போதைய மஹிந்த அரசும் தீர்மானித்திருந்தன. ஒன்று - தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல். அடுத்தது - இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் திட்டத்தை அடைதல்.

இந்த இரண்டு பாதைகளிலும் அந்த முயற்சி முட்டுச் சந்தியில் முடிவடைந்தமைதான் பெரும் துரதிஷ்டம்.

உடனடிப் பிரச்சினை என்ற தலைப்பில் தடுப்புக் காவலில் இருக்கும் தமிழ்க் கைதிகளின் பட்டியலை வெளியிடல், அவர்களை உறவினர்கள் சென்று சந்திக்க ஏற்பாடு செய்தல் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, அது குறித்து பகிரங்க அறிவிப்பு விடுக்கப்பட்டது.

அந்த அறிக்கைப்படி பட்டியலை மக்கள் பார்வைக்கு வைக்கவும், தடுப்புக் காவல் கைதிகளை உறவினர்கள் வவுனியாவில் வைத்துப் பார்வையிடுவதற்கும் திகதி அறிவிக்கப்பட்டது. ஒரு தடவையல்ல, இரண்டு தடவைகள் அல்ல, மூன்று தடவைகள். மூன்று முறையும் கூட்டமைப்புத் தலைவர்களும் கைதிகளின் உறவினர்களும் வவுனியாவுக்கு அலைந்தமைதான் மிச்சம். எதுவுமே நடக்கவில்லை.

பதினெட்டுச் சுற்றுப் பேச்சுகளின் முடிவில் 2012 ஜனவரியில் அடுத்த சுற்றுப் பேச்சுக்காக அறிவிக்கப்பட்ட இரு திகதிகளிலும் வழமையாகப் பேச்சு நடத்தும் இடத்துக்கு கூட்டமைப்புப் பிரதிநிதிகள் குழு சம்பந்தன் தலைமையில் போய்க் காத்திருந்து - பார்த்திருந்து - ஏமாற்றத்துடன் திரும்பியது.

ஆக, 'பேச்சுக்கு அழைத்தேன்; சம்பந்தன் முதலியோர் வரவில்லை!' - என்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கருத்து முழுப்பொய் என்று தமிழருக்கு நன்கு தெரியும்.

நல்ல காலம், அந்தப் பதினெட்டு சுற்றுப் பேச்சுகளின் போதும் - வழமைக்கு மாறாக - அந்தப் பேச்சுகளின் கூட்ட அறிக்கையை கூட்டமைப்பின் பிரதிநிதி எம்.ஏ.சுமந்திரன் பதித்தமையோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு கூட்டத்திலும் முன்னைய கூட்ட அறிக்கையை வாசித்து, அங்கீகரித்து, கோவையுமிட்டார். அவை இன்னும் அந்தப் பேச்சுகளுக்கு வரலாற்றுச் சான்றாக உள்ளன.

தாம் நியமித்த பிரதிநிதிகள் ஊடாக 18 சுற்றுப் பேச்சுகள் நடத்தி விட்டு, கடைசியில் தாமே தனது பிரதிநிதிகளை அந்தப் பேச்சுக்கு அனுப்பாமல் மறித்து விட்டு -

பதினெட்டுச் சுற்றும் முடிந்த பின்னர், கூட்டமைப்போடு இது வரை பேசியது அரசுப் பிரதிநிதிகள் குழு அல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் குழுவே என்று புதுக்கதை விட்டு, அந்தப்பேச்சை ஒரு தலைப்பட்சமாக முறித்துக் கொண்டவர் மஹிந்தர்.

இப்போது சம்பந்தன் பேச வரவில்லை என்று புதுக்கதை விடுகிறார் அவர்!!




# நெதர்லாந்து அரசால் வடக்கில் அபிவிருத்தி மத்திய அரசிடம் அங்கீகாரத்துக்குத் திட்டம்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.01

வடமாகாணத்தில் நெதர்லாந்து அரசால் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டத்துக்கான முன்மொழிவுகள் மத்திய அரசின் அங்கீகாரத்துக்காக வழங்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

2017ஆம் ஆண்டுக்கான வடமாகாணசபையின் வரவு-செலவுத் திட்ட அமர்வில் 2017ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டங்கள் குறித்த அறிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நெதர்லாந்து அரசால் வழங்கப்படவுள்ள 9 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி உதவியில் வடக்கின் 5 மாவட்டங்களிலும் பெரிய அபிவிருத்தி செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த திட்டத்துக்கான பூர்வாங்க ஆய்வுகள் பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு தற்போதுதிட்ட முன்மொழிவுகள் மத்திய சுகாதார அமைச்சின் அங்கீகாரத்து வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த செயற்றிட்டத்தின் ஊடாக வடமாகாணத்தில் உள்ள விசேட தேவை உடையோரின்நலன்கருதி புனர்வாழ்வு வைத்தியசாலை ஒன்று மாங்குளம் பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

இதேபோல் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பெண் நோயியல் சம்பந்தமான விசேட வைத்திய அலகும், அவசர மற்றும் விபத்து சிகிச்சைப் பிரிவும் அமைக்கப்படவுள்ளன.

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவும், சிறுநீரக சிகிச்சை பிரிவும் இணைந்த ஓர் அலகு உருவாக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் விசேட சத்திரசிகிச்சை பிரிவும், நவீன வசதிகளுடன் கூடிய சத்திரசிகிச்சை கூடமும் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் விபத்து பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு மற்றும் சத்திர சிகிச்சைப் பிரிவு என்பன அமைக் கப்படவுள்ளன.

இதேபோல் இந்தச்சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் சிகிச்சை கூடங்களுக்கான கட்டடங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளன. அவற்றுக்கான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன .- என்றுள்ளது.(ஐ)

# தேசிய இளைஞர் தைப்பொங்கல் இந்த முறையும் தலைமன்னாரில்

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் ஸ்ரீலங்கா இளைஞர் கழக சம்மேளனத்துடன் இணைந்து நடத்தும் 'தேசிய இளைஞர் தைப்பொங்கல் விழா' 2016 ஆம் ஆண்டைப் போலவே 2017 ஆம் வருடமும் மன்னார் மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது.

தலை மன்னார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இந்த விழாவை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் வலயக்கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் வடமாகாண சபை கல்வி, கலாசார, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. மன்னார் கல்வித் திணைக்களப் பணிப்பாளர், வட மாகாண கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள் உட்படப் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஸ்ரீலங்கா இளைஞர்கழகசம்மேளனத்துடன் இணைந்து உள்ளக நடவடிக்கை, கலாசாரம், வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு வடமாகாண சபையின் கலாசார நடவடிக்கை திணைக்களம் , மன்னார் மாவட்ட செயலகம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இதைக் கொண்டாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிங்களம் மற்றும் முஸ்லிம் இளைஞர்களுக்கு அறிவூட்டுதல், இளமைப் பருவத்தில் அவர்களுக்கிடையில் அன்னியோன்னிய புரிந்துணர்வை ஏற்படுத்தல், இலங்கை இளம் சமுதாயத்துக்கிடையில் சமய ஒற்றுமை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டைஏற்படுத்துதல் ஆகியனவே இதன் நோக்கம்.

இந்த விழா நாடு முழுவதும் உள்ள சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர், யுவதிகள் ஆயிரத்து 500 பேரின் பங்களிப்புடன் கொண்டாடப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-112)

## நாளை

02.01.2017
திங்கட்கிழமை
திதி : சதுர்த்தி பிற்பகல் 2.57 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பிற்பகல் 4.14 வரை
சுபநேரம் : 12.30 – 2.00
இராகுகாலம் : 8.00 – 9.30


## கனகபுரம் சிவபூமி பாடசாலைக்கு மாணவர் அனுமதி


கிளிநொச்சி, ஜன.01

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மணவளர்ச்சி குறைந்த மாணவர்களின் கல்விக்காக சகல நவீன வசதிகளுடன் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட சிவபூமி பாடசாலையில் புதிய மாணவர்கள் அனுமதிக் கப்படுகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைச் சிற்றுண்டி, மதிய உணவு உட்பட இலவச கல்வியும் இப் பாடசாலையில் வழங்கப்பட்டு வருகின்றது. பலரது வேண்டுதலுக்கு அமைய அப் பாடசாலை கடந்த ஏப்ரல் மாதம் திறக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

# அனலைதீவில் தெரிவு செய்யப்பட்ட 25 பேருக்கு நல்லின ஆடுகள்





அனலைதீவில் 25 தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நல்லின ஆடுகள் வழங்கப்பட்டன.

அனலைதீவு ஐயனார் கோவிலடியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண கால்நடை அபி விருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கினார்.

வடக்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சு பின்தங்கிய கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும், போசணை மட்டத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும் நல்லின ஆடுகளை வழங்கும் ''தகர்'' என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தின் ஒரு கட்டமாகவே அனலைதீவு மக்களுக்கும் ஆடுகள் வழங்கப்பட்டன. ஆடுகள் வழங்கப்பட்ட அனைவருக்கும் ஆடுகளின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான கனியுப்புகளைக் கொண்ட கனியுப்புக்கல்லும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், கால்நடை வைத்திய அதிகாரிகள் ஜே.யுட்சுவேன், ச.நர்மஜன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## 'ஞானச்சுடர்' சஞ்சிகை வாசகருக்கான போட்டி

தொண்டைமானாறு சந்தியான் ஆச்சிரம சைவ சமயப் பண்பாட்டுப் பேரவை நூல் வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகை வாசகர்களுக்கான போட்டியை நடத்தவுள்ளது.

கடந்த தை மாதம் தொடக்கம் ஐப்பசி மாதம் வரை வெளியான சஞ்சிகையிலிருந்து 25 வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன. வினாக்களுக்கான விடைகளை சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட வேண்டும்.

போட்டியின் முடிவுத் திகதி எதிர்வரும் 20 ஆம் திகதியாகும். போட்டிக்கான விண்ணப்பங்களை வாசகர் போட்டிக்குழு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். போட்டியின் பெறுபேறுகள் தைமாத 'ஞானச் சுடர்' மலரில் வெளியிடப் படும். பரிசில்கள் 'ஞானச்சுடர்' மாசி மாத வெளியீட்டின் போது வழங்கப்படும். (இ-30)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று வருடாந்த திருவாசக விழா

### நிகழ்வில் பட்டிமன்றம், பண்ணிசை

தொண்டைமானாறு சந்தியான் ஆச்சிரம சைவ சபை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த திருவாசக விழா இன்று முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 9 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் அமுதகலா சுரபி செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்க செல்விகள் தயாளரூபினி குமாரசாமி, தயாளநீதினி குமாரசாமி ஆகியோர் பக்கவாத்தியங்கள் சகிதம் திருவாசகப் பண்ணிசையை நிகழ்த்துவார்கள்.

தொடர்ந்து கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் ''திருவாசகத்துள் கற்றோர் மனதைக் கவர்ந்ததில் விஞ்சி நிற்பது தத்துவ அறிவே! பக்தி உணர்வே!'' எனும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும். கம்பர்மலை பெரியதம்பிரான் கோவில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு திருவாசகப் பேருரை என்பன அடுத்தடுத்து நடைபெறும்.

இன்றைய தினம் இந்து கலாசார அமைச்சரும் யாழ்ப்பாணம், கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தி.மகேஸ்வரனின் ஒன்பதாவது ஆண்டு நிறைவை ஒட்டி வறுமை நிலையில் உள்ள 140 மாணவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் அமைச்சர் மகேஸ்வரனின் நினைவுப் பேருரையைப் புற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் நிகழ்த்துவார். (இ-30-21)







# வடக்கில் வாகனங்கள் அதிகரிப்பால் வருடாந்தம் வரி வருமானம் அதிகரிப்பு

## வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.01

வடமாகாணத்தில் வாகனங்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில் வாகனங்களுக்கான வருமான வரி ஊடாக பெறப்படும் நிதியும் ஆண்டு தோறும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது என்று மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாணத்தில்போருக்கு பின்னர் வாகனங்களின் அதிகரிப்பு நிலைமை தொடர்பாக ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும்தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடமாகாணத்தில் 2013 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 377 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 634 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 328 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றின் ஊடாக 2013 இல் 210.16 மில்லியன் ரூபா நிதியும் 2014 இல் 218.15 மில்லியன் ரூபா நிதியும் 2015 இல் 261.67 மில்லியன் ரூபா நிதியும் வருமானமாகப் பெறப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரையான தகவல்களின் அடிப்படையில் மாகாணத்தில் ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 718 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றின் ஊடாக 240.09 மில்லியன் ரூபா நிதி பெறப்பட்டுள்ளது.

மொத்தமாக 2016 ஆம் ஆண்டு 275 மில்லியன் ரூபா வருமானமாகப் பெறப் படும். இதே போல் மாகாணத்தில் 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் வரையான பதிவுகளின் பிரகாரம் ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 477 மோட்டார் சைக்கிள்கள் காணப்படுகின்றன. அதே போல் 14 ஆயிரத்து 949 ஓட்டோக்களும் காணப்படுகின்றன. இந்த நிலையில் வாகனங்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

இதேவேளை, 2017 ஆம் ஆண்டு வாகன வருமானவரி அனுமதிப் பத்திரத்தை வட மாகாணத்தின் எந்தப் பகுதியில் இருந்தும் ஒன்லைன் ஊடாகக் கொடுப்பனவு செய்து பெற்றுக் கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யு.என்.டி.பி. நிதி உதவியுடன் ஐ.சி.ரி.ஏ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மோட்டார் போக்குவரத்துக் கான நியதிச் சட்டம் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள்



மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டதன்பின்னர் வாகன வருமான வரிக் கட்டணத்தை மக்களுக்கு நலனைக் கருத்திற் கொண்டு மாற்றியமைக்கவும் நடவடிக்கை எடுக்கப் படும்.-என்றார். (ஐ)

## நந்திக் கடல் பகுதியில் தீ மூட்டும் விசமிகள்

முல்லைத்தீவு, ஜன.01

முள்ளிவாய்க்கால் மேற்கு நந்திக்கடல் பகுதியில் இரவு நேரங்களில் இனம் தெரியாத நபர்களால் குப்பைகளுக்குத் தீவைக்கப்படுவதாகதெரிவிக்கப் படுகின்றது.

அந்தப் பகுதியில் வெடி குண்டுகள் இருப்பதன் காரணமாக இவ்வாறு தீ வைக்கப் படுவதனால், அவை வெடிக்கக் கூடும் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

நந்திக் கடல் பகுதி யுத்தப் பிரதேச மாக அதற்கான ஆதாரங்களுடன்இருக்கின்றமையால், யுத்த அடையாளங்களை அழிக்கும் நோக்கில் இவ்வாறு தீ வைக்கப்படுகின்றதா எனவும் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் அண்மையில் வீட்டு முற்றத்தில் குப்பைகளுக்கு தீ மூட்டிய போது அதிலிருந்த வெடிபொருள்வெடித்தமையின் காரணமாக ஒருவர் காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தினசரி ராசி பலன் 01.01.2017

சுபநேரம் : காலை : 6.30 - 7.30
மாலை : 3.00-4.00
ராகு காலம் : 04.30 - 06.00
குளிகன் : 03.00 - 4.30
எமகண்டம் :12.00 - 1.30

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சம நோக்கு நாள்

**மேஷம்:** நன்மை - நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் கிடைக்கும்.

**ரிஷபம்:** ஆதாயம் -எதிர்பாராதவர்களின் வருகையால் ஆதாயம் கூடும் நன்னாள்.

**மிதுனம்:** அசதி -உழைப்பால் ஏற்பட்ட களைப்பு தோன்றும்.

**கடகம்:** சுகம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் நிதானத்துடன் செயல்பட்டால் மனதில் மகிழ்ச்சி நிறையும்.

**சிம்மம்:** தனம் - திடீர் பொருள் சேர்க்கை ஏற்படும் நன்னாள்.

**கன்னி:** பக்தி- தெய்வ வழிபாடுகள் முயற்சிகள் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்:** பாசம்- அன்பானவர்களின் ஆதரவும் கிடைக்கும்.

**விருச்சிகம்:** அன்பு- நீங்கள் அனைவரிடத்திலும் அனைவரும் உங்களிடமும் அன்பு காட்டும் நாள்.

**தனுசு:** அனுகூலம்- அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**மகரம்:** வரவு- இன்று எதிர்பாராத வகையில் வரவுகள் வரும்.

**கும்பம்:** எடுக்கும் காரியங்களில் சிறப்புக்கள் குறையும். ஆதலால் கவனத்துடன் இருக்க வேண்டிய நாள்.

**மீனம்:** உற்சாகம்- அனைத்து காரியத்திலும் மிகுந்த ஆர்வத்துடன் செயல்படும் நாள்.

## அரிய வகை சுற்றுலா பறவைகள் இலங்கைக்குப் படையெடுப்பு

கொழும்பு, ஜன.01

வருடத்தின் இறுதி மாதங்களில் இலங்கையில் அரிய வகை சுற்றுலா பறவைகளின் வருகை அதிகரித்துக் காணப்பட்டது.

ரோஸி ஸ்டார்லிங் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பறவை இனம், அம்பலாந்தோட்டை, தெஹிகாலந்த, தம்சிறி கிராம பகுதிகளில் நிறைந்து காணப்படுகின்றது.

இந்தப் பறவை இலங்கைக்கு இடம்பெயர்ந்து வரும் பறவை இனமாகும். தெற்கு இந்தியாவில் இருந்து நவம்பர், டிசெம்பர் மாதங்களில் இலங்கைக்கு வருகைதந்து ஜனவரி மாதத்தில் இருந்து பெப்ரவரி மாதம் வரை இலங்கையில் வசிக்கும் ஒரு பறவை இனமாக இது கருதப்படுகின்றது. அத்துடன் இந்த பறவை இனம் பொதுவாக குளிரான காலநிலையில் மாத்திரமே இலங்கைக்குப் படையெடுக்கும்.

இளஞ்சிவப்பு நிறம் கொண்டுள்ள இந்த பறவை, குளிர்காலத்தின் போது கறுப்பு மற்றும் சாம்பல் நிறத்திலான உடலுக்கு மாற்றமடையும்.

இந்தப் பறவைகளின் இனப்பெருக்கம் இலங்கையில் இருந்து செல்லும் காலப் பகுதியில் அல்லது இலங்கைக்கு வருகை தந்தவுடன் இடம்பெறும். எனினும், இலங்கையில் அவை முட்டையிடாது என்று குறிப்பிடப்படுகின்றது. இந்தப் பறவை மைனா இனத்தைச்சார்ந்ததாகும். உருவமும் மைனாவை போன்றே காணப்படு கின்றது. அத்துடன் ஒரு சில வருடங்கள் 10 ஆயிரம் கணக்கிலான பறவைகள் இலங்கைக்கு வருகை தருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## அரசில் இருந்து விலகும் அமைச்சர்கள், எம்.பிக்கள்!

கொழும்பு, ஜன.01

அரசில் அங்கம் வகிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த அமைச்சர்கள் உட்பட 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலக தயாராகி வருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைப்பு, இந்தியாவுடன் செய்து கொள்ளவிருக்கும் ‘எட்கா’ உடன்படிக்கை, அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் காணிகளை சீனாவுக்கு விற்பனை செய்யும் தீர்மானம் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து, இவர்கள் அரசில் இருந்து விலக தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு பிறகு இவர்கள் விலகுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலியைச் சேர்ந்த இருவர், கம்பஹாவைச் சேர்ந்தஇருவர், குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, மொனராகலை, மாத்தளை, பதுளை ஆகிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்துவோரே இவ்வாறு விலகவுள்ளனர். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த இரண்டு முக்கிய அமைச்சர்கள் இந்த அரசியல் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றனர்என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## காணாமற்போன சிறுமி மீட்பு

நாச்சிக்குடா, ஜன.01

நாச்சிக்குடா பகுதியில் காணாமற்போன 11 வயதுடைய சிறுமி ஒருவர் நேற்று சனிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளார் என்று நாச்சிக்குடாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிறுமி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் முதல் காணாமல் போயிருந்தார். இந்த நிலையில் நாச்சிக்குடாப் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்த நிலையில் நொச்சிமுனைக் குளப் பகுதியில் வைத்துச் சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டு வாசலில் இருந்த பிரஸ்தாப சிறுமி திடீரெனக் காணாமல் போயிருந்தார். உறவினர்கள் எங்கு தேடியும் காணாத நிலையில், நாச்சிக்குடாப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்தே சிறுமி மீட்கப்பட்டார். அந்தச் சிறுமி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மதுபானம் விற்ற பெண்ணுக்கு அபராதம்!

கிளிநொச்சி, ஜன.01

கிளிநொச்சியில் அனுமதிப்பத்திரமின்றி அரச மதுபான போத்தல்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்ணுக்குபத்தாயிரம்ரூபாதண்டப்பணம் செலுத்துமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட பிரஸ்தாப பெண் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இதனை அடுத்தே இவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. (ச)



# பெண்களின் கண்களுக்கு...



பெண்களின் அழகில் முக்கிய இடம் வகிப்பது காந்தமாக இழுக்கும் அவர்கள் கண்கள்தான். கண்களைப் பாடாத கவிகளும் உண்டோ? கண்கள் பளபளப்பாக மின்னினால் 'என்ன சந்தோஷமா இருக்கிறாய் போலிருக்கு' என்போம். அதுவே சோர்ந்து கிடந்தால் 'உடம்புக்கு சரியில்லையா?' என்போம். இப்படி உடலின் ஆரோக்கியத்தை படம் பிடித்துக் காட்டும் பிரதான கண்ணாடியாகவும் நம் கண்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பதைப் பற்றி பார்க்கலாம்.

கண்களுக்கு அதிக சோர்வு கொடுப்பது, கண்ணைக் கூசச் செய்யும் ஒளியை நேரடியாகப் பார்ப்பது, பறந்து வரும் தூசு, தும்புகள் மற்றும் அதிகப்படியான புகை என்பனதான்.

எழுதுவது, படிப்பது, தைப்பது போன்ற கண்களுக்கு அதிக வேலை கொடுக்கும் வேலைகளைச் செய்யும் முன், எதிரே இருக்கும் பொருள்களைத் தெளிவாகப் பார்க்கும் அளவுக்கு ஒளி இருக்கிறதா என்பதைப் பார்த்துக் கொள்ளவும். அப்படியிருந்தால் மட்டுமே வேலையைத் தொடங்குங்கள்.

வெயில் காலத்தின் சுட்டெரிக்கும் ஒளிக் கீற்றுகள் கண்களுக்கு மிகுந்த பாதிப்பைக் கொடுக்கும். அந்தச் சமயத்தில் வெளியில் செல்வதை தவிர்த்துவிடுங்கள். அல்லது நல்ல தரமான கறுப்புக் கண்ணாடி அணிந்து செல்லுங்கள்.

கண் சோர்வு மற்றும் எரிச்சலைப் போக்க கண்களை மூடி அமைதியாக ஓய்வெடுப்பதைவிட சிறந்த மருந்து கிடையாது.

சோர்வைப் போக்க மற்றுமோர் எளிய வழி உண்டு. முழங்கைகளை மேஜையில் ஊன்றி வாட்டமாக வைத்துக் கொள்ளுங்கள். இப்போது கைகளை குழிவாக கப் வடிவில் செய்து இரண்டு கண்களையும் மூடிக் கொள்ளுங்கள். தலையின் மொத்த எடையும் கைகளில் விழும்படியாக தலையைக் குனிந்து முன்னுக்கு கொண்டு வாருங்கள். இப்படிச் செய்வதால் கழுத்துத் தசைகளுக்கும் ஓய்வு கிடைக்கும். குறைந்தது பத்து நிமிடங்களுக்கு இதே நிலையில் இருங்கள். தினசரி இதுபோல பலமுறை செய்யலாம்.

கீழ்ப்பாதி உள்ளங் கைகளால் கண்களை லேசாக அழுத்த வேண்டும். முழுமையான இருட்டு வரும்வரை இதுபோல தொடர்ந்து செய்ய வேண்டும். கண்களுக்கு ஓய்வு கிடைக்கும்.

ஊட்டங்கள் நிறைந்த சீரான உணவுப் பழக்கமே கண்களின் ஆரோக்கியத்துக்கான மூலப் பொருளாகும். விட்டமின் ஏ கண்ணுக்கான பிரத்தியேக விட்டமின். கரட், பசலைக் கீரை, வெண்ணெய், ஆட்டு ஈரல், மீன், மீன் எண்ணெய், பாலாடைக் கட்டி ஆகியவற்றில் இது அதிகமுள்ளது.

தினமும் குறைந்தது எட்டு கிளாஸ் தண்ணீர் குடித்து வந்தால் கண்களின் பளபளப்புத் தன்மை குறையாமல் இருக்கும்.

# பெண்கள் பற்றிய பொன்மொழிகள்

★ஒரு விஷயத்தைச் சொல்லி முடிக்க ஆண்களைக் கேளுங்கள். செய்து முடிக்க பெண்களைக் கேளுங்கள்.
**- மார்கரெட் தட்சர்**

★கையில் புத்தகத்துடன் இருக்கும்-கல்வி கற்கும் பெண்களைக் கண்டு அடக்கு முறையாளர்கள் பெரும் பயம் கொள்கிறார்கள்.
**- மலாலா**

★ஒரு நாட்டில் பெண்கள் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களோ அவ்வளவு தூரமே அந்நாடு முன்னேறும்.
**- ஜவஹர்லால் நேரு**

★அறிவின் தாயகமாய், அருள் நிறைந்த உள்ளமாய் இருப்பவள் பெண்.
**- ஜெயகாந்தன்**

★பெண்ணுரிமை இல்லாத நாடு காற்றில்லாத வீடு.
**- லெனின்**

★அவதூறு நல்ல பெண்ணின் வீட்டு வாசலில் பலமிழந்து மாய்ந்து விடுகிறது.
**-ஹீஸ்**

★பெண்ணின் மடியில் இறையன்பு வளர்கிறது.
**- இக்பால்**


★வாழ்க்கை எனும் ஆற்றை, கடலைக் கடப்பதற்கு பெண் என்ற படகோ, கப்பலோ அவசியம் தேவை.
**- கண்டேகர்**

★ஒவ்வொரு பெண்ணின் வாழ்வும் அன்பின் சரித்திரம்.
**- துவிஜேந்திரலால்**

★ஆணை அடக்கிப் பண்படுத்தவே ஆண்டவன் பெண் பிறவியைப் படைத்திருக்கிறான்.
**- வால்டேர்**

★சகிப்புத் தன்மையில் வலிமை மிகுந்தவள் பெண்.
**- காந்தியடிகள்**

# ஒரு புரியாத புதிர்...!



பெண் அன்பில் ஒரு தாய்
பெண் அழகில் ஒரு தேவதை
பெண் அறிவில் ஒரு மந்திரி
பெண் ஆதரவில் ஒரு உறவு
பெண் வெறுப்பில் ஒரு நெருப்பு
பெண் வெற்றிக்கு ஒரு மாலை
பெண் தோல்விக்கு ஒரு பள்ளம்
பெண் நட்பில் ஒரு நேர்மை
பெண் கண்டிப்பில் ஒரு ஆசிரியர்
இருந்தாலும் பெண் ஒரு புரியாத புதிர்



# பெண்களின் நிலை என்ன?

ஆணாதிக்க தன்மை மேலோங்கியுள்ள நிலையில் பெண்களின் கருத்துக்கள் எந்தளவுக்கு உள்வாங்கப்படுகின்றன என்பதும் சமூக மட்டத்தில் அவர்களது தேவைகள் எந்தளவுக்கு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெண்கள் இன்று பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருவதை எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. அரசியல், சமூகம், பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற பல்வேறு மட்டங்களில் பெண்கள் இன்னும் குறிப்பிடத்தக்க எழுச்சி காணவில்லை என்பது கசப்பான உண்மைதான்.

எனினும் இந்த இலக்குகள் எந்தளவுக்கு அடையப்பட்டிருக்கின்றன என்பதில் ஐயப்பாடுகள் வலுப்பெற்றுள்ளன. இந்த வகையில் அரசியல் துறையை எடுத்துக் கொண்டால் பெண்களின் குடும்பக் கட்டமைப்பு பெண்கள் அரசியல் துறையில் நுழைவதைத் தடுக்கும் பிரதான காரணியாக விளங்குகின்றது.

பெண்கள் அமைதியானவர்கள், சமூக செயற்பாடுகளில் ஆண்களே பிரதான சூத்திரதாரிகளாக விளங்க வேண்டும் என்ற பாரம்பரிய சமுதாய கோட்பாடுகள் பெண்களை அரசியல் துறையில் நுழைய விடாது தடுக்கும் பிரதான சக்தியாக இனங் காணப்படுகின்றது.

பிரித்தானியாவில் பங்ஹேர்ஸ்ட் அன்னையும் புதல்வியரும், அமெரிக்காவில் எலிசபெத் சென்ட்டன், சூசன் அந்தனி மற்றும் இலங்கையில் அக்னஸ் டீ சில்வா, டெய்சி பண்டாரநாயக்க, நேசம் சரவணமுத்து போன்ற பெண்களும் தமது குடும்பங்களில் இருந்தும் சமூகத்தில் இருந்தும் எழுந்த எதிர்ப்புக்களை பொருட்படுத்தாது போராட்டம் மேற்கொண்டனர். காரணம், பெண்களுக்கு சமமானதும் சுயாதீனமானதுமான இருப்பொன்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கேயாகும் என்பதனை நாம் மறந்து விடலாகாது.

பெண்கள் போராடி சர்வஜன வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளபோதும் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்கதாக இல்லை. 1931 ஆம் ஆண்டு சட்ட சபையில் நாடாளுமன்றத்தில் பெண்கள் ஐந்து சதவீதத்தினர் மட்டுமே பிரதிநிதித்துவம் வகித்துள்ளனர். 1994 இலும் இது ஐந்து சத வீதமாகவே இருந்துள்ளதோடு 2003 கால கட்டத்தில் இது நான்கு சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

பெண்கள் எவ்வளவுதான் பலம் உள்ளவர்களாக இருப்பினும் தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளுக்குள் அவர்கள் நுழைவதற்கான இடைவெளி மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

# இலங்கையில் பாரதி 07



● முருகபூபதி – ஆஸ்திரேலியா

'தமிழ் இதிகாசங்கள் பற்றியும் எமது இலக்கிய பாரம்பரியம் பற்றியும் பாரதிக்குத் தெரியாது. இவ்விஷயத்தை பாரதியின் தந்தையாரே பாரதிதாசனிடத்தில் கூறியிருக்கிறார். பாரதிக்கு மகாபாரதமும் இராமாயணமுமே அதிகம் தெரிந்திருக்கிறது.'

'தமிழனான கட்டபொம்மன் பற்றியே பாரதி பாடவில்லை. பாஞ்சாலியைப்பற்றியும் கண்ணனைப்பற்றியுமே பாடியுள்ளார்.'

– இவ்வாறு, பாரதி நூற்றாண்டு காலத்தில் இலங்கை வந்திருந்த தமிழக தமிழரசன் என்ற திராவிடர் கழகப் பிரமுகர் பாரதி குறித்துச் சொன்ன அவதூறுகளுடன் கடந்த அங்கத்தை நிறைவுசெய்திருந்தோம்.

பொதுவாகவே திராவிடர் கழகத்தினர் தொடர்ச்சியாக பாரதியை சாதி ரீதியான கண்ணோட்டத்துடன்தான் அணுகி வந்திருக்கிறார்கள். பெரியார் ஈ.வே.ரா தொடங்கிய இக்கழகத்திலிருந்து பிறந்த அமைப்புகள் இன்று எந்தத் திசையில் செல்கின்றன என்பது பரகசியம்.



பாரதிதாசன்

திராவிடர் கழகம் ஈன்ற குட்டிகளாக தி.மு.க. – அ.தி.மு.க, ம.தி.மு.க. பின்னாளில் அ.இ.அ.தி.மு.க. என்றும் ஜெயா அணி, ஜானகி அணி என்றும் பிளவுபட்டு, ஜானகியின் மறைவுடன் அனைத்து அதிகாரங்களும் ஜெயாகையில் வந்து, தற்போது அவரும் மறைந்த பின்னர் அம்மா அ.தி.மு.க. உருவானாலும் ஆச்சரியம் இல்லை என்று சொல்லும் நிலைக்கு அன்றைய திராவிடர் கழகம் பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது.

இது இவ்விதமிருக்க, தேர்தல்களில் போட்டியிடாத திராவிடர் கழகம் எத்தனை கூறுகளாக பிளவடைந்திருப்பதும் தெரிந்த செய்தியே.

இவ்வாறு தத்தமக்குள்ளேயே முரண்படுபவர்களும் முரண்டு பிடிப்பவர்களும் நிறைந்துள்ள இக்கழகத்தைச் சேர்ந்தவர்கள், பாரதி குறித்து முன்வைக்கும் தீர்மானங்களை நாம் இலகுவாக அலட்சியம் செய்யலாம்.

தொடர்ச்சியாக பொய்களையே உரைத்துவந்தால் அந்தப் பொய்களே இறுதியில் உண்மையாகிவிடும் சமுதாயத்தில் நாம் வாழ்கின்றோம்.

அதனால் பொய்களை அம்பலப்படுத்தி தெளிவை ஏற்படுத்தவேண்டியது பாரதி இயல் ஆய்வாளர்களின் கடமை.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் எனச் சொன்னவர் பாரதியார்.


தமிழரசன் மட்டுமல்ல, மதிமாறன் என்பவர் எழுதிய 'பாரதி'ய ஜனதா பார்ட்டி என்ற நூலிலும் பாரதி தொடர்பான அவதூறுகளையே காணமுடிகிறது.

வீரகேசரியில் தமிழரசன் உரைத்துள்ள இரண்டு பெரிய பொய்களிலிருந்து வாசகர்களுக்கு பல விடயங்கள் தெளிவாகிவிடும்.

பாரதியின் தந்தையார் சின்னச்சாமி அய்யர், பாரதிதாசனை என்றைக்காவது சந்தித்திருக்கிறாரா...?

வீரபாண்டிய கட்டபொம்மன் வேடம் புனைந்த சிவாஜி கணேசன், சக்தி கிருஷ்ணசாமியின் அனல் கக்கும் வசனத்தில், 'வட்டி, வரி , கிஸ்தி, யாரைக்கேட்கிறாய் வரி... எங்களோடு வயலுக்கு வந்தாயா.. ஏற்றம் இறைத்தாயா, கஞ்சி கலயம் சுமந்தாயா, மஞ்சள் அரைத்துக்கொடுத்தாயா...? நீ... மாமனா மச்சானா...?' என்றெல்லாம் திரைப்படத்தில் பேசுவாரே.... அதனைவைத்து வீரபாண்டிய கட்டபொம்மன் தமிழ் மன்னன் என்ற முடிவுக்கு வந்துவிட முடியுமா...?

கட்டபொம்மன் தெலுங்கு மொழிபேசுபவன். அவனது தாய்மொழி தெலுங்கு என்பதை சுலபமாக மறந்துள்ள தமிழக தமிழரசன், பாரதியார் இந்தத்தமிழ் மன்னன் குறித்து பாடவில்லை என்றும் குற்றம் சுமத்தியுள்ளார்.




பாரதி இந்திய மொழிகள் குறித்து மிகவும் அழகாகவும் பொருளாதார கண்ணோட்டத்திலும் பாடியிருப்பவர்.

தமிழரசன் சொன்ன கருத்துகளுக்கு எதிர்வினையாற்றி, அடுத்து வந்த வீரகேசரி இதழ்களில், பேராசிரியர் அ.வி. மயில்வாகனம், பொ. சங்கரப்பிள்ளை, தமிழோவியன் ஆகியோர் எழுதியிருந்தனர்.

'யாழ்ப்பாணத்து அல்வாயூர் அருளம்பலச்சாமியே தன் குருவெனப்பாடியுள்ளார் பாரதியார். இவர்கள் புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் இச்சந்திப்பு நிகழ்ந்தது. இது 1912 க்கும் 1920 க்கும் இடையில் நிகழ்ந்[illegible]தற்கு முன்னர் திலகர் பாரதியாரின் நன்மதிப்பிற்குரியவராக இருந்திருக்கலாம். ஆனால், பாரதியாரின் அரசியல் குருவாகவோ, இலக்கிய வழியில் குருவாகவோ, ஆன்மீகக் குருவாகவோ இருந்தார் என்பதை ஒப்புக்கொள்ள இடமில்லை.' எனத் தெரிவித்திருந்த மயில்வாகனம், 'பாரதிதாசனுக்கும் நன்றி மறவாத தமிழ் சமூகம் விழா எடுக்கும். அதற்கு இன்னும் எவ்வளவோ காலம் இருக்கின்றது. இப்போது பாரதியாருக்குவிழா எடுக்கும் காலத்தில் பின்வரும் அவருடைய பாடல்களைச் சிந்தனை செய்து, அவர் இவ்விழாவுக்கு எத்துணை அருகதை உடையவர் என்பதனைத் தீர்மானிப்போமாக' என குறிப்பிட்டு, பாரதியின் சில கவிதைகளை மேற்கோள் காட்டியிருந்தார்.

செந்தமிழ்நாடு, விடுதலை, சுதந்திரப்பள்ளு, பாப்பாப் பாட்டு என்று தலைப்புகளிட்டு உதாரணமாகச் சுட்டியிருந்தார்.

தமிழரசனுக்கு எதிர்வினையாற்றிய தமிழோவியன், ''பாரதி தன் வகுப்பான பார்ப்பானர்களுக்குப் பரிந்தே பாடினான் என்றால், ஏன் அவன், தான் பூண்டிருந்த பூணூலை அறுத்தெறிந்தான்....? 'வேதியராயினும் ஒன்றே – அன்றில் வேறு குலத்தினராயினும் ஒன்றே' என்று ஏக முழக்கமிட்டான்.' எனக்கேள்வி எழுப்பியதுடன், பாரதிதாசனும் பாரதியின் தந்தை சின்னச்சாமி அய்யரும் என்றைக்காவது சந்தித்துப் பேசியிருப்பார்களா...? – என்ற வினாவையும் தொடுத்திருந்தார்.

தமிழோவியன் சொல்லும் பதில் மனங்கொள்ளத்தக்கது. '1911 ஆம் ஆண்டிலே பாரதி புதுவையில் பாரதிதாசன் அவர்களைக் கண்டார் என்று ஆனந்த விகடன் பொன்விழா மலரில் காணப்படுகிறது. அப்போது பாரதிக்கு 29 வயது. அவர் ஐந்து வயதில் தாயையும் ( 15 ஆம் அகவையில் மணம் பூண்டு) பதினாறாம் வயதில் தந்தையையும் இழந்தார் என அவரின் சரிதம் பேசுகிறது. அதாவது பாரதியின் தந்தையார் மறைந்து சுமார் பதின்மூன்று ஆண்டுகளின் பின்னரே பாரதி, பாரதிதாசனைச் சந்தித்துள்ளார். இந்தச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு தமிழரசனின் செவ்வியை (பேட்டி) ஆராய்ந்தால், பாரதியின் தந்தையாரை பாரதிதாசன் பார்த்திருக்கவே முடியாது என்று முடிவுகட்ட வேண்டும்.'

திராவிடர் கழகத்தினர் நீண்டகாலமாகவே பாரதி பற்றிய கட்டுக்கதைகளைப் பரப்பி அவதூறு பொழிந்து வந்திருக்கின்றனர். பாரதியை தாழ்த்தி, அவரது தாசன் சுப்புரத்தினம் என்ற இயற்பெயர் கொண்ட பாரதிதாசனையே உயர்த்திப் பேசும் திராவிடர் கழகத்தினர் பல வரலாற்று உண்மைகளை மறந்துவிடுகின்றனர்.

பாரதி காலத்தில் வாழ்ந்து பாரதியின் பக்தனாக தன்னை வரித்துக்கொண்ட பாரதிதாசன், பாரதி பற்றிக்கொண்டிருந்த கருத்துக்களுக்கு பின்வரும் தகவல் குறிப்பை பதச்சோறாக இங்கு தருகின்றோம்.

6-9-1949 இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் தலைமையேற்று பாரதிதாசன்



ஆற்றிய உரை, அறிஞர் அண்ணா ஆசிரியராக இருந்து வெளியிட்ட 'மாலைமணி' நாளேட்டில் 8-9-1949 ஆம் திகதியன்று பிரசுரமாகியிருந்தது. அதிலிருந்து சில பகுதிகளை பொன். கு.கோதண்டபாணி என்பவர் தமிழ்நாடு அரசின் உத்தியோகபூர்வ இதழ் தமிழரசு பத்திரிகையில் 16-12-1982 ஆம் திகதி தொகுத்து எழுதியிருந்தார். (இந்த ஆக்கம் பாரதி நூற்றாண்டு காலத்தில் வெளியாகியமை குறிப்பிடத்தகுந்தது)

அதிலிருந்து சில பகுதிகளைத்தருகின்றோம்.

*'பாரதியார் 1906 இல்தான் புதுச்சேரிக்கு வந்தார். இன்னும் வ.வெ.சு. ஐயர், திருவல்லிக்கேணி சீனுவாச ஆச்சாரியார், அரவிந்தகோஷ் முதலியோரும் வந்தனர். இவர்களுக்கெல்லாம் சுதேசிகள் என்று பாண்டியில் (பாண்டிச்சேரி) பெயர். அரவிந்தர் – வ.ரா. முதலியோர் ஒரு குழு. வ.வெ.சு. ஐயர் முதலியோர் ஒரு குழு. பாரதி' நான் முதலியோர் ஒரு குழு. சீனுவாச ஆச்சாரியார் எதிலும் இருப்பார்.*

*மூன்று குழுக்களும் வெவ்வேறாகவே இருந்தன. அரவிந்தர் முதலியோர் தமிழென்று ஒரு மொழி இருப்பதையோ அதைப்பற்றி நினைப்பதையோ அறியாதார்.*

*வ.வெ.சு. ஐயர், வெர்ணாஸ்ரமம் உண்டு என்றால் தமிழைப் போற்றத் தயார். பாரதியார் தமிழிலேயே வாழ்ந்தார். அன்றைய நிலை அப்படி. பாரதியார் பார்ப்பானராக இருந்தாலும் தமிழைப்போற்றினார். பாரதியார் முதலில் பாட ஆரம்பித்தது காவடிச் சிந்துதான். புரியும்படி காவடிச்சிந்து அமைவதே காரணம்.*

*அரவிந்தர் ஆங்கிலத்தில் ASIA பத்திரிகை ஆரம்பித்தார். ஆனால், பாரதியாரோ தமிழில் இந்தியா பத்திரிகையை ஆரம்பித்தார். தமிழை பாரதி இப்படிப்போற்றினார். பாரதியார் தமிழ்ப் பற்றுடையவர். தமிழுக்கு உயிர் உண்டாக்கினார். எல்லோருக்கும் புரியும்படி எழுதினார். பாடினார். அதற்குப்பிறகுதான் அரவிந்த கோசுக்கு தமிழ் என்று ஒன்று இருப்பதாகப்புரிந்தது. வ.ரா. முதலானோர் தமிழ்ப்புத்தகங்களைத் தேடிப்படித்தனர்.*

*பாரதியாருடைய முக்கிய கொள்கை ஜாதி ஒழிப்பு. அதுதான் அவரிடம் இருந்த சிறந்த கொள்கை. குறிப்பிட்டுப்பேச வேண்டிய கொள்கை.*

*பாரதியார் பார்ப்பானர். தெரிந்தும் சொன்னார் – 'ஜாதிகள் இல்லையடி பாப்பா.' என்று. தமிழில் நல்ல எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படி இதைச் சொன்னார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்தோஷம் கூட.*

*நான் அப்பொழுது பாண்டிச்சேரியில் வாத்தியார் வேலையில் இருந்தேன். அப்போதே சில பத்திரிகைகளில் கட்டுரைகளும் பாட்டுக்களும் எழுதி அனுப்புவது வழக்கம். அப்போது நான் உத்தியோகத்தில் இருந்துகொண்டு இக்காரியம் செய்வது, உத்தியோகத்தருக்குத் தொல்லை தரும். யாராவது செய்வார்கள் என்று கருதி நான் ஒரு புனைபெயர் வைத்துக்கொள்ள விரும்பினேன். அப்போது என் கண்முன்னே, 'சூத்திரனுக்கு ஒரு நீதி, தண்டச்சோற்றுப்பார்ப்புக்கு ஒரு நீதி' என்று கேட்ட பாரதியார் பார்ப்பனராய் இருந்தும் பயப்படாது, தீமை வருமென்று தெரிந்திருந்தும் திகைக்காது, தமிழில் புரியும்படி சொல்லிய பாரதியார்தான் நின்றார்.*

*உடனே பாரதிதாசன் என்று*





*புனைபெயர் வைத்துக்கொண்டேன். நான் அவருக்கு, அந்தப் புண்ணியவானுக்கு தன் குலத்தார் எதிர்ப்பையும் பொருட்படுத்தாத புண்ணியவான் பாரதிக்கு தாசனாக இருப்பதில் ஒன்றும் தவறில்லை என்று கருதுகிறேன்.*

*தமிழில் புதுமுறையில் மக்களுக்குப் புரியும்படி நூல் எழுதியவர் பாரதியார்தான். அதற்கு முன், புலவர்கள் ஒரே பொருள் பற்றி பல நூல்கள் ஒரே முறையில் எழுதுவார்கள்.*

*அக்காலத்தில் தமிழைப் பற்றி மக்கள் மிகக்கேவலமாக நினைத்தனர். ஒருவர் ஒன்று கூறிவிட்டால், அதை மறுப்பது கூடாது. புதிய துறையில் பாரதியை பின்பற்றுங்கள். பாரதியார் சுதேசமித்திரனுக்கு பாண்டியிலிருந்து ஒருநாள் கவிதையும் ஒருநாள் கட்டுரையும் எழுதுவார். திடீரென்று அவர்கள் கவிதை வேண்டாம், கட்டுரையே போதும் என்பார்கள்.*

(23 ஆம் பக்கம் பார்க்க...)



# சூரியசக்தியை கொள்ளையடிக்கும் வேற்றுக் கிரகவாசிகள்!

சூரியனைச் சுற்றி அடையாளம் காணப்படாத பொருள் ஒன்றின் ஊடாக சூரிய சக்தியை, வேற்றுக் கிரகவாசிகள் கொள்ளையடிக்கின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஐரோப்பிய விண்வெளி கண்காணிப்பு மையம் மற்றும் அமெரிக்காவின் நாசா நிறுவனம் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் இது உறுதியாகி உள்ளதாக, இலங்கை வானியல் உயிரியல் தொடர்பிலான ஆராய்ச்சியாளர் கீர்த்தி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

நாசா நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பான தகவல் அண்மையில் வெளியிடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

சூரிய மண்டலத்துக்கு அருகிலுள்ள மர்மப் பொருளின் செயற்பாடு மிகவும் அற்புதமான நிகழ்வொன்றாகும் என்று ஐரோப்பிய விண்வெளி கண்காணிப்பு மையம் மற்றும் அமெரிக்காவின் நாசா நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாக கீர்த்தி விக்கிரமரத்ன குறிப்பிட்டுள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் இந்த வேற்றுக் கிரகவாசிகளின் பறக்கும் தட்டு, சூரிய சக்தியை இழுத்துக் கொள்ளும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1960ஆம் ஆண்டில் இயற்பியல் விஞ்ஞானி பரிமன் டய்சன் சமர்ப்பித்த கருத்துக்கு அமைய சூரியனைச் சுற்றி பெரிய செயற்கைக்கோள் அமைப்பொன்றை நிர்மாணித்து அதன் ஊடாக பெரிய மூலப்பொருளால் சூரிய சக்தியை உறிஞ்சுவதற்காக வேற்றுக்கிரகவாசிகள் செயற்படுகின்றனர் என்று வெளியிட்ட கருத்து தற்போது உறுதியாகியுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய சூரிய சக்தியை பூமியில் வாழ்பவர்கள் மாத்திரம் இன்றி வேற்றுக் கிரகவாசிகளும் தொழில்நுட்ப முறை யைப் பயன்படுத்தி அதன் நன்மையை பெற்றுக் கொள்வதாக தெரிய வந்துள்ளதாக ஆராய்ச்சியாளர் கீர்த்தி விக்கிரமரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.



# ஆஸியில் வறண்ட மலைப்பகுதியில் நூற்றுக்கணக்கான நீர்வீழ்ச்சிகள்

ஆஸ்திரேலியாவின் மத்திய பகுதியில் மிகவும் வறண்ட பிரதேசமான உலுரு மலையில் நூற்றுக்கணக்கான நீர் வீழ்ச்சிகள் ஒவ்வொரு வருடமும் உருவாகி வருகின்றன.


இந்த நிலையில் வருடாந்தம் சராசரியாக 22 சென்றி மீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கும். ஆனால் இந்த வருடம் கிறிஸ்மஸ் தினத்தன்று 23 சென்றி மீற்றர் மழை வீழ்ச்சி கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.


எனவே, இது வழமைக்கு மாறாக இடம் பெற்றுள்ளமையால் சாதனையாக பதிவாகியுள்ளது.

பிரதேசத்தைக் கடந்து சென்ற புயல் காற்றுக்குப் பின்னர் திடீரென மலையில் பெரியளவிலான தொடர் நீர் வீழ்ச்சிகள் உருவாகின்ற நிலையில் இந்த முறை பல மணிநேரம் அவற்றில் நீர் வழிந்தோடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலுரு மலையில் நடைபெற்ற இந்த சம்பவம் தொடர்பிலான புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

மேலும், இந்த மாற்றம் இடம்பெற்ற போது அங்குள்ள வெப்பநிலை 36 பாகை செல்சியஸாக இருந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.உலுரு மலையில் ஏற்படும் இந்த மாற்றத்தை அவதானிப்பதற்காக வருடாந்தம் 5 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சஹாரா பாலைவனத்தில் அண்மையில் ஏற்பட்ட பனிப் பொழிவின் பின்னர் நடை பெற்றுள்ள இந்த அதிசய சம்பவம் உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# பூமியை நோக்கிவரும் விண்கற்களால் மெகா சுனாமி தாக்கும் அபாயம்

பூமியை இலக்கு வைத்து 100 மீற்றர் அளவிலான சில பெரிய விண்கற்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று நாசா நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

100 மீற்றர் அளவிலான விண்கற்கள் பூமியில் மோதினால் பெரியளவிலான உயிர் ஆபத்துக்கள் ஏற்படக் கூடும் என்று விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அவ்வாறான ஒரு விண்கல் கடலில் விழுந்தால் எதிர்பார்க்க முடியாத அளவு பெரிய சுனாமி நிலைமை ஒன்று ஏற்படக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் இந்தக் கருத்துக்கு மாறாக மெக்சிகோவின் லொஸ் அலாமோஸ் தேசிய ஆய்வு நிறுவனத்தின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பெரியளவிலான விண்கல் பூமியில் மோதுவதால் ஏற்படும் பாதிப்பை விடவும் அரைப் பகுதியிலான பாதிப்பே கடலில் மோதினால் ஏற்படும் என்று பல ஆய்வுகளின் பின்னர் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். அதற்கமைய பெரியளவிலான விண்கற்கள் பூமியில் விழுந்தால் அதன் மூலம் பெரியளவிலான சுனாமி நிலைமை ஒன்று ஏற்படாது என்று விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மெகா சுனாமியாகக் கருதப்படும் 100 மீற்றர் அளவிலான சுனாமி நிலைமை ஏற்படுவதால் உயர்மட்ட நில அதிர்வு ஏற்படும். அந்த நில அதிர்வில் இருந்து வெளியாகும் சக்தி மிகப் பெரியவைகள் என்று அண்மையில் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் விண்கல் கடலில் விழுந்தால் பாரிய சுனாமியை ஏற்படுத்தும் அளவுக்கு சக்தி வெளியாகாதென இந்த விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அவ்வாறு கடலில் விழும் அல்லது மோதும் போது நீரின் அழுத்தம் அலைகளாகப் பிரிந்து செல்லும் என்றும், அதனால் அருகில் உள்ள பகுதிகளுக்கு சிறிய அளவிலான பாதிப்புகள் மாத்திரமே ஏற்படும் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# செவ்வாய்க் கிரகத்தில் கரண்டி கண்டுபிடிப்பு!



செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் வாழ்க்கை நடத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டு வரும் நாசாவுக்கு ஓர் அற்புதமான தடயம் கிடைத்துள்ளது.

சிவப்புக் கிரகத்தின் மணல் போன்ற மேற்பரப் பில் கூர்மையான பார் வையாளர் கமரா மூலம் எடுக்கப்பட்ட படத்தில் சமையலறைப் பாத்திரமான கரண்டி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் கரண்டி காணப்படுவது இரண்டாவது முறையாகும். அதுமட்டுமின்றி பூமியில் பயன்படுத்தப்படும் பொருள்களான மோதிரங்கள் மற்றும் கையுறைகள் முன்பு கண்டுபிடிக்கப்பட்டமை நினைவு கூரத்தக்கது.

குறித்த காணொலி முறையாக ஆய்வு செய்யப்பட்டு சமூக வலைத் தளமான யூடியூப்பில் UFO Hunter என்ற கணக்கில் வெளியிடப்பட்டுள்ளது. இது பார்வையாளர்களைக் குழப்பத்தில் மற்றும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.


பலர் இது அறிவார்ந்த வாழ்வின் ஓர் அடை யாளமாக இருக்க முடியும் என்று கருத்துத் தெரிவித் துள்ளனர். பலர் எதிர் மறையான கருத்தைப் பதிவு செய்து வருகின்றனர்.




பொன்.வேணு கிருஷ்ணா

### துருக்கிய ஆட்சியின் வெளியுறவுக் கொள்கையின் ஆழமான நெருக்கடி

துருக்கிய ஆட்சியின் வெளியுறவுக் கொள்கையின் ஆழமான நெருக்கடி, நவம்பர் 2015இல் சிரியாவில் ரஷ்ய ஜெட் விமானத்தைதுருக்கிசுட்டுவீழ்த்தியபோது உக்கிரமடைந்தது. மாஸ்கோ அப்பிராந் தியத்தில் அதன் ஏவுகணைப் பிரிவுகளை, போர் விமானங்களை மற்றும் போர்க் கப்பல்களை அனுப்பிய போது - துருக்கியுடனான ஒரு யுத்தத்துக்கான அச்சுறுத்தலைக் கொண்டிருந்தது, அது நேட்டோ மற்றும் ரஷ்யாவிற்கிடையில் ஓர் உலகப்போரைவெடிக்கவைத்திருக்கக் கூடும்- அது இறுதியில் துருக்கி மீதான பொருளாதாரத் தடைகளை மட்டுமே விதித்தது.



துருக்கிய பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பெரும் பாதிப்பிற்கு மத்தியில் மற்றும் நேட்டோ கூட்டாளிகள் குறிப்பாக ஐரோப்பாவில் உள்ளவை, ரஷ்யாவுடனான போரில் துருக்கிக்கு உதவத் தலையிடா என்ற அச்சத்தாலும், துருக்கிய ஆட்சி அதன் வெளியுறவுக் கொள்கையை மாற்றியது. (Amid escalating damage to the Turkish economy and fears that NATO allies, notably in Europe, might not intervene to aid Turkey in a war with Russia, the Turkish regime shifted its foreign policy.) அது ரஷ்யாவுடனும் சிரியாவுடனுமான சாத்தியமான சீர மைத்தலை மேற்கொள்ளத் தொடங்கியது. மே 2016 இல் எர்டோகன், ரஷ்ய விமா னத்தை சுட்டு வீழ்த்த, தான் ஆணை யிட்டதாக முன்னர் அறிவித்திருந்த பிரதமர் அஹ்மெட் டாவுதோலு இனை பதவியிலிருந்து அகற்றிவிட்டு ரஷ் யாவிடம் மன்னிப்புக் கேட்டார். (It began mentioning a possible rapprochement with Russia and the Syrian regime. In May 2016, Erdogan discharged his prime minister, Ahmet Davutoglu, who had previously declared that he ordered the shooting down of the Russian fighter, and apologized to Russia.)

**கிட்டத்தட்ட வெற்றிபெறும் தறுவாயிலிருந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியை, மறைமுகமாக ஆதரித்த வாஷிங்டனும் பேர்லினும்**


People occupy a tank in Istanbul on the night of the coup attempt in Turkey (EPA)


Turkish solders stay at Taksim square as people react in Istanbul.






இது வாஷிங்டனும் பேர்லினும் ஜூலை 15 அன்று எர்டோகனுக்கு எதிராக கிட்டத்தட்ட வெற்றிபெறும் தறுவாயிலிருந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியை மறைமுகமாக ஆதரிக்க மேடை அமைத்துக் கொடுத்தது, அதில் அங்காரா கூலனின் இயக்கத்தை குற்றம் சாட்டியது. (This set the stage for Washington and Berlin to tacitly back a coup attempt that nearly succeeded against Erdogan on July 15, and which Ankara blamed on Glen's movement.) அது சரியான நேரத்தில் எச்சரிக்கை கொடுத்த ரஷ்யாவுக்கு நன்றி கூறியதாக அறிவிக்கப்பட்டது. இது துருக்கிக்குள் மட்டுமல்லாமல், அனைத்திற்கும் மேலாக எர்டோகன் அரசாங்கத்திற்கும் பிரதான நேட்டோ சக்திகளுக்கும் இடை யிலான ஏற்கனவே வெடிப்புற்ற பதற் றங்களை மேலும் தீப்பற்ற வைத்தது. (It was reportedly averted thanks to timely warnings from Russia. This inflamed the already explosive tensions not only inside Turkey, but above all, between Erdogan's government and the major NATO powers.)

**எர்டோகன், துருக்கியானது சீனா தலைமையிலான ஷாங்காய் கூட்டுறவு கழகத்தில் சேரும் என்று திரும்பத் திரும்ப அறிவித்தார்**



துருக்கி அரசாங்கம், நேட்டோவிலுள்ள அதன் போலிமுகம் காட்டும் கூட்டாளி களுக்கும் பிரதான யுரேஷிய சக்திகளான ரஷ்யா மற்றும் சீனாவிற்கும் இடையில் என்றுமில்லா வகையில் பதற்றத்து டன்கூடிய கையாளல்மூலம் தனது பிரதிபலிப்பை காட்டியது. (The Turkish government has reacted by manoeuvring ever more desperately between its ostensible allies in NATO and the major Eurasian powers, Russia and China ) சமீப மாதங்களில், சீனாவிற்கும் துருக்கிக்கும் இடையில் வளர்ந்து வரும் பொருளாதார உறவுகளுக்கு மத்தியில், எர்டோகன், துருக்கியானது சீனா தலைமையிலான ஷாங்காய் கூட்டுறவு கழகத்தில் சேரும் என்று திரும்பத் திரும்ப அறிவித்தார், இது அங்காராவை மேலும் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கும் என்றும் கூறினார்.( In recent months, amid growing economic ties between China and Turkey, Erdogan has repeatedly declared that Turkey might join the China - led Shanghai Cooperation Organization (SCO), claiming this would allow Ankara "to act more freely.'')

**கூட்டுப் பாதுகாப்பு மற்றும் நேட்டோ ஒற்றுமை பற்றிய கருத்து ருவை வலிமை குன்றச்செய்யும் எதனையும் துருக்கி செய்யாதா?**




இது நேட்டோவிடமிருந்து கடும் பதிலைக் கொண்டு வந்தது. நேட்டோ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அவைக்காக கடந்த மாதம் இஸ்தான் புல்லுக்கு வருகை தந்த, நேட்டோ பொதுச்செயலர் ஜென்ஸ் ஸ்ரொல்டன் பேர்க் எர்டோகனை சந்தித்தார், ''கூட்டுப் பாதுகாப்பு மற்றும் நேட்டோ ஒற்றுமை பற்றிய கருத்துருவை வலிமை குன்றச்செய்யும் எதனையும் துருக்கி செய்யாது என நான் திடமாக நம்புகிறேன் எனக் குறிப்பிட்டார். (This drew a sharp reaction from NATO. Visiting Istanbul last month for the NATO Parliamentarians Assembly, NATO Secretary & General Jens Stoltenberg met with Erdogan and said, "I am sure Turkey will do nothing that could impair the concept of joint defence and NATO unity.'')

**சிரிய நிலைமைகளை இயல்பு நிலைக்கு கொண்டுவரல் எமது நாடுகளுக்கான முதன்மையான பணியாகும்**

Closer ties between Turkey, Russia not seen affecting Ankara's role in NATO




"We see altogether that an unfortunate one-year period is over," state-run Anadolu Agency quoted Yildirim as saying during the open part of his meeting with Russian Prime Minister Dmitry Medvedev in Moscow.

அனைத்திற்கும் மேலாக, எவ்வாறா யினும், அங்காரா ரஷ்யாவுடன் நெருங்கிய உறவை நாடியது.( Above all, however, Ankara sought closer ties to Russia.) இந்த மாதத்தின் தொடக்கத்தில், ரஷ்ய, துருக்கிய பிரதமர்கள் டிமித்திரி மெட்வ டேவ் மற்றும் பினாலி யில்டிரிம் மாஸ் கோவில் சந்தித்தனர்.(Earlier this month, the Russian and Turkish prime ministers, Dmitri Medvedev and Binali Yildirim, met in Moscow.) சிரிய நிலைமைகளை இயல்புநிலைக்கு கொண்டுவரல் எமது நாடுகளுக்கான முதன்மையான பணி யாகும். மற்றும் அது முழுப்பிராந்தியத்தின் நலன்களுக்கு நிச்சயமாக சேவை செய் வதுடன் மற்றும் தற்பொழுது மிகச் சிக்கலானநிலைமையில் உள்ளசிரியாவின் நலன்களுக்கும் முக்கியமானது என்று அவர்கள் உடன்பட்டனர்.(They agreed that "the normalization of the Syrian situation is a priority task for our countries and it will definitely serve to the benefit of the whole region, not to mention Syria, which is currently in a very complicated situation.")

(கேள்வி தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# அருளாசிச் செய்தி



இன்று புதுவருடப் பிறப்பு நன்னாள். இன்றைய நாள் ஒரு நல்ல நாளாகும். ஏனெனில் இன்று ஞாயிற்றுக் கிழமை. ஞாயிறு சூரியனுக் குரியது. உலக இயக்கத்துக்கு மூல காரணரே சூரியன்தான். ஆதலால் இன்று பிறந்திருக்கும் புத்தாண்டு ஒளிமயமான எதிர்காலத்தைச் சுட்டி நிற்கின்றது.

சூரியனுடைய ஒளிக் கதிர்கள் வெளிவந்ததும் இரவு பகலாகின்றது. பகல் ஒளி மிக்கதாய் விடிவதற்கு சூரிய பகவானே காரணம். அந்த வகையில் இன்றைய நாள் நல்லதாய் விடிந்திருக்கின்றது என்ற முழு நம்பிக்கையோடு நாம் புத்தாண்டை வரவேற்று மகிழ்ந்திருப்போம்.

இன்றைய புத்தாண்டு தினத்தில் இலங்கை மணித் திருநாட்டின் மக்கள் எல்லோரும் சீரோடும் சிறப்போடும் வாழ எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானைப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி மகிழ்வுடன் மனமார வாழ்த்துகின்றோம்.

'ஒற்றுமையே பலம்', 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற வாக்குக்கிணங்க ஈழநாட்டு மக்கள் எல்லோரும் இன்று முதல் ஒன்று பட்டு நல்வாழ்க்கை வாழத் தங்களைத் தாங்களே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அனைத்து மக்களுக்கும் நல்லதே நடக்கும் என்று ஆசி கூறி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஆதீன குரு முதல்வர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்யசுவாமிகள்**
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

# அமைதி பொருந்திய தேசத்தைகட்டியெழுப்ப கைகோருங்கள்



இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

2017 ஆம் ஆண்டானது இந்த நாட்டின் வரலாற்றில் மிக முக்கிய ஆண்டாக அமையுமென நம்புகிறேன். முன் வைக்கப்படவுள்ள புதிய அரசமைப்பின் ஊடாக, எமது தேசியப் பிரச்சினைக்கு நிலையானதும் நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடியதுமான தீர்வொன்றை 2017 ஆம் ஆண்டிலே அடைய வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

எமது மக்களிடையே பல விடயங்களில் பன்முகத்தன்மைக் காணப்படுகின்ற போதிலும் கூட, எதிர்கால சந்ததியினருக்காக அமைதியான சௌபாக்கியமிக்க தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அவ்வாறான பன்முகத்தன்மைகளை தடையாக அமைத்துக்கொள்ள வேண்டாமென இந்த நாட்டு மக்கள் அனைவரிடமும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அமைதியும் செழிப்பும் பொருந்திய தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக இந்த நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகள், சமயத் தலைவர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரிடமும் ஒன்றிணைந்து கை கோக்குமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

கிடைத்துள்ள இந்தப் பொன்னான வாய்ப்பைக் கை நழுவவிடாது பயன்படுத்திக் கொள்வதற்கு நாம் இவ்வாண்டிலே திடசங்கற்பம் பூணுதல் வேண்டும்.

உங்கள் அனைவருக்கும் பிறந்துள்ள புத்தாண்டு மகிழ்ச்சியானதாகவும் சௌபாக்கியமானதாகவும் அமைய வாழ்த்துகிறேன்!

**இரா. சம்பந்தன்,**
நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித்தலைவரும்
தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும்.

# ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி



சுபீட்சம் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் பற்றிய புதிய எதிர்பார்ப்புகளுடன் 2017ஆம் ஆண்டு மலர்ந்திருக்கிறது. பேண்தகு யுகத்தின் ஊடாக வறுமையை நம் நாட்டிலிருந்து அகற்றும் உணர்வுபூர்வமான உறுதிப்பாட்டுடன் 22 மில்லியன் இலங்கையர்களும் ஒன்றிணைந்து இருக்கின்றனர்.

நிச்சயம் இந்தச் சவாலை நாம் வெற்றி கொள்ள வேண்டும். அதனை சாதிப்பது எமக்கு கடினமான இலக்கு அல்ல. சவால்களைக் கண்டு சளைக்காத தன்னம்பிக்கையும் மன வலிமையும் மிக்க மனிதர்களாலேயே மானிட வளர்ச்சியின் பரிணாமம் சாத்தியமாகியிருக்கின்றது. பொது நன்மையைக் கருதி காலத்தை உகந்த வகையில் முகாமைத்துவம் செய்து சிறந்த முறையில் நிறைவேற்றுவதன் மூலமே எம்மால் உயர்ந்த இலக்கை அடைய முடியும். எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ள நேரிடும் இயற்கையின் எதிர்மறையான நிலைமைகளை தீர்க்கதரிசனத்துடன் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இயற்கைச் சூழலை நாம் வெகுவாக நேசிக்க வேண்டும் என்பதையே காலநிலை எமக்கு உணர்த்துகின்றது. அதேவேளை அநேகமான முடிவுகளை மேற்கொள்வதற்கான ஆற்றல் மிகுந்த பலசாலி இயற்கையே என்பதை நாம் ஒருபோதும் மறந்திடலாகாது.

கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் உலகம் எந்த அளவு வெற்றிகளைப் பெற்றுக் கொண்ட போதிலும், அபிவிருத்தி குறித்த எதிர்பார்ப்புகளை வெற்றிகொள்வதில் இயற்கையின் ஆசீர்வாதம் மிக மிக முக்கியமான நிபந்தனையாக அமைகிறது.

உலக அரசியல் சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளில் பல சிக்கல்கள் மேல் எழுந்துவரும் பின்புலத்திலேயே நாம் புத்தாண்டுக்குள் பிரவேசிக்கின்றோம். வறுமையை அகற்ற வேண்டும் என்ற பெரும் பொறுப்பை முன்னிலைப்படுத்தி எம்முன் இருக்கும் சவால்களை வெற்றிகொண்டு வளமான இலங்கையை நோக்கிச் செல்லும் இந்தப் பயணத்தை வெற்றிகொள்வோம் என்ற உறுதிப்பாட்டுடன் பிறக்கும் இந்தப் புத்தாண்டில் ஒரு மனதுடனும் மிகுந்த அர்ப்பணிப்புடனும் செயற் படுவோமாக.

அனைவருக்கும் சுபீட்சமான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# மனமாற்றத்தின் புத்தாண்டாய் மலர்க!



எதிர்பார்ப்பை எதிர் கொள்ளும் புத் தாண்டாய் மலர்கிறது. மாற்றங்கள் முதலில் தனிமனித மனங்களில் மலர நம்பிக்கையூட்டும் நற் செயல்களில் நாம் இணைந்து மனப்பாங்கில் மாற்றம் காணும் மனப்பக்குவத்துடன் புதிய ஆண்டை எதிர் கொள்வோம். மனமாற்றத்தின் செயல்களாக மலர புத்தாண்டை இறை ஆசீருடன் வரவேற்போம்.

நம்பிக்கையூட்டும் நல்முயற்சியில் முன்னேற்றம் காண்பதற்கு உழைக்கும் ஆண்டாக எதிர்கொள்வோம். எம்மனப்பாங்கின் மாற்றங்களால் சமூக மாற்றத்தின் பங்காளராக விழிப்புடன் செயல்படும் ஆண்டாக எதிர்கொள்வோம்.

சர்வமதங்களின் நட்புறவும், நல்லெண்ண செயல்களும் பலமடைந்து, ஆன்மீகத்தின் தேடல் நற்பண்புகளால் நிறைந்து பல்லின பண்பாட்டை மதித்து, உண்மைக்கு உரமூட்டும் செயல்களால் நீதியின் கரங்கள் பலம்பெற, ஒன்றிணைந்து அன்புறவைப் பலமாக்கும் புன்னகையோடு நல்வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வோம்.

நம்பிக்கையூட்டும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

**செ.யோசப்பாலா**
செயலாளர்
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்

# நீதி தரும் ஆண்டாக அமையட்டும்!



2017 ஆவது புதிய ஆண்டு தமிழ் மக்களுக்கு நீதியோடு கூடிய நிரந்தர தீர்வைத் தரும் ஆண்டாகட்டும்.

2017 ஆவது புதிய ஆண்டு மலரும் வேளையில் உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம். இந்தப் புதிய ஆண்டு இறையருள் நிறைந்ததாக உங்கள் உள்ளத்து எண்ணங்களை நிறைவு செய்யும் ஆண்டாக இறையாசீர் வேண்டி வாழ்த்துகிறோம்.

கடந்த ஆண்டு முழுவதும் இறைவன் கொடுத்த அனைத்து வரங்களுக்கும் இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டு இந்த ஆண்டிலும் இறைவன் அருள் வரங்களைத் தமிழ் மக்கள் அனைவர் மேலும் ஏராளமாகப் பொழிய வேண்டுவோம் என்று வேண்டுகின்றோம்.

இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் நீதியோடு கூடிய ஒரு சுதந்திர வாழ்வை வாழ்வதற்கு சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து அதன் உச்சக் கட்டமாக 30 ஆண்டு காலப் போரை அனுபவித்து இப்போது சற்று அமைதிப் பெருமூச்சு விடுகிறார்கள்.

கடந்தகால கொடிய போர் அனுபவங்களும் இப்போது அனுபவிக்கும் நிம்மதிப் பெருமூச்சும் பயன்தர வேண்டுமானால் அரசமைப்பில் உறுதிப் படுத்தப்பட்ட ஒரு நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டும். அதற்காக உழைப்பதும் செபிப்பதும் இந்தக் காலத்தில் நம் ஒவ்வெருவரின் விசேட கடமையாகும்.

என்றுமில்லாதவாறு இலங்கை மண்ணில் நல்லெண்ண அரசு ஒன்று தோன்றி இன மத அரசியல் நல்லிணக்கம் உருவாகியிருக்கும் இந்த வேளை நீதியோடு கூடிய ஒரு நிரந்தர தீர்வை அரசமைப்பின் வழி அமைத்துக் கொள்ள மிகச்சிறந்த நேரமாகும்.

இந்த நேரத்தைச் சிறந்த விதமாக இராஜதந்திர ரீதியாகப் பயன்படுத்தி வெற்றியடைய வேண்டியது எமது பணியாகும். இதற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

தமிழ் அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் இதற்காக அரும்பாடுபட்டு உழைக்கவேண்டும். குறிப்பாக அரசியல் தலைவர்கள் தமது சொந்த விருப்பு வெறுப்புக்களைத் துறந்து - அரசியல் மற்றும் கட்சி எண்ணங்களை கடந்து - ஒட்டுமொத்தமாக இணைந்து அரும்பாடுபட்டு உழைக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் பெயரால் வேண்டுகிறோம்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் அனைவரும் கடந்த காலங்களில் செயற்பட்டதைப்போல் செயற்பட்டு வெளிநாடுகளின் அழுத்தத்தை இந்த விடயத்திலும் இலங்கை அரசுக்குக் கொடுக்க அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

மலர்ந்துள்ள 2017 ஆவது புதிய ஆண்டு தமிழ் மக்கள் அனைவருக்கும் இறையாசீர் நிறைந்த மகிழ்வான ஆண்டாக நீதியோடு கூடிய நிரந்தர தீர்வைப் பெற்றுத் தரும் ஆண்டாகட்டும். இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

**மேதகு யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை,**
யாழ். ஆயர்.



# 2017 ஆம் ஆண்டில்
யாழ்ப்பாணத்தில்
நடைபெறும் பரீட்சைகளுக்கு
ஆயத்தப்படுத்தும்
வகுப்புக்கள்

16 - Practice Tests with
Explanations Daily Writing Practice
Daily Speaking and Listening Practice
It is an Inovative Training Programme

எமது மாணவச் செல்வங்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

# IELTS

இந்த ஆண்டு September - October மாதங்களில் British Council - Colombo இல் நடைபெற்ற IELTS ஆசிரியர் Workshop மற்றும் Trainings இல் பங்குபற்றி IELTS பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு British Council னினால் அங்கீகாரம் பெற்ற ஆசிரியரினால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றது.

## OUR TARGET IS BAND : 9

IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை
Grammar and Vocabulary போன்றவற்றை
புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கின்றோம்.
**Pearson English Course Level B2**
எனவே இரண்டு பாடநெறிகளையும் ஒரு கட்டணத்திலேயே நிறைவு செய்யலாம்.





எமது கல்வி நிலையம் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சிறந்த நிலையம் என British Council னால் Awards வழங்கி கௌரவிக்கப்பட்ட நிலையமாகும்.

**COURSE SCHEDULE**
Mon, Tues, Wed, Thus 60 Hours 8.30 - 11.30, 5.00 - 7.00
Saturday & Sunday 60 Hours Time: 8.30 - 12.00

## IELTS LIFE SKILLS A1, B1

March, April, May, June, July, August - 2016 ஆகிய மாதங்களில் நடைபெற்ற A1, B1 பரீட்சைகளில் எமது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அடிப்படையில் இருந்து ஆங்கிலம் 2 மாதங்களில் பூரணமான அறிவைப் பெற்று பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.

**IELTS Registration Centre for British Council**

# BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna. [பெருமாள் கோவிலடி தினக்குரல் காரியாலயத்திற்கு முன்னால்]
Tel : 021 222 0384 , 077 880 3887



## அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# KAJAMUGAN HARDWARE
# கஜமுகன் ஹாட்வெயர்

கட்டடப் பொருள்கள், லங்கா கம்பி, G.I.பைப் வகைகள்,
சீமெந்து, Macson Mesh, பெயின்ட் வகைகள் மற்றும்
Pepsi Soda & Accessories அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்!




147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
147,149, Stanley Road, Jaffna.
Tel: 021 222 2833, 021 222 7144 Fax : 021 222 2368
Email: kajamuganhw@hotmail.com

57/47, Stanley Road, Jaffna.
Tel: 021 222 7282

## வாழ்த்துக்கள்...

முன்னேற்றங்கள்
வாழ்வின்
அடிப்படை தத்துவம்
நாம் கடந்து வந்த
வாழ்க்கை புத்தகத்தில்,
வருடங்கள் மாதங்கள்
வாரங்கள் நாள்கள்
நிமிடங்கள் நொடிகளென
அனைத்து பக்கங்களை
புரட்டிப் பார்த்தால்,
நமக்கொன்று ஒன்று மட்டும் புரியும்
புத்தாண்டு என்பது
வருங்கால தேதிகளை மாற்றிவிடும்
ஒரு நாள்தான் என்று
கடந்து வந்த பாதைகள்
கடக்கவிருக்கும் பாதைகளில்
நமக்கு சந்திக்க போகும் அனுபவங்கள்
யாருக்கும் தெரியாது
திசை திரும்பிவிட்ட படகுமேலேறி
பயணிக்கும் நம்மை
இந்த புத்தாண்டு -நம்
கனவு கரையில் போய் சேர்க்கட்டும்
மாற்றங்கள் அனைத்தும் பொதுவாயினும்
நம்மில் புதுப்புது மாற்றங்கள் தோன்றி
நம் வாழ்வில் இன்பமும் அமைதியும்
என்றும் நிலைத்துவிட
இறைவனிடம் பிரார்த்தித்து
புத்தாண்டு வாழ்த்தை
சமர்ப்பிக்கிறேன்.

-நட்புடன் கவித்தோழ

## ஓடிவா... புத்தாண்டே...

புத்தாண்டே நீ வா
நொடிகளாய் நகர்ந்து
நிமிடங்களாய் நிமிர்ந்து
மணிகளாய் மறைந்து
நாள்களாய் கடந்து
வாரங்களாய்ச் சுழன்று
மாதங்களாய்த் தகர்ந்து
வருடமாய் வருடிச் செல்லும்
புத்தாண்டே நீ வா....!
கடந்தது இலையுதிராயினும்
வருவது வசந்தமாய் இருக்கட்டும்...

திருமதி ய.சிறிதர்

## தமிழனுக்கு என்ன நன்மை...?

வருடங்கள் புதிதாக வந்து வந்து போகும்
வராமலே போனாலும் என்ன இங்கு ஆகும்?
கலண்டரில் நாள்கிழித்து கைகளைத்துப் போகும்- எம்வாழ்வு
கிழிந்து தானே கிடக்கிறது வேறு என்ன ஆகும்

எந்தவருடம் தமிழனுக்காய் என்று எப்போ பிறந்தது?
வந்துவருடம் எம்மை வாழ்த்தி நன்மை என்ன செய்தது?
கோடி கொட்டிக் கொண்டாடும் கோணங்கிக் கூத்தாச்சு
கோடி வருடம் கொண்டாடி எம்தமிழனுக்கு என்னாச்சு?

கொண்டாடும் வருடம் கொடுக்கவில்லை ஒன்றும்- அதை
கொன்று ஆடி வென்றுவாடா அதிஷ்டங்கள் என்றும்
தைபிறந்தால் வழிபிறக்கும் என்றவன் யாரடா?
கையாலாகா ஊனன் அன்று சொன்னது தானடா.

உழைப்பிலே பிறப்பதுதான் புதுவருடம் என்று அறி
உழைப்பாலே உயர்வதுதான் இலட்சியம் என்றே குறி.
கைநீட்டிப் பிச்சை கேட்கும் வரங்கள் எமக்கு வேண்டாம்
கையுயர்த்தி வாழ்ந்து காட்டும் தலைகள் மட்டும் வேண்டும்

பிறக்கும் வருடத்தில் எட்டா ஒரு சத்தியம் - நீ
சிறக்கும் வரை போராடு அதுவே உன் இலட்சியம்.

த. சுகந்தன், சங்குவேலி

## புத்தாண்டுப் பரிசு

நீங்கள் உங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கு ஏதாவது பயனுள்ள செயல்கள் செய்ய வேண்டும் என விரும்பினால் முதலில் நீங்கள் உங்களுக்குள் எப்படி இருக்க வேண்டும் என்று தெரிந்துகொள்ள வேண்டும். உங்களைச்சுற்றி என்ன நடந்தாலும், உங்களுக்குள் எப்படி அமைதியாகவும் ஆனந்தமாகவும் இருப்பது என்று தெரிந்து கொண்டால்தான், யாருக்கும் எதையும் செய்யக்கூடிய சிறந்த நிலையில் நீங்கள் இருப்பீர்கள்.

அப்படி நீங்கள் ஆனந்தமானவராகி விட்டால் உங்களைச்சுற்றியுள்ளவர்களுக்குத் தேவையானதைச் செய்வது என்பது உங்களுக்கு இயல்பாகவே வந்துவிடும். மனிதனின் அடிப்படை ஆசையே மகிழ்ச்சியும் ஆனந்தமும்தான் என்பதால் இந்த உலகுக்கு நீங்கள் அளிக்கக்கூடிய சிறந்த பரிசே நீங்கள் எப்போதும் ஆனந்தமான மனிதராக இருப்பதுதான். மற்றவர்க்கு நீங்கள் அளிக்கக் கூடிய புத்தாண்டுப் பரிசு அதுவாகவே இருக்கட்டும்.

-சத்குரு.



## கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

உள்ளப் பதைப்போடு ஜனவரி 10 ஆம் திகதிக்காய்க் காத்திருக்கிறார்கள் இலங்கை மக்கள்.
இலங்கை மக்களென, தமிழர். சிங்களவர், முஸ்லிம்கள் அனைவரையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்.
நல்லாட்சி அரசாங்கம், நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றி,
பல்லாண்டுகால இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக,
பிரதமரை உள்ளடக்கிய இருபத்தொரு பேர் கொண்ட வழிகாட்டல் சபையை அமைத்தது.
பன்னிரண்டு தலைப்புக்களில் தீர்வுத் திட்டத்தை ஆராய்வதாய் முடிவு செய்து,
அதில் ஆறு விடயங்களை ஆராய்வதற்கென,
சர்வகட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட உபகுழுக்கள் ஆறு அமைக்கப்பட்டன.
அவ் உபகுழுக்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த ஒருசிலரும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.
அந்த ஆறு குழுக்களும் முன்மொழிந்துள்ள விடயங்கள் எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதியளவில்,
அரசமைப்புச்சபையாக மாறவுள்ள நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளன.
உறுப்பினர்களின் கருத்துப் பரிமாற்றங்களின் பின்னர் சிலகாலம் கழித்து,
திருத்தப்பட்ட மேற்படி தீர்வுத்திட்டம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.
அங்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே,
இனப்பிரச்சினைக்கான இத்தீர்வுத்திட்டம் நிறைவேற்றப்படும் என்கிறார்கள்.
நீதிமன்றத்தின் பார்வை, சர்வஜனவாக்கெடுப்பு என,
இத்தீர்வுத்திட்டம் மேலும் பல தடைகளைத்தாண்ட வேண்டியிருக்கலாம் என்றும் சொல்கிறார்கள்.
பாரதி சொன்னாற்போல 'ஆமை மலையேறிய' கதைதான்!

♦ ♦ ♦ ♦ ♦

இதுதான் இலங்கை மக்களின் உள்ளப்பதைப்புக்குக் காரணமாய் இருக்கின்ற விடயம்.
இந்நாட்டின் இனப்பிரச்சினை, கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கும் மேலாக,
இலங்கை மக்களைப் பேரழிவுக்கு உள்ளாக்கியது உலகறிந்த விடயம்.
அரசியல்வாதிகளின் தூண்டுதலால் அவ்வப்போது 1958, 1977, 1981, 1983 என,
இனப்பிரச்சினையின் பெயரால் பெரும்பான்மையினர் தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமைகள் பற்பல,
அப்போதெல்லாம் காரணமின்றி அடிவாங்கி அழிவுகளைச் சந்தித்து,
தெற்கிலிருந்து தம் தாய் மண்ணுக்குத் தப்பியோடுவதும், பின்னர் திரும்பி வந்து தம்மை ஸ்தாபித்ததுமாக,
தமிழர்கள் தன்மானமிழந்து தலைகுனிந்து வாழ்ந்தார்கள்;
நடுவீதிகளில் வைத்து நிர்வாணப்படுத்தப்பட்டும், உயிரோடு எரிக்கப்பட்டும், சொத்துக்கள் அழிக்கப்பட்டும்,
அக்காலத்தில் தமிழர்களுக்கு நடந்த கொடுமைகள் எல்லையற்றன.
கேட்பாரின்றி அல்லல்பட்டு அழுது நின்ற தமிழர்கள் பற்றியோ, நீதி பற்றியோ,
பேரினத்தலைவர்கள் எவரும் அப்போது உண்மையாய் கவலைப்பட்டவர்களாய்த் தெரியவில்லை.
வீதியில் வெளிப்பட நடந்த இக்கொடுமைகளை ஆராயவென,
கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேடி அமைக்கப்பட்ட பெயரளவிலான விசாரணைக் 'கமிஷன்'கள்,
எந்தவொரு சிங்களவரையும் தண்டிக்காமல் நீதியை நகைப்புக்கிடமாக்கின.

♦ ♦ ♦ ♦ ♦

'குனியக்குனியக் குட்டினால் பூனையும் புலியாகும்' என்பதை அறியாத,
பேரினவாதிகளின் அராஜகச் செயல்களால்,
இவ் அழகிய தீவில் அனைத்து இனமக்களும் ஒற்றுமையாய் வாழலாம் என நினைத்திருந்த தமிழ்மக்கள்,
மெல்ல மெல்லத் தம் நம்பிக்கையை இழக்கத் தொடங்கினர்.
அதன் விளைவாகத் தனித்தனியாய்ப் பிரிந்திருந்த தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும்,
தம்முள் ஒன்றிணைந்து, மலையகத் தலைமையையும் தம்மோடு இணைத்துக் கொண்டு,
1976 நடந்த வட்டுக்கோட்டை மாநாட்டில் தனித்தமிழீழக் கொள்கையைப் பிரகடனப்படுத்தின.
மேற்படிக் கொள்கையைப் பிரகடனப்படுத்திய போது,
தந்தை செல்வா, ஜி.ஜி பொன்னம்பலம், திருச்செல்வம், தொண்டமான் ஆகியோர்,
சேர்ந்து நின்ற புகைப்படம் கலண்டராய் வெளிவந்து பிரபலமாகியது.

♦ ♦ ♦ ♦ ♦

ஒன்றையொன்று கடுமையாய் எதிர்த்துநின்ற தமிழரசுக்கட்சியும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியும்,
இன எழுச்சியின் தேவை உணர்ந்து பகைமறந்து அன்று தம்முள் ஒன்றாகின.
இன்று; இலட்சக்கணக்கான உயிரிழப்புக்களைச் சந்தித்ததன் பின்னான நிலையில்,
விடியலின் வெளிச்சம் தேடித் தமிழினம் தவித்து நிற்கும் போது,
ஒன்றான இனத்தை இரண்டாகப் பிரிப்பதற்குத் தீர்க்கதரிசனமின்றி சிலர் முயன்று நிற்பதும்,
ஒன்றான தலைமைக்குள்ளேயே பதவிப்போட்டிகள் நடப்பதும் விதியின் விளையாட்டேயாம்!

♦ ♦ ♦ ♦ ♦


தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒன்றிணைந்த சௌமியமூர்த்தி தொண்டமான்,
தம் இனத்தின் நிலையுணர்ந்து பின்னர் தனிஈழக் கொள்கையிலிருந்து விலகிக் கொண்டார்.
தனிஈழக்கொள்கைப் பிரகடனத்தால் உணர்ச்சிவயப்பட்ட தமிழர்களின் ஒருமித்த ஆதரவு,
அடுத்து வந்த தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்குக் கிடைக்க,
நாடாளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சியாகும் பலம் அவர்களுக்குக் கிட்டியது.
அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.
இப்படியாய் அடுத்தடுத்து நிகழ்ந்த நன்னிமித்தங்கள் திடீரென மறையத் தொடங்கின.
பதவிசுகம் ஈர்த்தமையால், அரசு முன் வைத்த மாவட்ட சபையை ஏற்றுக்கொள்ள,
தமிழர் விடுதலைக் கூட்டணி துணிந்தது.
அந்தஸ்தையும் அரசு உவந்தளித்த வாகனங்களையும் பெற்றுக்கொண்டு,
தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர்கள்,
தனி ஈழக்கொள்கையின் உறுதிப்பாட்டில் தளர்வுகாட்டத் தொடங்கினர்.

♦ ♦ ♦ ♦ ♦

அவர்களால் ஊதிவிடப்பட்ட விடுதலை உணர்வு எனும் அக்கினி,
இளைஞர்களிடம் மூளாத்தீப்போல் உள்ளே கனன்று எரிந்து கொண்டிருந்தமையைத் தெரியாது,
அவர்கள் செய்த தவறான அம்முடிவால் பின்னாளில் இலங்கையில் பெரும் சேதம் விளைந்தது.
வல்லரசுப் போட்டி இருந்த அக்காலத்தில் தென்கிழக்காசியாவில் இலங்கை புவியியல் முக்கியத்துவம் பெற,
அம்முக்கியத்துவத்தை வைத்து அமெரிக்க ஆதரவை தன்வயப்படுத்தி,
இந்தியாவைக் கட்டுப்படுத்த முனைந்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.
அவர் முயற்சியால் இந்தியா கோபமுற்றது.
ஆளுமைமிக்க அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி,
ஜே.ஆரின் செயலுக்கு 'செக்' வைக்கும் முகமாக,
சுதந்திர உணர்ச்சி கொப்பளித்துக் கொண்டிருந்த ஈழத்தமிழ் இளைஞர்களை,
இந்தியாவுக்கு வரவழைத்து ஆயுதமும், பயிற்சியும் அளித்து,
அவர்களைக் கொண்டு தனிஈழத்துக்கான ஆயுதப் போராட்டத்தைத் தொடக்கி வைத்தார்.

♦ ♦ ♦ ♦ ♦

இங்ஙனமாய்த் தொடங்கப்பட்ட ஈழவிடுதலைப்போர்,
பின்னர் இந்தியாவின் கையையும் தாண்டி எவரெவரையோ உள் நுழைவித்து,
இலங்கையையும், இலங்கையரையும் சின்னாபின்னப்படுத்தியது வரலாறு.
இப்போரில் பாதிக்கப்படாத இலங்கையர் எவரும் இல்லை எனலாம்.
சிங்களவர் அடிக்கத் தமிழர் அழிந்தனர். தமிழர் அடிக்கச் சிங்களவர் அழிந்தனர்.
இவ்விருவர்க்கும் இடையில் அகப்பட்டு முஸ்லிம்களும் அழிந்தனர்.
இங்ஙனமாய் இனப்பகை அப்பாவி மனிதர்களை வீணாக அழித்துப் போட,
கேட்பாரின்றி இலங்கையில் மானுடம் சிதைந்து சீரழிந்தது.
பிற்காலத்தில் உட்பகையால் போராளிக்குழுக்கள் ஒன்றோடொன்று மோதிப் பலமிழந்தன.




இறுதியில் உலக நாடுகளின் ஆதரவுடன் ஈழவிடுதலைப் போராளிகள் முற
ஈவிரக்கமற்ற பல்லாயிரமான மானுடச் சிதைவோடு ஈழவிடுதலைப்போர் மு
இது தமிழர் சார்பாக நிகழ்ந்த போர் இழப்பு.

♦ ♦ ♦ ♦ ♦

ஈழ விடுதலைப் போரில் விடுதலைப் போராளிகளால் சிங்களவர்களும் பே
பெரும்பான்மை பெற்றிருந்தும் சிறுபான்மைத் தமிழர்களை அழிக்க முடி
கொதிப்பில் இருந்த சிங்களவரை உலகம் தூண்ட,
இனிக்கேட்பாரில்லை எனும் துணிவில்,
இலங்கை அரசு தமிழர்களைக் கொன்று குவித்து இறுதியில் வெற்றியும் ஈ
ஆனாலும் அவர்கள் எண்ணம் நிறைவேறவில்லை.
போரின்போது எந்தெந்த நாடுகள் இலங்கைக்கு ஆதரவளித்தனவோ அ
போரின் பின் இலங்கையை, மனித உரிமை மீறல் எனும் வலைக்குள் சிச்
திருடனுக்குத் தேள் கொட்டினாற் போல் ஆக,
உலக அரங்கில் குற்றவாளியாய் நிற்கவேண்டிய நிலை சிங்கள அரசுக்கு
இறுதிப்போரில் தமிழர்க்கு நிகழ்ந்த கொடுமைகள் பகிரங்கப்படுத்தப்பட,
உலக அனுதாபம் ஈழத்தமிழர்களின் மீது திரும்பியதால்,
ஈழத்தமிழர்களின் உரிமையை அங்கீகரிக்க வேண்டிய அவசியத்துக்கு,
இலங்கை அரசும் பேரினவாதிகளும் தள்ளப்பட்டனர்.
இனப்பிரச்சினையில் தாம் வென்றுவிட்டதாய் நினைந்த சிங்களவர்கள்,
தாம் அமைத்த பொறியில் தாமே அகப்பட்டமையை அறிந்து அந்தரித்தா
இது சிங்களவர்கள் சார்பாக நிகழ்ந்த போர் இழப்பு.

♦ ♦ ♦ ♦ ♦

இந்நிலையில் இறுதிப்போரை முன்னின்று நிகழ்த்திய மஹிந்த அரசு,
உலக அபிப்பிராயத்தைப் புறந்தள்ளி சீனாவின் உதவி பெற்று தன்னை
சீனாவின் திட்டத்தை உணர்ந்து கொண்ட அமெரிக்காவும் இந்தியாவும்,
ஏதோவகையில் திட்டமிட்டு மஹிந்த ஆட்சியை வீழச்செய்தன.
தன் தோல்விக்கு இந்நாடுகளே காரணம் என,
அப்போது மஹிந்த பகிரங்கமாகவே பேட்டியளித்தார்.
அதன் பிறகு மீண்டும் இலங்கை அரசியலில் காட்சிகள் மாறத்தொடங்கின

♦ ♦ ♦ ♦ ♦

வரலாற்றில் என்றும் இல்லாதவகையில் பேரினப்பெருங்கட்சிகள் இரண்டு
'நல்லாட்சி' என்ற பெயரில் தமது புதிய ஆட்சியை அமைத்தன.
அடுத்தடுத்து அவர்கள் வெளிப்படுத்திய நற்சமிக்ஞைகளால்,
பேரழிவுகளிலிருந்து இலங்கை மக்கள் அனுபவம் பெற்றுவிட்டார்கள்.
இனி இனப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும் என்று பலரும் நம்பத் தொட
ஆனால், நாளாக நாளாக 'பழைய குருடி கதவைத்திறவடி' என்ற கதையே
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிய பேரினவாதப் பெருங்கட்சிக
உண்மை நட்புப் பதிவாகவில்லை என்பது அவர்களின் செயலாலும், பேச்
இடையில் கிடைத்த கால அவகாசத்தில் உலக ஆதரவை ஓரளவு தமதாக்கி
மீண்டும் சில சிங்களத் தலைவர்கள் துவேஷத்தைக் கக்கத்தொடங்

♦ ♦ ♦ ♦ ♦

சிங்களவர்கள் ஒருநாளும் தமிழர்களை உரிமையோடு வாழவிடமாட்டார்க
தமிழர்களின் ஒருசாராரின் கருத்தைப் பெரும்பான்மையினர் பலர் இன்று
கிழக்கு மாகாணத்தில் பொலிஸார் பார்த்திருக்க ஒரு பௌத்ததுறவி அட்டு
அவரைக் கண்டிக்க வேண்டிய நீதியமைச்சும் அமைச்சரும் சார்புபட்டு நட
தமிழர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறார்கள்.
இன்றைய அரசுக்குள் இருக்கும் பலபேரும் தமிழரின் நியாயமான சமஷ்டி
தேசத்துரோகம் என்றளவில் விமர்சித்து மீண்டும் இனப்பகையைத் தூண்
காலாகாலமாக இத்தேசத்தின் அரசியலை வழி நடத்துகின்ற இரண்டு பெ
சமஷ்டிக் கொள்கையை நிராகரிக்கவும் பௌத்த, சிங்கள அதிகாரத்தை உ
தீர்வுத்திட்டம் வெளிவரவுள்ள இந்நேரத்தில் அறிக்கை விட்டுள்ளனர்.
மானுட நேசிப்பும் சமத்துவமும் பேசி நின்ற மாக்சீயக் கொள்கையாளர் வ

# ண்டிலே தீர்வு வித்தாகுமா?




லைப் போராளிகள் முற்றாய் அழிக்கப்பட,
ஈழவிடுதலைப்போர் முடிவுக்கு வந்தது.

♦ ♦ ♦ ♦

ம சிங்களவர்களும் பேரிழப்பைச் சம்பாதித்தனர்.
ழர்களை அழிக்க முடியவில்லை எனும்,

றுதியில் வெற்றியும் ஈட்டியது.

தரவளித்தனவோ அந்த நாடுகளே,
எனும் வலைக்குள் சிக்க வைத்தன.

லை சிங்கள அரசுக்கு ஏற்பட்டது.
கிரங்கப்படுத்தப்பட,
நால்,
டிய அவசியத்துக்கு,
ர்.
ந்த சிங்களவர்கள்,
அறிந்து அந்தரித்தார்கள்.

♦ ♦ ♦ ♦

ய மஹிந்த அரசு,
நவி பெற்று தன்னை ஸ்தாபிக்க முயல,
காவும் இந்தியாவும்,
ச்செய்தன.

ர்.
கள் மாறத்தொடங்கின.

♦ ♦ ♦ ♦

பருங்கட்சிகள் இரண்டும் ஒன்றாகி,
மைத்தன.
ளுகளால்,
பெற்றுவிட்டார்கள்.
பலரும் நம்பத் தொடங்கினர்.
றேவடி' என்ற கதையே நிகழத் தொடங்கியது.
வாதப் பெருங்கட்சிகளுக்குள்,
ன் செயலாலும், பேச்சாலும் வெளிப்படத் தொடங்கியது.
வை ஓரளவு தமதாக்கிக் கொண்ட துணிவில்,
தயைக் கக்கத்தொடங்கியுள்ளனர்.

♦ ♦ ♦ ♦

ாடு வாழவிடமாட்டார்கள் என நினைக்கும்,
மையினர் பலர் இன்று நிஜமாக்க முனைந்துள்ளனர்.
பௌத்ததுறவி அட்டூழியம் பண்ணுகிறார்.
ச்சரும் சார்புபட்டு நடந்து,
றார்கள்.
ன் நியாயமான சமஷ்டிக் கோரிக்கையைக் கூட,
னப்பகையைத் தூண்டி வருகின்றனர்.
துகின்ற இரண்டு பௌத்த பீடாதிபதிகள்,
ங்கள அதிகாரத்தை உறுதிப்படுத்தவும்,
க விட்டுள்ளனர்.
க் கொள்கையாளர் வாசுதேவநாணயக்கார,

தமிழ்ப்பகுதிகளுக்கு எந்தத் தனிச் சலுகையும் அளிக்கவிடமாட்டோம் என்று,
இந்தவாரத்தில் அறிக்கை விட்டு தன் உண்மைப் புரட்சி ரூபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
இங்ஙனமாய் வெளிவந்து கொண்டிருக்கும் இடியும், மின்னலுமான துர் அடையாளங்கள்,
மீண்டும் இந்நாட்டில் பகைப்புயல் வீசப்போவதை உறுதிப்படுத்துகின்றன.

♦ ♦ ♦ ♦ ♦

போரில் தாம் பெற்ற வெற்றியைக் கொண்டும் தமிழர்கள் சிறுபான்மையினர்தானே என நினைந்தும்,
தமது ஆணவத்தால், அவர்களை அடக்கியாள நினைக்கும் பேரினத்தார் ஒன்றை உணர்தல் வேண்டும்.
போர் தமக்குச் சார்பாய் முடிந்திருப்பதாய் அவர்கள் நினைந்தால்,
அதைவிட முட்டாள்தனம் வேறு எதுவும் இருக்கமுடியாது.
போரில் புலிகள் தோல்வியுற்றாலும் அத்தோல்வியிலும் சில வெற்றிகளை,
அவர்கள் நிலைநிறுத்தியே சென்றுள்ளனர்.
உலக வரைபடத்தில் ஒரு புள்ளியளவாய் இருந்த இலங்கையில்,
அதைவிடச் சிறுபுள்ளியாய் இருந்த தமிழர்கள் பற்றி உலகம் நீதி கேட்கத்தொடங்கியிருப்பதே,
முடிந்து போன ஈழப்போரில் தமிழர்கள் பெற்றிருக்கும் வெற்றியாம்.
மூட்டைப்பூச்சிகளை நசிப்பது போல கேட்பாரின்றித் தமிழர்களை நசிக்க,
இனி ஒருதரம் பேரினவாதிகளால் இனக்கலவரங்களை இயற்றி,
தமிழர்களைத் துன்புறுத்த முடியாதென்பது திண்ணம்.
தத்தம் தேவைகளுக்காய் இலங்கையைக் கொத்திக் கூறுபோடக்காத்திருக்கும் வல்லரசுகள்,
அங்ஙனம் ஒரு நிகழ்ச்சி நடந்தால் அதையே காரணமாக்கி,
இலங்கையில் தம் கால்களை ஆழப்பதிக்கத் தயாராயிருக்கின்றன.

♦ ♦ ♦ ♦ ♦

நல்லாட்சியின் பின்னும் இலங்கையுள் நீளத்தொடங்கியிருக்கும் சீன ட்ரகனின் வால்,
அமெரிக்காவையும் இந்தியாவையும் மீண்டும் எரிச்சலடைய வைத்திருக்கின்றது.
பதவியேற்பதற்கு முன்பே சீனாவுடன் பகைபாராட்டியிருக்கும் புதிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்,
ஆட்சிப்பொறுப்பேற்றதும் தனது சீன எதிர்ப்பை உலகறிய வெளிப்படுத்துவார் என,
அரசியல் அவதானிகள் கருதி நிற்கின்றனர்.
அவர் எதிர்ப்பு இலங்கை நோக்கியும் திரும்பினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.
அங்ஙனம் திரும்பும் அமெரிக்காவின் சீன எதிர்ப்பு இலங்கையில் தமிழர் சார்பாக மாறி,
பேரினத்துக்கு இன்னல் செய்ய வாய்ப்புண்டு என்பதை பேரினவாதிகள் மறந்துவிடக்கூடாது.
தமக்கு உரிமையுள்ள நியாயபூர்வமான அதிகாரத்தை வேண்டி நட்புக்கரம் நீட்டி நிற்கும் தமிழர்களை,
தம் அரசியல் ஆதாயத்துக்காய் வீணாய்ப் பகைத்து,
தமது இனத்தின் தலையில் தாமே கொள்ளிவைக்க முனையும் பேரினவாதிகளின் மூடச்செயலில்,
ஆபத்தைக் கடந்து வந்த அனுபவப்பதிவு சிறிதும் இருப்பதாய்த் தெரியவில்லை.
பகைவர் மறைந்த துணிவில் பகை மறைந்ததாய்க் கருதி துள்ளும் சிங்களவர்க்கு ஒரு செய்தி.
காரணம் இருப்பின் என்றோ ஒருநாள் ஏதோ வடிவில் காரியம் விளையும்.
விளைந்ததும், அதனால் இலங்கை சிதைந்ததும் வரலாறு.
இதயத்தை இயக்காமல் புத்தியை இயக்கித் தமக்குத் தாமே அழிவுதேட நினைக்கும் அவர்தம் செயல்,
இலங்கை அன்னைக்கு உயிரோடு கொள்ளி வைக்கும் செயலாம்.

♦ ♦ ♦ ♦ ♦

இவர்தம் கூத்து ஒருபுறம் என்றால் நம் தமிழ்த்தலைவர்களின் கூத்து மறுபுறம் நடக்கிறது.
போரில் நடந்து முடிந்த இன அழிவு பற்றிப் பேசி பேசி,
அரசியல் லாபம் தேடுவதே இவர்களின் நோக்கமாய் இருக்கிறது.
போரழிவால் பெற்ற அனுபவத்தை இவர்களிடமும் காணமுடியவில்லை.
இதோ தீர்வு! என கைகாட்டி ஏகத்தலைமையைப் பெற்றுக்கொண்டு,
அத்தலைமையைத் தம் சுயநலத்துக்காய்ப் பயன்படுத்தும் தமிழ்த்தலைவர்களே பலராயிருக்கின்றனர்.
உலகளாவி தம்கருத்தைக் கொண்டு செல்ல உதவுவார் என நினைந்து,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலிந்து கொணர்ந்த முதலமைச்சர்,
இனவளர்ச்சியை இம்மியளவும் நகர்த்தாமல்,
அரசியல்வாதியாய் ஆட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார்.
சரியோ, பிழையோ ஒன்றாய் இருந்த இனத்தலைமையை,
உடைக்கத் தொடங்கியிருப்பதுதான் அவர் செய்த ஒரே காரியம்.

♦ ♦ ♦ ♦ ♦

எங்ஙனம் சிங்களத் தலைவர்கள் சிலர் உணர்ச்சிகளைத் தூண்டி,
யதார்த்தம் உணராமல் பேரினத்தார் மத்தியில் பகைவளர்க்க முனைகின்றனரோ,
அங்ஙனமே நம்முதலமைச்சரின் செயற்பாடும் முனைந்து நிற்கிறது.
போரழிவுகளால் துன்புற்று நிற்கும் தமிழர்களுக்கு,
முதலமைச்சரின் உணர்ச்சிக்கூவல்கள் பிடித்துப்போவதால்,
புதிய தலைவராய் அவரை, அவர்கள் வளர்க்கத் தொடங்கியுள்ளனர்.
மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி அவர் மதிப்புப் பெறுவதைக்கண்ட,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சிலரும் தாமும் அவர்போல ஆகக்கருதி,
தேசம் பிரியும் என்றும் ஈழம் பிறக்கும் என்றும்,
பேரினத்தார்க்கு அதிகாரத் தொனியுடன் அறைகூவல்கள் விடுக்கத் தொடங்கியுள்ளனர்.
இவர்தம் செயல்களும் சிங்களத் தலைவர்களின் செயல்களைப் போலவே,
தம் நிலையுணரா தறிகெட்ட, செயல்களேயாம்.

♦ ♦ ♦ ♦ ♦

பெரும்பான்மைப் பலத்தை நம்பி, பேரினத்தார் சிறுபான்மையினருக்குச் சவால் விடுகின்றனர்.
சிறுபான்மையினராகிய நாம் எந்தப்பலத்தை நம்பி பேரினத்தார்க்கு சவால் விடுகிறோம் என்பதை,
இத்தமிழ்த்தலைவர்கள் மக்களுக்கு உரைத்தல் வேண்டும்.
வலிமைமிக்க சுயநலமற்ற உயிரையும் மதிக்காத இளைஞர்களால் நடத்தப்பட்ட போரே,
கேட்பாரற்று அழிக்கப்பட்டு விட்டது.
எந்த வலிமையும் இல்லாத சுயநலம் மிகுந்த,
உயிரையும் உறவையும் உடைமைகளையும் மட்டும் மதித்து நிற்கின்ற,
இன்றைய தமிழ்த்தலைவர்களால் எதனைச் சாதிக்க முடியும்?
கேள்வி நம் நெஞ்சைச் சுடுகிறது.

♦ ♦ ♦ ♦ ♦

பெரும்பான்மையை சிறுபான்மை வெல்ல வேண்டுமானால்,
சிறுபான்மை, நட்பினால் தன் பலத்தைப் பெரும்பான்மை ஆக்கிக்கொள்ளவேண்டும்.
அங்ஙனம் நமக்குத் துணைசெய்ய நட்பு வரவேண்டுமானால்,
உலகத்துக்கான தேவையை நம்மில் நாம் வளர்த்துக்கொள்ளல் வேண்டும்.
போர் முடிந்த பின்பு இறந்த இளைஞர்களின் ஆற்றலைச் சொன்னால் ஒப்பாரி வைப்பதைத்தவிர,

(23 ஆம் பக்கம் பார்க்க)

# புத்தாண்டே இன்று வருக! இனிய நல்வாழ்வு தருக!!

இன்று புதுவருடப்பிறப்பு. இன்று பிறந்தி ருக்கும் இந்த ஆண்டு மகிழ்ச்சி நிறைந்த மகோன்னத நல்வாழ்வைத் தரப்போகின்றது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் முகமலர்ந்து இப்புத்தாண்டை வரவேற்பதில் பெருமதி மடைகின்றோம். இன்றைய புத்தாண்டைக்கூட்டிப்பார்த்தால்கூட்டென்பத்தாகும். பத்திலே ஒன்று தான் பிரதானம். ஆகவே "ஒன்றே தெய்வம்" எனும்படி அந்த ஒன்றே இறைவனா வான். அந்த வகையில் வாழ்த்த வாயும் நினைக்க மட செஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனையே கடவுளாகக் காண்கின்றோம்.

ஆதலால் - இன்றைய புத்தாண்டு தமிழர் தம் வாழ்வில் ஒரு நல்ல விடிவைத் தரப்போகின்றது. இனமத வேறுபாடின்றி எல்லோரும் வாழ வேண்டும் என்ற வகையில் எல்லோருக்கும் நன்மைகளைத் தரும் என்ற நம்பிக்கையோடு புதுவருடத்தை இருகரங்கூப்பி வணங்கி வர வேற்று, மகிழ்ந்திருக்க இறையருளைப் பிரார்த்தித்துவண்ணை வைத்தீஸ் வரரின் பொற்கமல பாதம் பணிந்து ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

ஒற்றுமையாக வாழ்வதே மனிதனுக்கு அழகு. நமது முன்னோர்களும் ஒன்று பட்டு வாழ்ந்தால் நன்மைகள் பல கிடைக்கும் என்று கூறிப் போந் துள்ளார்கள். உள்ளத்திலே ஒளி இருந்தால் வாக் கிலே ஒளி உண்டாகும் என்பது ஆன்றோர் வாக்கு. அந்த வகையில் விடியலைத் தேடும் தமிழ் நெஞ்ச ங்கள் இனிய எதிர்பார்ப்போடு இப்புத்தாண்டை வரவேற்று மகிழ்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் அன்புடனும் அறிவுடனும் ஆற்றலு டனும் உண்மையுடனும் ஒரு சேர வாழ்வதே நமது நோக்காகும். 'பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்' என்பது போன்று வெள்ளை மனம் படைத்த உள்ளங்கள் யாவும் நல்வாழ்விற் சிறந்து சீரோடுஞ் சிறப்போடும் நன்கு வாழ எல்லாம் வல்ல இறையருளைத் தொட்டு வணங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். எல்லாம் நன்மையாய் நடக்க எம்பெருமான் திருவருள்கிட்ட உண்மையாய் வணங்கி வாழ்த்துக் கூறி மகிழ்ந்திடுவோம்.

**இராசையா ஸ்ரீதரன்.**

# "பாசம் நிறைந்த புத்தாண்டே தேசங்கள் பூத்துக் குலுங்க வருக"

விடியலின் வீச்சோடு
முடிவிலாத துயர் தீரும் !
அடிமுடி தெரியா ஆண்டவன்
அருள் வந்து சேரும் !!
மிகும் பெருங்கருணையோடு
பூத்துக் குலுங்குக புத்தாண்டே !!

ஆண்டுகள் தோறும் அவதரி
மீண்டும் மீண்டும் எழுந்துவா
'பீனிக்ஸ்' பறவையாக ...
தேனொழுகபேசு சமாதானம் !
செயலிலும் அதை பேணு நீ!!
தேசங்களை புதுப்பிக்க வா
செந்தமிழாய் புலர்ந்திடுக ! மேதினியில் !!

புலரியில் புது வாழ்வு படைத்திடுக
ஏய்பதும் ஏமாறுவதும் ஏமாந்தட்டும் !

வைகறை தோறும் வளம் தருக
ஐயுறவான அரசியல் நீதி சிறக்கட்டும்
அடிமையும் குடிமையும் அகதிவாழ்வும்
முடிவுறுவதெப்போது செப்பு நீ
உன்வரவே பதிலதாகும் இனி !

தேசங்கள் தோறும் நிறையும்
பேதங்கள் ஒழிய பிறந்திடு புத்தாண்டே !
குழந்தை கொலைகளும் குலை ஒடுங்கும்
குண்டு வீச்சுகளும் ஒழியட்டும்
மேதினியில் புதுவசந்தம் வீச வா !
காணாதேபோனோர் கதை அறிய ஆவல்...
தேடிக் கண்டறிய வா ! கண்டறியா நாட்டில்!

"மண்டைதீவு மகிழ்நன்"
**கை.பேரின்பநாயகம்**

# சுந்தரச் செய்தி கொண்டு எம்முன்னே வா!

போதையொரு வாள்வெட்டுக் கலாசாரம்
பாதைகள் தோறும் பலி எடுப்பு
பேதையொரு பெருந்தலைவர்களையுமிழந்த
பெருமையுடன் சென்றாண் டேகுகின்றாள்.

சொத்தொடு சுகங்களுமிழந்து எங்கள்
முத்தெனும் உயிர்களுந் தானிழந்து
இத்தரையில் சம உரிமையாய் வாழ்ந்திட
எத்தனை காலந்தான் ஏங்குவது !

இந்த வருடத்திலாவது எமக்கோர்
குந்தக மின்றிய தீர்வுதனை
அந்தப் பொதியினுள் தாங்கினாய் நீ என்ற
சுதந்திரச் செய்தியோடு எம்முன்னே வா.

அண்ணனுக்குரிய உரிமைகளை - இந்தத்
தம்பியும் இங்கே அனுபவித்து
எம்மத மக்களும் ஏற்றமாய் இன்புற
இம் மண்ணில் வாழ்ந்திடும் வண்ணமாய் வா.

பெரும் புகழ் மக்களாய் நாமிருந்தோம் - இன்று
பெருங்குடி மக்களாய் மாறிவிட்டோம்
இழிநிலை யனைத்தையும் மாற்றுவேன் நானென
இரண்டாயிரத்துப் பதினேழே நீவா.

**கவிமணி அன்னைதாஸன்**

# வருக புத்தாண்டே...

ஆண்டே! வருக! - மேலும்
ஆள்பவளே வருக! - எங்களுக்கு
ஆனந்தம் தருபவளே வருக!

கடந்த ஆண்டுகள் எல்லாம்
கல்லை விழுங்கியக்
கடலாய்க் கரைந்து போயின.

படிகாரங்கள் கற்கண்டுகளாய்
பதம் பார்த்தது போல்
இதம் பாராமல் சென்றன ஆண்டுகள்.

இனி
இவையெல்லாம் உன் ஆண்டில்
இல்லாமல் மறைந்து போகட்டும்.

நீ வருவதற்கு முன் - எங்களின்
நிம்மதியையும் அழித்துவிட்டன
சென்ற ஆண்டுகள்...

ஏழை பாழைகளும்
ஏற்றம் காண ஏணியாக மாறி வா!
ஏளனமும், கேலியும் செய்யும்
ஏமாற்றுக்காரர்களை
எட்டி உதைக்கும் ஆண்டாக
ஏற்றமுடன் பிறந்து வா!

**வி. கபிலன்,**
**யாழ்ப்பாணம்.**

# புதிதாய் பிறந்த 2017

உழைத்தவன் அறிவான்
உழைப்பின் அருமை
அதுதான் அவன்
உயர்வுக்குப் பெருமை !!
நல்லதை நினைப்போம் !!
உதவிகள் செய்வோம் !!
மானுடம் வாழ
மனித நேயம் காப்போம் !!
பொல்லா காலம்
போனதென்றே நினைத்து
நல்ல காலம்
பிறந்ததென்றே வாழ்வோம் !!
முயற்சி விதைகளைத் தூவி
நம்பிக்கை பயிர்களை
முளைக்கச் செய்வோம் !!
நம்பிக்கை வைக்கும்
நண்பர்களுக்கு
நட்பே துணை !!
அன்பே கடவுள் !!
புதிதாய் பிறந்த
புத்தாண்டுக் குழந்தையை
அன்பாய் வளர்த்து
அர்த்தமுள்ளதாக்குவோம் !!

**சு.சுவந்திகா**

2017 Happy New Year






Happy New Year 201

புத்தாண்டு வாழ்த்துக்கள்

இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை அன்பு நெஞ்சங்கள் அனைவர்க்கும் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம். உங்கள் உள்ளத்து எண்ணங்கள் அனைத்தும் 2017ஆம் ஆண்டில் நிறை வேறட் டும். அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் ஆசிரியர்

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### ஓய்வு நிலை ஆயரின் டயறி

ஓய்வு நிலை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் யாழ். மறைமாவட்டம் பற்றிய ஆங்கில மொழியிலான டயறியானது குருக்களுக்கான கிறிஸ்மஸ் ஒன்று கூடலின் போது வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

# “2017ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வைத் தரும் ஆண்டாகட்டும்”

யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது புத்தாண்டுச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

என்றுமில்லாதவாறு இலங்கை மண்ணில் நல்லெண்ண அரசு ஒன்று தோன்றி இன, மத, அரசியல் நல்லிணக்கம் உருவாகியிருக்கின்ற இவ்வேளை நீதியோடு கூடிய ஒரு நிரந்தர தீர்வினை யாப்பின் வழி அமைத்துக் கொள்ள மிகச்சிறந்த நேரமாகும் எனத் தெரிவித்த அவர், இந்த நேரத்தை சிறந்த விதமாக இராஜதந்திர ரீதியாகப் பயன்படுத்தி வெற்றியடைய வேண்டியது எமது பணியாகும். - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். தமிழ் அரசியற் தலைவர்களும் புத்திஜீவிகளும் இதற்காக அரும்பாடுபட்டு உழைக்கவேண்டும். குறிப்பாக அரசியற் தலைவர்கள் தமது சொந்த விருப்பு வெறுப்புக்களைத் துறந்து - அரசியல் மற்றும் கட்சி எண்ணங்களை



கடந்து - ஒட்டு மொத்தமாக இணைந்து, அரும்பாடுபட்டு உழைக்க வேண்டுமென தமிழ் மக்கள் பெயரால் வேண்டுகிறோம்- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மலர்ந்துள்ள 2017ஆவது புதிய ஆண்டு தமிழ் மக்கள் அனைவர்க்கும் இறையாசீர் நிறைந்த மகிழ்வான ஆண்டாக, நீதியோடு கூடிய நிரந்தர தீர்வைப் பெற்றுத் தரும் ஆண்டாகட்டும். இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிறிஸ்மஸ் கொணர்ந்த ஒளியை பின்பற்றுவது இயேசுவை பின்பற்றுவதாகும்

திருஅவையின்முதல் மறைசாட்சியான புனித ஸ்தேவான் விழா கிறிஸ்து பிறப்பு பெருவிழாவுக்கு அடுத்த நாள் இடம்பெற்றதை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் ‘‘இயேசுவின் பெயரால் கிறிஸ்தவர்கள் வெறுக்கப்படுவர். -இருளில் பாவங்களை மறைக்க முயலும் உலகம் இயேசு கொணர்ந்த ஒளியைக் கண்டு அஞ்சுவதே இதற்கு காரணம். இவ்வுலகின் இருளை விட்டு விட்டு கிறிஸ்மஸ் இரவு கொணர்ந்த ஒளியைப் பின்பற்றுவது என்பது இயேசுவைப் பின்பற்றுவதாகும். ஒளியின் பாதையை தேர்ந்தெடுப்பதற்கு நமக்கு அழைப்பு விடுக்கும் இயேசுவின் மீது தன் விசுவாசத்தை அறிக்கையிட்டதால் புனித ஸ்தேவான் மறைசாட்சியாக கொல்லப்பட்டார். உண்மையை தேர்ந்து கொண்டதால் புனித ஸ்தேவான் பலியானாலும் இறுதியில் கிறிஸ்துவே வெற்றி வாகை சூடினார். இன்றும் திரு அவை ஒளிக்கும் வாழ்வுக்கும் சான்று பகரும் பணியில் உறுதியுடன் சான்று பகர்ந்துவரும் கிறிஸ்தவர்கள் உண்மையில் பிறரன்பின் சான்றாக வாழ்கிறார்கள்.’’ - என்றார்.


## இந்துக்களின் புனித நகர் வாரணாசியில் ஐந்து மத விழாக்கள் ஒரே நாளில்!

இந்துக்களின் புனித நகரான வாரணாசியில் ஒன்று கூடிய இந்து - இஸ்லாம் - சீக்கிய - ஜெயின் - கிறிஸ்தவப் பிரதிநிதிகள் தங்கள் மத விழாக்களை ஒரே நாளில் கொண்டாடி மகிழ்ந்து வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இயேசுவின் பிறப்பையும். மிலாடி நபியையும், 10 ஆவது சீக்கிய குருவின் பிறப்பையும், 23ஆவது ஜெயின் குருவின் பிறப்பையும், இந்து அறுவடைத் திருவிழாவையும் இணைந்து கொண்டாடிய இந்த ஐந்து மதங்களின் பிரதிநிதிகள் மதங்களிடையே ஒத்துழைப்புக்கும் அமைதிக்கும் இணக்க வாழ்வுக்கும் இத்தகைய கொண்டாட்டங்கள் உதவுகின்றன என்றனர்.

இந்த பல்சமயக் கூட்டத்தில் அனைத்து மதங்களின் பாடல்களுடன் கிறிஸ்மஸ் கீதங்களும் இசைக்கப்பட்டன.

அன்பின் துணைகொண்டு இவ்வுலகையே ஒப்புரவாக்குவதற்கு ஒரு நல்ல வாய்ப்பைத் தருவதே கிறிஸ்மஸ் விழாவின் நோக்கம் என இக்கூட்டத்தில் உரையாற்றிய கத்தோலிக்க குருவான அனில் தேவ் அடிகளார் தெரிவித்தார்.

## கிறிஸ்து பிறப்பை கைதிகளுடன் கொண்டாடிய மட்டக்களப்பு ஆயர்



மட்டக்களப்பு ஆயர் மேதகு பொன்னையா யோசவ் ஆண்டகை 2016ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பெருவிழாவை மட்டக்களப்பு சிறைக் கைதிகளுடன் கொண்டாடினார். திருப்பலியில் மறையுரை ஆற்றிய அவர் ‘‘வாழ்வு என்பது கடவுளின் கொடை. இந்த வாழ்வில் தோல்வியை நினைத்து வேதனையடையக் கூடாது. நம்பிக்கையிழக்கக் கூடாது. இறைவன் நம்முடன் இருக்கின்றார் என்ற நம்பிக்கையில் வேரூன்ற வேண்டும்’’ - என சிறைக் கைதிகளிடம் கேட்டுக்கொண்டார். சிறு குற்றங்களுக்காக தண்டனைத் தொகையைச் செலுத்த முடியாமல் தொடர்ந்து சிறை வைக்கப்பட்டிருந்த மூன்று சிறைக்கைதிகள் 2016 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் திருவிழாவை முன்னிட்டு விடுதலை செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வன்முறைக்கு முன்பாக திரு அவையார் மௌனம் காத்திருக்கவே முடியாது

### மணிலா துணை ஆயர் கருத்துரை

பிலிப்பீன்ஸ் அரசுத் தலைவர் றொட்ரிகோ அவர்களின் போதைப்பொருளுக்கு எதிரான கடும் நடவடிக்கையில் ஒரு நாளைக்கு ஏறக்குறைய முப்பது பேர் வீதம் கொல்லப்பட்டு வரும் வேளை இந்நடவடிக்கையில் திருஅவை மௌனம் காக்க இயலாது என மணிலா நாட்டு துணை ஆயர் கூறியுள்ளார். போதைப்பொருளைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் வர்த்தகர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இடம்பெறும் கொலைகளுக்கு எதிராக பிலிப்பீன்ஸ் மக்கள் குரல் எழுப்ப வேண்டுமென வலியுறுத்தியுள்ள ஆயர், இக்கொலைகளில் தங்கள் உறவுகளை இழந்த குடும்பங்களுடன் குறிப்பாக, ஏழைகளுடன் திரு அவை ஒருமைப்பாட்டுணர்வு கொண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

## கிறிஸ்தவர்களும் இந்துக்களும் உரோமையில் உரையாடல்

அமைதியின் ஒளி உரையாடலில் ‘கிறிஸ்தவர்களும் இந்துக்களும்’ என்ற தலைப்பில் உரோம் கிறகோரியன் பாப்பிறை பல்கலைக்கழகத்தில் நடந்த ஒருநாள் கருத்தரங்கின் தொடக்கவுரையில் கர்தினால் ரூறன் அவர்கள் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் அமைதியின் தூதர்களாகவும் பொதுநலனைக் கட்டியெழுப்புவர்களாகவும் செயற்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

அவர் இத்தாலியிலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்கின்ற இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே உரையாடல் மற்றும் நட்புணர்வில் அமைதியின் ஒளி ஒளிர வேண்டும் என்றார். ‘தாராளமயமாக்கப்பட்ட ஓர் உலகில் அமைதியை ஊக்குவித்தல்’ மற்றும் ‘உரையாடலில் இறைவன்’ போன்ற தலைப்புக்களில் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

## உண்மையின் எண்ணங்கள்

## நிரந்தர தீர்வைத் தரும் ஆண்டாகட்டும்!

2017ஆவது புதிய ஆண்டு தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வைத் தரும் ஆண்டாகட்டும் என்ற யாழ் ஆயரின் வேண்டுகோளை வரவேற்று வலியுறுத்த விரும்புகிறோம். கடந்த 30 ஆண்டு காலப் போரும் தமிழ் மக்கள் நடந்து வந்த பாதையுமே இன்று யாப்பில் உறுதிப்படுத்தப்படக் கூடிய நிரந்தர தீர்வை தரும்படி போராடக்கூடிய ஒரு நிலையைத் தந்துள்ளன. இந்த அரிய வாய்ப்பை உரிய விதமாகப் பயன்படுத்துவது தொடர்புடைய மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரின் பாரிய கடமையாகும். இது தமிழ் மக்களின் எதிர்கால சந்ததியினருக்காக செவ்வனே ஆற்றப்பட வேண்டிய பணியாகும்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், 891 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0777165147, info@tcnlnet.com

# 2017 ஐயும் எதிர் கொள்வோம்

என்ன சொல்ல ...
இந்தப் புத்தாண்டில்
வருடா வருடம்
சொல்லி சொல்லி
கேட்டு கேட்டு
அலுத்தே போனது
இன்னும் என்ன
சொல்ல இருக்கு
சொல்லாததையா
சொல்லப் போறன்?

கற்பனைக் கோட்டைகள்
கனவுகள் புலரும் வரை
புலர்ந்த பின்
வாழ்க்கை ஓடும்
வழமைபோல
சிரிப்புகள் அழுகைகள்
சீண்டல்கள் சினப்புகள்
நம்பிக்கைகள் அவலங்கள்
வெற்றிகள் தோல்விகள்
பெருமைகள் பொறாமைகள்
புதிதாக என்ன இருக்கிறது
எல்லாமே தொடரத்தான் போகிறது

இருந்தும் ஒரு நம்பிக்கை
நாளை மறுநாள்
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு வருடமும்
புலர்வதும் பொலிவதும்
எமது கைகளில்தான்
எதிர்கொள்வோம் நம்பிக்கையுடன்
இந்த 2017 ஐயும்...

எம்.கே.முருகானந்தன்

# புத்தாண்டே தமிழருக்கு நல்லதோர் செய்தியுடன் நிம்மதியைக் கொண்டு வருவாயா?

சென்ற வருடமதின் சோகங்கள் பதிய ஆண்டிலும் வராமல்
சென்று தொலைந்து போகட்டும்,
பான் கீ மூன் வருடத் தொடக்கமதில் வந்து சென்றார்
பாவம் தமிழ் மக்களுக்கு பலன் ஏதும் இல்லை இன்றுவரை
'கான்சர்' வைத்தியசாலைக்கு நிதி கேட்டு கால்நடைப் பயணம்
காலி வரை வெற்றிகரமாய் சென்றது,
கைதிகள் விடுதலையோ காலம் கடந்து செல்கிறது
மீள் குடியேற்றமும் இன்றும் மீள முடியாமல் உள்ளது
மக்களுக்கு சேவை செய்ய மாகாணசபை சென்றசிலர்
மக்கள் சேவையை மறந்து பதவிக்கு போட்டி ஒருபுறம்
எழுக தமிழ் பேரணியும் நடந்தது,
எதிர்ப்பு அலைகளுக்கு தெற்கில் குறைவேயில்லை
ஈழத் தமிழருக்காக குரல் கொடுத்த
தமிழகத்தின் புரட்சித் தலைவி மறைவும் தமிழருக்கு பேரிழப்பு
அவலங்களைச் சுமந்து வாழும் எமக்கு
ஆண்டுகள் ஏழு கடந்து விட்டது, போரும் ஓய்ந்து விட்டது
சொந்த ஊரின் சுகத்திற்காய் காத்திருக்கும் எமக்கு
இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டுபோல - நீயும்
எம்மக்களை வஞ்சிக்க நினைக்காதே !
புத்தாண்டே தமிழர் தம் வாழ்வில் நல்லதோர் செய்தியுடன்
நிம்மதியைக் கொண்டு வருவாயா....?

நயினை விசு - இராசநாயகம்

# சுதந்திர வாழ்வுதர புலர்ந்திடு புத்தாண்டே!

முடிந்துவிட்ட ஆண்டுடனே
முன்வினைகள் போயகன்று
விடிந்துவிட்ட பொழுதுடனே
விமோசன ஆண்டாக
மடிந்தது தீமையென்று
மனங்கள் மகிழ்ச்சி கொள்ள
படிந்துள்ள கறைகளகற்றி
புதுவழியைக் காட்டிவா !

வெந்தழிந்த சொந்தங்கள்
செல்வங்கள் சொத்துக்களை
நொந்தழுது நெடிந்து
வாழா திருந்திடாது
இந்தநிலை மாறியே
எமதுரிமை ஏற்புடைத்து
தந்துவளம் பெருக்கியே
தரணிமகிழ வந்திடுவாய் !

அடுத்தடுத்து ஆட்சிகளில்
ஆண்டாண்ட ஏமாந்து
கெடுத்திட்டோம் வாழ்வினையே
கொடுத்த உறுதிமொழி
அடுத்த தலைமுறையும்
அமிழ்த்தும் படுகுழிகள்
தொடுத்த விலங்குடைத்து
சுதந்திர வாழ்வு தர
புலர்ந்திடு புத்தாண்டே !


- அபீர்ராஜன் -
அன்ரனி பீற்றர்
ஓய்வுநிலை ஆசிரிய
ஆலோசகர்

# வசந்தமாய் வா...

புத்தாண்டே நீ வா
நொடிகளாய் நகர்ந்து
நிமிடங்களாய் நிமிர்ந்து
மணிகளாய் மறைந்து
நாள்களாய் கடந்து
வாரங்களாய் சுழன்று
மாதங்களாய் தகர்ந்து
வருடமாய் வருடிச் செல்லும்
புத்தாண்டே நீ வா!
கடந்தது இலையுதிரா யினும்
வருவது வசந்தமாய் இருக்கட்டும்!

க.பிலோமினா.







# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




13

## தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டக் களம்

விரிவாக்கம் கண்டுவரும் ஆயுதப் போராட்டத்தைப் பூண்டோடு அழிப்பதற்காக அடக்குமுறை வழிகளை அரசு கைக்கொண்டது. விடுதலைப்புலிகள் மீதான தடைச்சட்டத்தை 1979 ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி அன்று நீக்கி விட்டு, அதனிடமாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு அமுலாக்கியது. இதில் அடங்கிய விதிகள், சட்ட ஆட்சியின் நீதி, நியமங்களை உதாசீனப் படுத்துவனவாக அமைந்தன. பதினெட்டு மாத காலம் எவரையும் தடுப்புக் காவலில் வைக்க இடமளித்தது. சித்திரவதை மூலம் பெறப்படும் ஒப்புதல்களை வழக்கில் வாக்குமூலமாக ஏற்க அனுமதித்தது. இந்தச் சட்டம் நிறைவேறியதும் வடபுல தலைநகரான யாழ்ப்பாணத்தில் அவசர காலச் சட்டத்தை அரசு நடைமுறைப் படுத்தியது. பிரிகேடியர் வீரதுங்கவின் தலைமையில் கூடுதலான இராணுவப் படையணிகளைத் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பியது. ஆறு மாதத்தில் 'பயங்கரவாதத்தை'வேரோடு சாய்க்க வேண்டும் என்றும் அவருக்குக் காலக்கெடு விதித்தது. சட்டம் தந்த அதிகாரமும் அரசு கொடுத்த உற்சாகமும் கூடி வர, வன்முறையின் உச்சக் கட்டமாக இராணுவப் பயங்கரவாதத்தைத் தமிழ் மக்கள் மீது பிரிகேடியர் வீரதுங்க ஏவிவிட்டார். நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மிருகத்தனமான சித்திரவதைக்கு ஆளானார்கள்; பலர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய உடலங்கள் வீதியோரம் வீசப்பட்டன. இந்த ஒடுக்குமுறை நடவடிக்கைகள் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் இதயங்களில் பலத்த குமுறலைத் தோற்றுவித்தது. அனைத்துலகச் சட்ட வல்லுநர் ஆணைக்குழுவும் அனைத்துலக மன்னிப்புச் சபையும் பயங்கரவாதச் சட்டம் தொடர்பாகப் பலத்த கண்டனங்களைத் தெரிவித்தன. பிரிகேடியர் வீரதுங்கவுக்கு வழங்கப்பட்ட ஆறுமாத காலக்கெடு முடிவடைந்தபோது, அரச பயங்கரவாதத்தின் பெறுபேறாக விடுதலைப்புலிகளின் படைப்பலம் வெகுவாகப் பெருகியது. கொதிப்டைந்த தமிழ் மக்களின் தேசிய விடுதலை உணர்வும் வெகுவாகப் பொங்கி எழுந்தது.

தமிழ்த் தாயக மண்ணிலே சிறீலங்கா அரசு தனது இராணுவ மேலாண்மையையும் ஒடுக்குமுறையையும் தீவிரப் படுத்திக்கொண்டிருக்க, விடுதலைப் புலிகளின் தலைமை, தனது இயக்கத்தை விரிவுபடுத்திப் பலப்படுத்தும் நடவடிக்கைத் திட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. கிளர்ச்சியை நசுக்கும் அரசின் திட்டத்தை முறியடிப்பதற்கு, மாற்று நடவடிக்கையாக தமது கெரில்லாப் படைக் கட்டமைப்பைப் பலப்படுத்தவும் தமது அரசியல் பிரிவை விரிவுபடுத்தவும் புலிகள் இயக்கத் தலைமை தீர்மானித்தது. ஆகவே, அரசுக்கு எதிரான ஆயுதம் தரித்த இராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் 1979 - 1980 காலப் பகுதியில் தவிர்த்துக் கொண்டு, விடுதலை அமைப்பைப் பலப்படுத்துவதில் முழுமையாகக் கவனம் செலுத்தியது. இந்தக் கால கட்டத்திலேயே சாதாரண மக்களுக்கு அரசியல் அறிவையும் தேசிய விழிப் புணர்வையும் ஊட்டி வளர்த்து, அவர்களை இயக்க அமைப்புடன் அணி சேர்த்து ஒழுங்கமைத்து , தேச விடுதலைப் போராட்டத்தை வெகுசன அரங்கில் முன்னெடுக்கும் நோக்குடன் ஒரு செயற்றிட்டம் வகுத்து நடைமுறைப் படுத்தப்பட்டது. இக்கால கட்டத்தில் தான் புலம்பெயர்ந்து ஈழத் தமிழ் மக்கள் வாழும் வெளிநாடுகளில் கிளை அமைப்புக்களை நிறுவி, அனைத்துலகக் கட்டமைப்பை விரிவுபடுத்திப் பலப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எழுபதுகளின் இறுதிக் கட்டத்தில்தான் லண்டனிலிருந்து இயக்க அரசியல் பரப்புரை வேலைகளில் பங்களிக்க எனக்கும் வாய்ப்புக் கிட்டியது.

1978இன் ஆரம்பத்தில், லண்டனில் கலாநிதி பட்டப் படிப்புக்கான ஆய்வில் நான் ஈடுபட்டிருந்த காலகட்டத்தில், முதன் முதலாக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவ்வேளை விடுதலைப் புலிகள் லண்டன் கிளைப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து பரப்புரைப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். இயக்கத்தின் அரசியல் வேலைத் திட்டத்துக்கு அமைவாக, கொள்கை பரப்புரை எழுத்துக்களாகப் பிரசுரங்களையும் சிறு நூல்களையும் எழுதினேன். ' அரச பயங்கரவாதமும் ஆயுதப் புரட்சியும்', 'சோசலிச தத்துவமும் கெரில்லா யுத்தமும்', 'சோசலிசத் தமிழீழம் நோக்கி', 'தமிழர் தேசிய இனப்பிரச்சினை' (ஆங்கிலம்) ஆகிய சிறு நூல்களும் இவற்றில் அடங்கும். தலைவர் பிரபாகரனின் வேண்டுகோளுக்கு அமைய, சேகுவாரா, மாசே துங் ஆகியோரது போரியல் அனுபவப் படைப்புகளில் இருந்து முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழி பெயர்த்து அனுப்பிவைத்தேன். 1979 இல் முதன்முதலாக பிரபாகரனை



சென்னையில் சந்தித்தமை, இயக்கப் போராளிகளுக்கு அரசியல் வகுப்புகளை நடத்தியமை போன்ற எமது ஆரம்ப கால இயக்க ஈடுபாடுகளை எனது மனைவி திருமதி அடேல் பாலசிங்கம் 'சுதந்திர வேட்கை' என்ற தனது நூலில் விவரமாக விளக்கியிருக்கிறார்.

1981 ஆம் ஆண்டிலிருந்து தமிழீழ தாயகத்தில் சிங்கள இராணுவத்தினதும் காவல்துறையினதும் அடக்குமுறை தீவிரமாகியது. அதற்கு எதிர்விளைவாக விடுதலைப் புலிகளது கெரில்லாத் தாக்குதல்களும் முனைப்புற்றன.

1981 மே 31 அன்று நள்ளிரவில் சிங்களக் காவல்துறையினர் வெறியாட்டமாடி யாழ்ப்பாண நகரைத் தீ வைத்துக் கொளுத்தினர். தீ வைத்தல், கொள்ளையடித்தல், கொலை புரிதலாக அரச பயங்கரவாதம் யாழ்ப்பாணத்தில் தலை விரித்தாடியது. நூற் றுக்கணக்கான கடைகள் தீப்பற்றி எரிந்து சாம்பராகின. யாழ்ப்பாணச் சந்தைச் சதுக்கம் தீயிடப்பட்டது. தமிழ்ப் பத்திரிகைப் பணிமனை ஒன்றும், யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினரது வீடும் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த இனவாத வன்செயல் வெறியாட்டத்தில் என்றுமே மன்னிக்க முடியாத படுபாதக நிகழ்வொன்றும் இடம்பெற்றது. தமிழினத்துக்கு எதிரான கொடூரப் பண்பாட்டுப் படுகொலையாக யாழ்ப்பாணப் பொது நூல்நிலையம் தீ மூட்டி அழிக்கப்பட்டது. 90 ஆயிரத்துக்கும் அதிகமான, விலைமதிக்க முடியாத இலக்கிய, வரலாற்றுப் பதிவேடுகள் தீயில் எரிந்து நாசமாகின. இந்தக் கொடூரமான நிகழ்வு உலகத் தமிழ் மக்களின் இதயங்களைக் கொதிப்புறச்செய்தது. ஜெயவர்த்தனாவின் ஆட்சிப்பீடத்திலிருந்த இரு அமைச்சர்களான சிறில் மத்தியூவும், காமினி திசநாயக்கவும் அவ்வேளை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து சிங்களக் காவல்துறைக் காடையரின் இந்த பயங்கரவாதச் செயல்களை நெறிப்படுத்தி வழிநடத்திக் கொண்டிருந்தார்கள்.

யாழ்ப்பாணம்தீயிடப்பட்டதைஅடுத்து, மூன்று மாதங்களில், நாடளாவிய இனவெறிக் கலவரம் மீண்டும் தலை விரித்து ஆடியது. அரசின் முன்னணி உறுப்பினர்கள் திட்டமிட, ஆயுத படைகள் உதவி புரிய, சிங்களக் காடையரும் அடாவடிக்காரரும் கலவரத்தில் ஈடுபட்டனர். இக்கொடிய சிங்கள இனவெறிக் காட்டுமிராண்டித்தனத்துக்குத் தமிழ் மக்கள் மீண்டும் பலிக்கடா ஆனார்கள். இக்கலவரத்தில் நூற்றுக் கணக்கான தமிழர்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஆயிரமாயிரம் பேர் வீடு வாசல்களை இழந்தார்கள். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை அழிவிலே பறிகொடுத்தார்கள். திட்டமிட்ட வன்செயல் மீண்டும் மீண்டும் தலை தூக்குவதும், தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் அழிவு இழைக்கப்படுவதும், ஒரு திட்டமிட்ட இனப்படுகொலையின் குரூர முகத்தையே அது புலப்படுத்திக் காட்டியது.

(தொடரும்...)

> தமிழினத்துக்கு எதிரான கொடூரப் பண்பாட்டுப் படுகொலையாக யாழ்ப்பாணப் பொது நூல்நிலையம் தீ மூட்டி அழிக்கப் பட்டது. 90 ஆயிரத்துக்கும் அதிகமான, விலைமதிக்க முடியாத இலக்கிய, வரலாற்றுப் பதிவேடுகள் தீயில் எரிந்து நாசமாகின.

# மக்கள் மனதில் இடம்பிடித்த மகேஸ்வரன்

ரவி வாணன், யாழ்ப்பாணம்.

**முன்னாள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனின் ஒன்பதாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

2000 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை ஒரு குறுகிய காலம் அரசியலில் இருந்தாலும் சகல அரசியல் தலைவர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக மறைந்த முன்னாள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் திகழ்ந்தார். அன்றைய காலமானது யுத்தக் கெடுபிடிகள் கூடிய காலமாக இருந்தது.

அந்த நிலையில் வடக்கு, கிழக்கிலும் கொழும்பு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் தமிழ் மக்கள் துன்ப துயரங்களையும் படையினரதும் பொலிஸாரதும் கெடுபிடிகளையுமே சந்தித்து வந்தனர். தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக மகேஸ்வரன் குரல் கொடுத்ததுடன் போராட்டங்களையும் நடத்தினார். தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தமையால்தான் மகேஸ்வரனது உயிர் பறிக்கப்பட்டது. அதுவும் புனித ஸ்தலத்தில் வைத்து, ஈவு இரக்கமின்றி அவரை கயவர்கள் சுட்டுக் கொன்றனர்.

1999 ஆம் ஆண்டு ஐ.தே.க. வேட்பாளராக களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக மகேஸ்வரன் வேலை செய்தார். யாழ். குடாநாட்டில் ரணிலுக்குக் கணிசமான வாக்குகள் பெறப்பட்டன. அன்று முதல் ஐ.தே.க.வுடன் தன்னை இணைத்துக் கொண்ட மகேஸ்வரன் 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

பெரும்பான்மையின தேசியக் கட்சியான ஐ.தே.க. 56 ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் ஓர் உறுப்பினரைப் பெற்றிருந்தது. மகேஸ்வரன் அன்று முதன் முதலாக ஐ.தே.கவில் போட்டியிட்ட போது, அவர் எங்கே வெல்லப் போகிறார் என்று ஏனைய கட்சிகளின் தலைவர்கள் எள்ளி நகையாடினர். ஆனாலும் தனது வெற்றி உறுதியென்ற நிலைப்பாட்டில் மகேஸ்வரன் இருந்தார். கடும் பிரசாரத்தில் ஈடுபட்டார். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்று சரித்திரம் படைத்தார். தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் வந்த அவர் தமிழ் மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக குரல் கொடுத்தார்.

2001 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகாவால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலிலும் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு மகேஸ்வரன் இரண்டாவது தடவையாகவும் நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார். அப்போது ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியதுடன் ரணில் பிரதமரானார். அரசில் இந்து கலாசார அமைச்சு மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை 3 வருடங்கள் அவர் இந்து கலாசார அமைச்சராகப் பணியாற்றினார். அமைச்சராக இருந்தபோது அவர் தமிழ் மக்களுக்கும் இந்து மதத்துக்கும் செய்த சேவைகள் ஏராளம். தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி ஆலயத்தின் தேர் 1983 ஆம் ஆண்டு எரிக்கப்பட்டிருந்தது. இந்த ஆலயத்துக்குப் புதிய தேரை மகேஸ்வரன் அமைத்துக் கொடுத்தார். இதேபோல் அவர் பிற மதஸ்தலங்களுக்கும் உதவி புரிந்தார்.



யாழ்ப்பாணத்தில் வீடமைப்புத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்களை ஏற்படுத்தினார். பல கிராமங்களுக்கு மின் இணைப்புகளை வழங்கினார்.

அமைச்சராக பதவி வகித்த காலத்தில் 2 ஆவது உலக இந்து மாநாட்டைக் கொழும்பில் நடத்திய பெருமை இவரையே சாரும்.

அரசில் இந்து கலாசார அமைச்சராக இருந்த காலகட்டத்தில் தமிழ் மக்களுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற கட்சிக் குழுக் கூட்டத்தில் நிதி ஒதுக்கீடு தொடர்பில் பிரதமருடன் முரண்பட்டு, வெளிநடப்புச் செய்திருந்தார். இவ்வாறு வெளிநடப்புச் செய்தவரை அழைத்து வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வரை அனுப்பியிருந்தார். இதனையடுத்து உரிய நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் படையினரின் கெடுபிடிகள் அதிகமாக இருந்ததைக் கண்டித்து அமைச்சராக இருந்து கொண்டே, பலாலி வீதியை மறித்து இராணுவ வாகனங்களை தடுத்து அவர் போராட்டம் நடத்தியிருந்தார்.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் இடை நடுவில் கலைக்கப்பட்டபோது யாழ்ப்பாணத்தில் ஐ.தே.கவின் சார்பில் இவர் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென கட்சிகள் ஒன்றுபட்டமையால் அந்த ஒற்றுமைக்கு குறுக்கே நிற்காது மகேஸ்வரன் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட முன்வந்தார்.

கொழும்பு கொச்சிக்கடை, ஜிந்துப்பிட்டியில் பிரசாரத்தில் ஈடுபட்டபோது அவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. தலையில் படுகாயம் ஏற்பட்ட போதிலும் அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியிருந்தார். உண்மையில் இந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் அவரது உயிர் போய் மீண்டும் வந்தது என்றே கூற வேண்டும். படுகாயமடைந்திருந்த மகேஸ்வரன் அப்பலோ தனியார் மருத்துவமனையில் இருந்து கொண்டே இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் எதிர்க்கட்சி எம்.பியாகத் திகழ்ந்தார். தமிழ் மக்கள் வகைதொகையின்றி கைதுசெய்யப்பட்ட போதும் கடத்தப்பட்ட போதும் காணாமல்போன போதும் துணிந்து நின்று நாடாளுமன்றிலும் வெளியிலும் குரல் கொடுத்தார்.

கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் பஸ்களில் ஏற்றப்பட்டு வவுனியாவுக்கு அனுப்பப்பட்ட போது, நாடாளுமன்றத்தில் தனது சட்டையைக் கழற்றி எறிந்து போராட்டம் நடத்தினார்.

தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு பூஸா முகாம் உட்பட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அங்கு சென்று தமது பிள்ளைகள் உறவினர்களை பார்வையிடுவதற்காக விசேட பஸ் சேவைகளை ஏற்பாடு செய்திருந்தார்.

தமிழ் இளைஞர், யுவதிகள் வகைதொகையின்றி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டித்து கொழும்பு காலிமுகத்திடலிலிருந்து அலரி மாளிகை வரை மக்களை ஒன்று திரட்டி பேரணி நடத்தினார். இதனால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கோபத்துக்கும் அவர் உள்ளாகியிருந்தார்.

மகேஸ்வரன் செய்த பணிகள் மக்கள் மனதில் என்றுமே இடம் பிடித்துள்ளன. இதனால்தான் அவர் என்றுமே மக்களின் மனதில் நிறைந்து நிற்கிறார். மகேஸ்வரன் மறைந்ததை அடுத்து தற்போது அவரது பணியை முன்னெடுக்கும் வகையில் அவரது துணைவியார் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அரசியல் பணியில் ஈடுபட்டு வருகின்றார்.


# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## நீள நினைக்கின்றோம்

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தன – எம்மீது
அன்பு சொரிந்த உங்களை தேடி நாம் அலைகின்றோம்
எண்ணங்கள் ஈடேற எமக்கு வண்ணம் தந்தவரே!
விண்ணேகி இருக்கின்றீர் மண்ணிலிருந்து தவிக்கின்றோம்
'விட்டுக் கொடுக்காத உங்கள் தமிழுணர்வால்
எட்டமுடியாப் புகழோடும் – பிறர்
தொட்டுக் காட்டும் சிறப்போடும்'
வாழ்ந்த உங்கள் நினைவுகள் எமக்குள்ளே
என்றென்றும் நிலைத்திருக்கும் அப்பா!
உங்கள் நினைவுகளை நீள நீள
நினைந்துருகுகின்றோம் அப்பா...



அமரர்
தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்
யாழ்., கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்)

தோற்றம் 10.01.1966
மறைவு 01.01.2008

பவதாரணி (மகள்)
பிரணவன் (மகன்)
பவித்திரா (மகள்)
276, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :
021 222 1877

தகவல் :
திருமதி விஜயகலா மகேஸ்வரன்
இல.32, 36ஆவது ஒழுங்கை,
கொழும்பு -06
தொலைபேசி :
0112360679

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com



# தங்களுக்கு வாக்களிச்சதாலை சனத்தை முட்டாள்கள் என்று நினைக்கினம் போல...

''அப்பலோ ஆஸ்பத்திரியில் ஜெயலலிதாவுக்கு என்ன நடந்தது என்று தெரிய வந்தாலும் கூட, எங்கடை அரசியல்வாதிகள் பேச்சு வார்த்தைகளில் என்ன கதைக்கினம் என்பது எங்களுக்குத் தெரிய வராது'' என்று விசனப்பட்டுக் கொண்டே கச்சான் கடகத்தைத் திறந்தாள் செல்லாச்சி.

ஏற்கனவே வாத்தியாருடன் வந்திருந்த ஏரம்பர் ''சம்பந்தர் ஐயா டெல்லிக்குப் போட்டு வந்ததைச் சொல்லுறாய் போல இருக்கு. அவர் மருத்துவம் பார்க்கப் போன இடத்திலை சந்திச்சவையோடை கதைச்சிருக்கிறார். முக்கியம் எண்டா சொல்லுவினம்தானே'' என்று அமைதிப்படுத்தினார்.

''மருத்துவர் இல்லாத ஆஸ்பத்திரியிலை மருந்தெடுக்கக் காத்திருக்கிற நாங்கள் போட்ட வாக்குகளாலைதான், இன்றைக்கு இவை ஆகாசக் கப்பலிலை போய் வெளிநாட்டிலை மருத்துவம் பார்க்கினம். அந்த நன்றிக்கடனுக்காவது, எங்களுக்கு விசுவாசமாக நடந்தால் போதும்'' என்று கூறிவிட்டு வியாபாரத்தைக் கவனித்தாள் செல்லாச்சி.

''என்னவாம் செல்லாச்சி?'' என்றபடி ரூபனுடன் வந்தமர்ந்தான் ஜீவன்.

''சம்பந்தர் ஐயா இந்தியாவுக்குப் போன கதையைச் சொல்லுறா'' என்றார் வாத்தியார்.

''எனக்கென்னவோ, இனி வடக்கிலை இந்திய நிறுவனத்தின் பொருத்து வீடு கட்டப்படும் போலதான் இருக்கு'' என்று ஆருடம் சொன்னான் ரூபன்.

''தம்பி உள்குத்துக் குத்துறீர் போலை கிடக்கு'' என்று சிரித்தார் வாத்தியார்.

''நான் ஒரு குத்தும் குத்தவில்லை. சனம் கதைக்கிறதைச் சொன்னன்'' என்றான் ரூபன்.

''பொருத்து வீடு வேண்டாம் என்று தடுக்கிறவை, மாற்றாக ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்யாத வரை, தடுக்கிற முயற்சி வெற்றியளிக்காது'' என்று யதார்த்தத்தைச் சொன்னார் வாத்தியார்.

''முன்னர் சொல்லப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி, கணினி, மின் இணைப்பு போன்ற வசதிகள் இப்ப இல்லையாம்'' என்றான் ஜீவன்.

''ஒழுங்கைக்குள்ளை இருக்கிற காணிக்கு மின் இணைப்புப் பெற மின்சார சபைக்கு அதிக பணம் கட்ட வேண்டியிருந்ததாம். பொருத்து வீட்டாலை அந்தக் காசு மிச்சம் என்று சந்தோசப்பட்டவை 'தடுத்தாலை அந்த வசதி இப்ப போட்டுதே' என்று அங்கலாய்க்கினமாம்'' என்று அறிந்ததைச் சொன்னான் ரூபன்.

''எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் 'குழாய்க் கிணறு, மின் இணைப்பு, மலசல கூடம், சூரிய மின்கலம், கணினி என்று எல்லாத்தையும் இப்ப பெறுவம். பிறகு என்ரை காசிலை வீட்டைக் கட்டுவம் என்றுதான் பொருத்து வீட்டுத் திட்டத்துக்கு பதிஞ்சனான்' என்று சொல்லுறார்'' என்றான் ஜீவன்.

''தங்களுக்கு வாக்களிச்சதாலை சனங்களை முட்டாள்கள் என்று அரசியல்வாதிகள் நினைக்கினம். ஆனால் சனம் கூட்டிக் கழிச்சு கணக்கை சரியாய்த்தான் போடுதுகள்'' என்றாள் செல்லாச்சி.

''ரவிராஜ் கொலை வழக்கை சிங்கள ஜூரிமாரவைச்சு இப்பிடிச் செய்து போட்டாங்களே'' என்று கவலைப்பட்டார் ஏரம்பர்.

''அதிலை எனக்கு ஒரு விசயம் விளங்கேல்லை'' என்று பீடிகை போட்டான் ஜீவன்.

''உனக்கு விளங்கேல்லை என்றால் அதிலை வில்லங்கம் இருக்குமே'' என்று சீண்டினாள் செல்லாச்சி.

அதனைக் கவனியாத ஜீவன் ''ரவிராஜுடன் கொல்லப்பட்டவர் சிங்களப் பொலிஸ்காரர். குற்றஞ்சாட்டப்பட்டவையிலை சிங்களவரோடை தமிழரும் இருக்கினம். அதிலையும் 'கொலை செய்தனாங்கள்' என்று சாட்சி சொன்னவரும் சிங்களவர். இப்படி இரண்டு தரப்பும் கலந்து கிடக்கிற வழக்கிலை தமிழனுக்கு எதிராக சிங்களவன் சதி செய்து போட்டான் என்று சொல்லுறது எவ்வளவுதூரம் சரியாக இருக்கும்?'' என்று சந்தேகத்தைக் கேட்டான் ஜீவன்.

''நானும் சேர்ந்து கொலை செய்தனான்' என்று சொன்னவரும் விடுதலையாகி இருக்கிறார் என்றால் அவர் சொன்னவை நீதிமன்றத்தில் சந்தேகமில்லாமல் உண்மை என்று நிரூபிக்கப்படவில்லை என்று தானே அர்த்தமாகும்'' என்று குட்டையைக் குழப்பினான் ரூபன்.

''நானும் பழைய பேப்பர்களையெல்லாம் துளாவிப் பார்த்தன். நீதிமன்றத்திலையோ, நாடாளுமன்றத்திலையோ, வெளியிலையோ, சிங்களவர் மட்டும் அடங்கிய ஜூரி சபைக்கு எங்கடை ஆக்கள் எதிர்ப்புத் தெரிவிச்சதாகத் தகவல் ஒன்றையும் காணேல்லை. இப்பதான் எல்லோரும் குத்தி முறியினம்'' என்றார் ஏரம்பர்.

''ரவிராஜ் வழக்கிலைதான் இலங்கை அரசு, தமிழர் தரப்பை ஏமாத்திறது தெரியவந்த மாதிரி எல்லோரும் வாயிலையும் வயித்திலையும் அடிச்சுக் குழறுகிறதைப் பார்த்தால் என்ன சொல்லுறதென்றே தெரியவில்லை'' என்று நெற்றியிலடித்துக்கொண்டார் வாத்தியார்.

''இந்த வழக்கை வைச்சுக்கொண்டு 'ஒற்றையாட்சியிலை இப்பிடித்தான் நடக்கும், நாங்களே எங்களுக்கான சட்டங்களை உருவாக்கிற மாதிரியான தீர்வுதான் வேண்டும்' என்றெல்லே அடிச்சுக் கதைக்க வேணும். ஆனால் அதை விட்டிட்டு ஐக்கியநாடுகள்சபையின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற இன்னும் ஒரு வருசம் அவகாசம் கொடுக்க எல்லே எங்கடையாக்கள் முன்வருகினம்'' என்று விசனித்தான் ரூபன்.

''கைதிகள் விடுதலை அது இது என்று நிபந்தனைகள் விதிக்கினம் தானே?'' என்றார் ஏரம்பர்.

''முன்னர் நல்லாட்சி அரசாங்கத்தை அமைக்க முட்டுக் கொடுத்த போது, நிபந்தனை விதிக்கேல்லை என்று குறை சொல்லப்பட்டது. இப்ப கூட உள்ளூராட்சித் தேர்தலை மனதிலை வைச்சுத்தான் நிபந்தனை விதிக்கினம். ஒரு வருஷம் முடிய அரசாங்கம் ஏமாத்திப்போட்டுது என்று சொல்லப் போகினம்' என்றெல்லே சனம் கதைக்குது'' என்று விரக்தியுடன் சொன்னான் ஜீவன்.

''எல்லாத்துக்கும் சந்தேகப்படக் கூடாது தம்பி. 'இப்ப எடுத்தேன்; கவிழ்த்தேன்' என்று நடக்கவும் ஏலாது'' என்று நியாயப்படுத்தினார் ஏரம்பர்.

''யார் குத்தினாலும் அரிசியானால் சரி' என்று தானே சனம் இருக்குது. ஆனால், கடந்தகாலம் ஏமாற்றத்தைத்தானே தந்திருக்கு'' என்றான் ஜீவன் வேதனையுடன்.

''இப்ப கூட காலம் பிந்தவில்லை. இந்த நிபந்தனைகளை, அடுத்த தேர்தலுக்கு முதல் - அது எந்தத் தேர்தலாகவும் இருக்கட்டும் - அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்று காலக்கெடு விதிக்கட்டும்'' என்று சொன்னான் ரூபன்.

இதைக்கேட்டு ''ம்ஹும்'' என்று பெருமூச்சு விட்ட வாத்தியார் ''எங்கடை அரசியல்வாதிகள் எல்லோரும் அடுத்த தேர்தலை மட்டுமே மனதில் வைத்து, மற்றவை மீது சேறடிக்கிறதும், பிழை பிடிக்கிறதும், உணர்வுகளைத் தூண்டிவிட்டு வாக்குப் பொறுக்கிறதிலும் கவனமாக இருக்கினம். இதுகளிலை செலவழிக்கிற சக்தியிலை கால்வாசியைச் செலவழிச்சு, ஒற்றுமையாகச் சேர்ந்து, ஒரேகுரலிலை கதைச்சாலே போதும்; எங்கடை பிரச்சினை தீரும்'' என்று கனவு காண்பவர் போலச் சொன்னார்.

அப்போது ரூபன் ''அ.தி.மு.கவுக்கு சசிகலா தலைமை ஏற்றிருக்கிறா. அடுத்து வாற ஐந்து வருடங்களுக்கு, தமிழகத்திலை இருந்து ஒரு உதவியையும் எதிர்பார்க்க ஏலாது. அதுக்குப் பிறகு தமிழகம் இருக்குமோ தெரியாது'' என்று எரிச்சலுடன் சொன்னான்.

''இங்கே மட்டும் என்னத்தை எதிர்பார்க்கிறது. ஒரு தரப்பு அரசாங்கத்தோடை குலாவிக் கொண்டே 'போராடுவோம்; பொங்கல் வைப்பம்' என்று வீரவசனம் பேசும், எதிர்த்தரப்பு அரசாங்கத்திலை பிழை சொல்லுறதையே முழு நேரக் கடமையாக உரை எழுதி வாசிக்கும். இடையிலை இருக்கிற தரப்பு 'பிரபாகரன் வீரன்' என்று கண்டுபிடிச்சு எங்களுக்குச் சொல்லும். இதுகளுக்கிடையிலை நாங்களும் 'வேறை என்ன செய்ய ஏலும்' என்று சமாதானமாகி காலத்தை ஓட்டுவம்'' என்று சினந்தாள் செல்லாச்சி.

இதைக்கேட்டு வேகமாகத் தலையை ஆட்டி மறுத்த வாத்தியார் ''செல்லாச்சி, போராட்டத்தில் தோற்ற இனம் கூட மீண்டும் வென்றிருக்கிறது. ஆனால் தங்களுக்காக வேறு யாராவது போராடிட்டும் என்று சோம்பிய இனம் வாழ்ந்ததாக வரலாறே கிடையாது'' என்றார்.

''அப்ப நீங்களும் நானும் துவக்குத் தூக்க வேணும் என்று சொல்லுறியளே?'' என்று கிண்டலாகக் கேட்டார் ஏரம்பர்.

''எங்களையே எங்களாலை தூக்க ஏலாமல் கிடக்கு....துவக்குத் தூக்க ஏலுமோ'' என்று நண்பரைப் பார்த்துச் சிரித்தபடி சொன்ன வாத்தியார் ''மக்கள் அரசியலில் என்ன நடக்கிறது, என்ன நடக்க வேணும் என்று அக்கறை காட்டினாலே போதும். தவறானவர்கள் அரசியலில் இருந்து ஓரம் கட்டப்படுவார்கள். அப்போதுதான் அடுத்த சந்ததிக்காவது நல்ல வாழ்க்கை கிடைக்கும்'' என்று சொல்லி முடித்தார்.

அப்போது பேப்பர்தம்பி ''இழுபட்ட விசாரணை ஒருவழியாக முடியுதாம்'' என்றபடி வந்தான்.

''சர்வதேச விசாரணையோ?'' என்று கேட்டார் ஏரம்பர்.

''பல்கலைக்கழகத்திலை பாலியல் குற்றச்சாட்டிலை சிலரை, படிப்பிக்கிற வேலையாலை இடைநிறுத்தி வைச்சவை. ஞாபகம் இருக்கோ?'' என்று கேட்டான் பேப்பர் தம்பி.

''துணைவேந்தர் கூட பெண்கள் மாநாட்டில் பகிரங்கமாக ஒத்துக் கொண்ட விசயம்தானே'' என்றான் ஜீவன்.

''அவர்களிலை ஒருவர் மீண்டும் வேலையிலை சேர்க்கப்படப் போறார் என்று கதைக்கினம்'' என்றான் பேப்பர்தம்பி.

''இதென்னடாப்பா... ரவிராஜ் வழக்கே பரவாயில்லைப் போலையிருக்கே?'' என்று அங்கலாய்த்தான் ரூபன்.

''எதிலையும் ஆதாரம் காட்ட வேணும். இந்த விசயத்திலை பல காரணங்களாலை நிரூபிக்கிறது கஷ்டம்தானே'' என்று நிலைமையைச் சொன்னான் பேப்பர்தம்பி.

''இதிலை ஒரு ஆளைத் தண்டிக்கிறதோடை நின்று பிரயோசனம் இல்லை. தவறு இனிமேல் நடக்காமல் இருக்க வழி தேடவேணும்'' என்றார் வாத்தியார்.

''அதுக்கு என்ன செய்யிறது?'' என்று கேட்டான் ரூபன்.

''இந்தப் பிரச்சினைக்கு அடிப்படையாக இருப்பவை விடைத்தாள் திருத்தலும், மதிப்பெண் இடுதலும் இரகசியமாகவே வைக்கப்படுவதுதான். மதிப்பெண்ணை வைத்துத்தான் பிள்ளைகளை வெருட்டுகினம் என்று தானே சொல்லுகினம். அதை மாற்றினால் பாலியல் குற்றச்சாட்டுகள் வராது என்று நம்புகிறன்'' என்று விளக்கினார் வாத்தியார்.

''விவரமாகச் சொல்லுங்கோ'' என்றார் ஏரம்பர்.

சொல்லத் தொடங்கினார் வாத்தியார்.

''தமிழகப் பல்கலைக் கழகங்களிலை குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி, திருத்திய விடைத்தாளின் பிரதியை மாணவர் பெற முடியும். திருத்தியது திருப்தியில்லை என்றால் மாணவர் முன்பாகவே மீண்டும் திருத்த வாய்ப்புண்டு. இந்தளவுக்கு வெளிப்படைத் தன்மை இருப்பதால் 'மதிப்பெண் வேண்டுமென்றால் இணங்கிப் போ' என்று மிரட்ட முடியாது. இதை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலை கொண்டுவந்து முன்மாதிரியாக இருக்கலாமே?'' என்று கேட்டு முடித்தார் வாத்தியார்.

''அடுத்த துணைவேந்தராவது இதுக்கு முயற்சி செய்து பல்கலைக்கழகத்தை முன்னேற்றட்டும்'' என்றாள் செல்லாச்சி.

அப்போது தனக்குள் சிரித்தான் பேப்பர் தம்பி. அதைக்கண்ட ரூபன் ''என்ன, உமக்குள்ளை சிரிக்கிறீர். சொன்னால் நாங்களும் சிரிப்பமெல்லே'' என்றான்.

சிரித்த காரணத்தை சொன்னான் பேப்பர் தம்பி.

''சில வருடங்களுக்கு முன்னர், பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் பதவியேற்பதில் பிரச்சினை வந்தது ஞாபகம் இருக்குத் தானே. அந்த நேரத்திலை சந்திக் கடையிலை ஒருத்தர் 'குறித்த பேராசிரியர் துணைவேந்தரானால், பல்கலைக்கழகத்தை சர்வதேசத் தரத்துக்கு உயர்த்துவார்' என்று சொன்னார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த இன்னொருவர் சொன்னார் 'கட்டடங்களை கட்டி, கொம்பியூட்டர்கள் வைச்சு பல்கலைக்கழகத்தை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவார். ஆனால் 'அங்கே இருக்கிற ஆக்களை எப்படி சர்வதேச தரத்துக்கு உயர்த்துவார்' என்று கேட்டார். அது ஞாபகம் வந்தது'' என்று சொன்னான் பேப்பர் தம்பி.


''அப்பிடி குறைவாக நினைக்கக் கூடாது. சர்வதேசத்துக்கு பாடம் நடத்திற தகுதியும் திறமையும் இருக்கிறவையும், நீதி நேர்மையாக நடக்கிறவையும் அங்கே இருக்கினம். ஆனால் சிலர் செய்யிற கீழ்த்தரமான வேலைகளாலை எல்லோருக்கும் கெட்ட பெயர்'' என்று உண்மை நிலைமையை விளக்கினார் ஏரம்பர்

''அது உண்மைதான் ஏரம்பர், ஆனால் 'ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்' என்பதை அங்கிருக்கிறவை உணர வேணும். தவறு செய்யிறவன் மட்டுமில்லை..... தவறு நடக்கும்போது தனக்குச் சம்பந்தமில்லை என்று முகத்தைத் திருப்புகிறவனும் குற்றவாளிதான். இனியாவது நேர்மையானவை சேர்ந்து பல்கலைக்கழகத்திலை இப்படியான குற்றச்சாட்டுகள் வராமல் தடுக்க வேண்டும்'' என்றபடி எழுந்தார் வாத்தியார்.

மற்றவர்களும் எழுந்து நடக்க, கச்சான் கடையைக் கட்டத்தொடங்கினாள் செல்லாச்சி.

# தொழில்நுட்பக்கதிர்

## தொலைந்த ஆண்ட்ராய்ட் போனை கண்டறிவது எப்படி?



கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் ஸ்மார்ட்போன்கள் தொலைக்கப் படுவதும் அல்லது களவாடப் பட்டு விடுவதுமான ஏராள மான சம்பவங்கள் நடந்து கொண்டே தான் இருக்கின்றன. தொலைக்கப்பட்ட ஆண்ட்ராய்ட் கருவிகளைக் கண்டுபிடிப்ப தற்கு எளிமையான பல வழிகள் உள்ளன.

அவற்றில் ஒரு சிறப்பான வழி தான் Find My Phone.

இப்போது, இந்த எளிமை யான வழியின் மூலம் தொலைந்த கைபேயைக் கண்டறியும் வழிமுறை களைப் பார்க்கலாம்.

* முதலில் உங்கள் கணனியில் ப்ரவுஸரை ஓபன் செய்து தொலைந்த உங்கள் போனில் பயன்படுத்திய கூகுள் அக்கவுண்டை லொக்-இன் செய்யவும்.
* லொக் இன் செய்த பின்பு, search பெட்டியில் find my phone என டைப் செய்யவும்.
* இப்போது, உங்கள் மொபைல் இருக்கும் இடத்தின் பின் பொய்ண்ட் தெரியவரும்.
* பின்பு, சரியான இடத்தைக் கண்டறிய மெப்பில் தெரியும் ரிங் என்ற பொத்தானை அழுத்தவும்.
* ரிங் பொத்தானை அழுத்தியவுடன் உங்கள் கைபேசி பலமான சத்ததுடன் ஒலி எழுப்ப ஆரம்பிக்கும்.
* ஒரு வேளை உங்கள் கைபேசி உங்கள் அருகில் இருந்தால் இந்த வழியானது உங்களுக்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

## Lenovo அறிமுகம் செய்யும் Lenovo Phab 2 Pro ஸ்மார்ட் கைபேசி!



சிறந்த ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்து வரும் Lenovo நிறுவனம் தற்போது புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசி ஒன்றை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

Lenovo Phab 2 Pro எனும் இக் கைபேசியை முதன் முதலாக சீனாவில் அறிமுகம் செய்து வைக்க அந்நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இந்தக் கைபேசி 6.4 அங்குல அளவு, 2560 x 1440 Pixel Resolution உடைய IPS தொழில்நுட்பத்தினாலான திரையியைக் கொண்டுள்ளது.

மேலும் Qualcomm Snapdragon 652 Processor உம், பிரதான நினைவகமாக 4GB RAM மற்றும் 64GB சேமிப்பு நினைவகம் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

பிரதான கமெரா 16 மெகாபிக்சல்களை உடையதாகவும், முன் பக்கக் கமெரா 8 மெகாபிக் சல்களைக் கொண்டதாகவும், மின்கலம் 4050mAh உடையதாகவும் காணப்படுகின்றது.

## குறுந் தகவல்களுக்கென ஓர் இணையதளம்!




இன்றைய தகவல் தொடர்புக்குக் கணினியைத் தொடர்ந்து தொலைபேசிகள், கையடக்கக் கணினி (Tablet ) போன்றவை வந்த பின்பு உடனுக்குடன் எளிமையாகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடிகிறது. குறிப்பாக, இளம் வயதினர் தொலைபேசிகளிலிருந்து குறுந்தகவல்கள், மேற்கோள்கள், கவிதைகள் என்று பல்வேறு தகவல்களைத் தங்களுடைய நண்பர்களுக்கிடையே பகிர்ந்து கொள்கின்றனர்.

தங்களுடைய‌ப் பகிர்வுகளுக்கு நண்பர்களிடமிருந்து விருப்பம் (Like), கருத்துகள் (Comments) போன்றவை அதிக அளவில் கிடைக்க வேண்டும் என்று பலரும் ஒவ்வொரு நாளும் பதிவு செய்வதற்கானப் புதிய தகவல்களைத் தேடிக் கொண்டே இருக்கின்றனர். இவர்களின் தேடுதலுக்கு உதவும் விதமாகப் பல்வேறு குறுந்தகவல்களைக் கொண்ட ஓர் இணையதளம் தான் http:www.allbestmessages.co என்பதாகும்.

இந்த இணையதளத்தில் குறுந்தகவல்கள், மேற்கோள்கள், கவிதைகள், வேடிக்கையான முகநூல் நிலைத்தகவல்கள், பிறந்தநாள் தகவல்கள், அன்பு மேற்கோள்கள், கிறிஸ்மஸ் வாழ்த்துகள் போன்ற தலைப்புக்களில் இடம்பெற்றிருக்கின்றன.

குறுந்தகவல்கள் எனும் தலைப்பில், அறிவுரை, கோபம், அன்பு, உணர்வு, ஊக்கம், வயதானவர், நாப்பயிற்சி, கருணை, இனிப்பு, திருமணம், பிறந்தநாள், ஆண்டு விழா, தீபாவளி, அவமதிப்பு, வருத்தம், ஆறுதல், இரங்கல் என்பது போன்ற 120 வகையான தலைப்புகளில் பல்லாயிரக்கணக்கான குறுந்தகவல்கள் இந்த இணையத்தில் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன.



## LG அறிமுகம் செய்யும் காற்றில் மிதக்கும் ஸ்பீக்கர்

LG நிறுவனம் அடுத்த ஆண்டு அமெரிக்காவில் நடைபெற இருக்கும் நுகர்வோர் மின்சாதன விழாவில் (CES) காற்றில் மிதக்கும் ஸ்பீக்கர்களை அறிமுகம் செய்யவுள்ளது.

எல்ஜி நிறுவனம் அறிமுகம் செய்ய இருக்கும் இந்த ஸ்பீக்கர்கள் Bluetooth தொழில்நுட்பம் சார்ந்து இயங்கும் என்பதோடு காற்றில் எவ்வித உதவியும் இன்றி மிதக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எல்ஜி அறிமுகம் செய்ய இருக்கும் புதிய Bluetooth Speaker LG PJ9 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

எல்ஜி ஸ்பீக்கர்களுடன் வழங்கப்படும் லீவியேஷன் ஸ்டேஷனில் (Leviation Station) சக்திவாய்ந்த மின்காந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை ஸ்பீக்கர்களை சில செ.மீ. உயரத்தில் மிதக்க வைக்கின்றன.

இந்த ஸ்பீக்கர்களில் சார்ஜ் குறைவடையும் போது லீவியேஷன் ஸ்டேஷனில் இருந்து தானியங்கியாகவே சார்ஜ் செய்யப்படும் என்றும் கூறப்படுகின்றது. அத்துடன் இது நீர் உட்புகாத தன்மையுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# இலங்கை அரசிடமுள்ள 122 படகுகளை மீட்க வேண்டும்

## மத்திய அரசிடம் ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, ஜன.01

தமிழக மீனவர்களின் படகுகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ள ராமதாஸ் இலங்கை அரசிடம்இருந்து 122படகுகளைமீட்கநடவடிக்கை எடுக்க வேண்டும்.

பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழக மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 122 விசைப் படகுகளும், அவற்றில் இருந்த மீன்பிடி கருவிகளும் அரசுடைமையாக்கப்பட்டு விட்டன என்று இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்திருக்கிறார். இது கண்டிக்கத் தக்கதாகும்.

தமிழக மீனவர்களிடம் இருந்துகடந்தசிலஆண்டுகளில் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை நாட்டுடைமை ஆக்கியதன் மூலம் அந்தப் படகுகளைத் தங்கள் மீனவர்களுக்குவழங்க இலங்கை அரசு திட்டமிட்டிருக்கிறது.

தமிழக மீனவர் களின் படகுகளை இலங்கை பறிமுதல் செய் வதற்கான துணிச்சலைவழங்கியதே இந்தியா என்பதுதான் கவலையளிக்கும் விடயமாகும். வழக்குகள் இன்னும் முடியாத நிலையில், இலங்கை அரசு தன்னிச்சையாக படகுகளை நாட்டுடைமை ஆக்கியிருப்பதை ஏற்க முடியாது. இதை இந்திய அரசு ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது.

ஒவ்வொரு படகும் 25 குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கக் கூடியவை. இதன் மூலம் 3 அயிரத்து 50 குடும்பங்கள், அதாவது 15 ஆயிரத்து 250 பேரின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டிருக்கிறது. இந்த இழப்பை மீனவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது.

எனவே, இலங்கை அரசிடம் உள்ள 122 படகுகளையும் மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் படகுகளை இழந்த மீனவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள்இணைந்து புதிய படகு களை வாங்கி வழங்க வேண்டும்.- என்றுள்ளது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆட்சிக்கு வந்தது முதல் பல்வேறு விடயங்களில் தோல்வி அடைந்துள்ளது.

இலங்கை அரசுதமிழக மீனவர்களின் படகுகளை அரசுடைமையாக்கியுள்ளதும் மோடி அரசின் தோல்விக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மத்திய அரசு இனியும் வேடிக்கைப் பார்க்காமல் இலங்கை அரசு அறி விப்பை திரும்பப்பெற அழுத்தம் தர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக சசிகலா நேற்று முறைப்படி கடமையேற்பு



சென்னை, ஜன.01

அ.தி.மு.கவின்பொதுச் செயலாளராக கட்சியின் தலைமைஅலுவலகத்தில் சசிகலாநேற்று முறைப்படி பொறுப்பேற்றார்.

போயஸ் கார்டன் இல்லத்தில் இருந்து நேற்று நண்பகல் ராயப்பேட்டையிலுள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்துக்குச் சென்றுள்ளார்.

எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய சசிகலா பின்னர் அ.தி.மு.க. பொதுச் செயலாளருக்கான இருக்கையில் அமர்ந்து கோப்புகளை பார்வையிட் டுள்ளார்.

இதன்போது, சசிகலா முன் னாள் முதலமைச்சர் ஜெயல லிதாவை போன்ற சிகை அலங்காரத்துடன் காணப்பட்டுள்ளார்.

இவரை பின்பக்கமாக இருந்து பார்த்த தொண்டர்களுக்கு ஜெயலலிதாவா, சசிகலாவா என்று சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மாலை சசிகலா போயஸ் தோட்ட இல்லத்தை விட்டு வெளியில் வந்து எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதாநினைவிடங்களுக்கு சென்று அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து, ஜெயலலிதா சமாதியில் சசிகலா மலர் தூவி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தி, பொதுக் குழு தீர்மானத்தை வைத்து விழுந்து வணங்கி, ஜெயலலிதா அடக்கம் செய்யப்பட்ட இடத்தைச் சுற்றி வந்து, எம்.ஜி.ஆரின் நினைவிடத்தில் வந்து மரியாதை செலுத்தியுள்ளார்.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் வியாழக்கிழமை நடந்த அ.தி.மு.கவின் பொதுக் குழு கூட்டத்தில், தேர்தல் மூலம் பொதுச்செயலாளர் தேர்வுசெய்யப்படும்வரை, சசிகலாவை பொதுச் செயலாளராக நியமித்து ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# இலங்கையில் பாரதி

*(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*அப்போது தென்னாட்டுக்கு டாக்டர் கசின்ஸ் என்று ஒருவர் வந்தார். அவர் பாரதியார் சிறந்த கவிஞர் என்று கேள்விப்பட்டு, அவருக்கு கடிதம் எழுதி, அவர் கவிகளை அனுப்பும்படியும் அதைத் தாம் கருத்துக்குலையாமல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துவெளியிடுவதாகவும் எழுதியிருந்தார். அத்துடன் அவர், தான்தான் வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் என்றும் கூறினார். அதனால் பாரதியும்,*

*'வேண்டுமடி எப்போதும் விடுதலை' என்ற பாட்டை எழுதி அனுப்பினார். இது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, அக்காலத்தில் NEW INDIA பத்திரிகையில் வெளிவந்தது. இம்மாதிரி இரண்டு மூன்று தடவை வந்ததும், சுதேசமித்திரன் பழையபடி கவிதை கேட்டது.*

*அப்போது பாரதியார் சொன்னார், 'தமிழன் கவிதையைப் பிறநாட்டான் புகழவேண்டும். அப்போதுதான் அதனைத் தமிழர் உணர்கிறார்கள்' என்று.*

*அவர் ஒருசமயம், 'என்ன சுப்புரத்தினம், என் பெண் வேறு ஒரு தாழ்ந்த ஜாதியானோடு ரங்கூனுக்கு ஓடிப்போய், அங்கிருந்து 'அப்பா, நான் இன்னாரோடு இங்கு சுகமாயிருக்கிறேன். அவரைத்தான்விரும்புகிறேன். மணம் செய்து கொள்ளப்போகிறேன்' என்று எழுதவேண்டும். அதைக்கேட்டு நான் ஆனந்தப்படவேண்டும்.' என்றார். அவர் ஜாதி ஒழிப்பில் எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டார் என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு.*

(இக்காட்சி பாரதி திரைப்படத்திலும் வருகிறது)

பாரதிதாசனின் குறிப்பிட்ட 1949 ஆம் ஆண்டு காலத்தின் மேடைப்பேச்சு- திராவிடர் கழகத்திலிருந்து வந்த அறிஞர் அண்ணாவின் பத்திரிகையிலேயே வெளியாகியிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

பாரதியை பார்ப்பானக் கவிஞன் என்று புறம் ஒதுக்கும் மனோபாவம் உள்ளவர்கள் தமிழகத்தின் திராவிடர் கழகத்தில் மட்டுமல்ல, அதன் பாதிப்புக்குள்ளான இலங்கைத்தமிழர்களிடத்திலும் நீடித்திருக்கிறது. அதனால் பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடையில் உயிர்ப்போடு வாழ்ந்த உறவை வெளிப்படுத்துவதற்கும் பாரதிதாசனின் தாசர்களுக்கு இடித் துரைப்பதற்காகவும் இலங்கைப் பத்திரிகைகளிலும் ஆக்கங்கள் வெளிவந்தன.

மதிமாறன் எழுதி வெளிவந்திருக்கும் 'பாரதிய ஜனதா பார்ட்டி' என்ற நூலுக்கு எதிர்வினையாற்றி 2012 ஆம் ஆண்டு, இலங்கையில் நீர்வை தி. மயூரகிரி என்பவர் 'பாரதியின் எழுத்துக்கள் பற்றிய எதிர்வினைகளும் - உண்மைகளும்' என்ற நீண்ட கட்டுரையை எழுதியிருக்கிறார்.

பாரதிக்கு பாரதிதாசன் புதுவையில் அறிமுகமான காலகட்டத்தையும்-இருவருக்குமிடையில் நீடித்த நட்புறவு குறித்தும் 'பாரதியின் குருமார்களும் நண்பர்களும்' என்ற தமிழகத்தைச் சேர்ந்த ஆர். சி. சம்பத் எழுதிய நூலிலும் பார்க்கமுடியும். (தொடரும்)

# புத்தாண்டிலே தீர்வு வித்தாகுமா?

*(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

உலகநாடுகளை ஈர்க்கும் உருப்படியான ஒருவிடயத்தைத்தானும்,
நம் தலைவர்கள் செய்து முடித்திருப்பதாய்த் தெரியவில்லை.
அவர்களுள் ஒருசிலர் உலகநாடுகள் 'பட்டி' அடைக்கும் இடங்களுக்குள் விசுவாசமாய் ஒடுங்கி,
'புழுக்கை' போடுவதையே வேலையாய்க் கொண்டிருக்கிறார்கள்.
எது நடந்தாலும் முடிவெடுக்காமல் ஞானிபோல் இருக்கும் தலைவர் ஒருபக்கம்.
தலைவர் என்றொருவர் இருப்பதையே நினையாது செயற்படும் உறுப்பினர்கள் மறுபக்கம்.
இடையில், கிடைத்திருக்கும் பதவிகளைக் கொண்டு தம்மை வளர்த்துக்கொள்வார் வேறொருபக்கம்,
தொடரப்போகும் பதவிகளுக்காய்,
இப்போதே இருக்கைகளில் துண்டைப் போட்டு காத்திருப்போர் இன்னொரு பக்கமுமாக,
நம் தமிழ்த்தலைமை சீரழிந்து கொண்டிருக்கிறது.
தமக்குத்தாம் சண்டையிடவே அவர்களுக்கு நேரம் போதவில்லை.
தீர்க்கதரிசனமாய் சிந்தித்து உலகநாடுகளுடன் பேசி தம் பலத்தை வளர்த்து,
பேரினத்தை சமன் செய்ய வேண்டிய தேவையை இவர்கள் சிறிதும் உணர்ந்ததாய்த் தெரியவில்லை.
பலம் வளர்க்காமல் பகை வளர்க்கும் இவர்களால்,
இன்னொருதரம் தமிழினம் ஓடஓட அடிவாங்க இடமிருக்கிறது
அடித்தவர்களிடமே நியாயம் கேட்கும் நிலையில்தான்,
இன்றும் நாம் இருப்பதை மறந்து இவர்கள் விடும் சவால்கள் நகைப்புக்குரியன.

++++++++

நல்லாட்சி அரசுக்கோழி இடப்போகும் தீர்வு முட்டை முன்னைய முட்டைகளைப் போல்,
கூழ் முட்டைகளாய் ஆகாமல் சமாதானக் குஞ்சைப் பொரிக்கும் எனக் காத்திருக்கிறார் சம்பந்தனார்.
ஆதரிக்கிறவரையும் வரவேற்று, எதிர்க்கிறவரையும் வரவேற்று முடிவெடுக்கும் ஆற்றலின்றி,
யாருமே மதிக்காத ஓர் அப்பாவித் தலைவராய்க் கண்மூடிக் காத்திருக்கிறார் அவர்.
அனுபவசாலியான அவரது மௌனம் காரணத்தோடு கூடியது என்றே கருதவேண்டியிருக்கிறது.
தீர்வுத்திட்ட முட்டையிலிருந்து சிறிய குஞ்சொன்றையேனும் பொரிப்பித்து விட்டால்,
அதைச்சொல்லிச் சொல்லியே எதிர்ப்போரை வீழ்த்திவிடலாம் என்பது அவர் திட்டம் போல் தெரிகிறது.
அவரை வீழ்த்தவென முதலமைச்சர் தலைமையில் ஓர் கூட்டம் காத்திருக்கிறது.
முட்டையிடப்போகும் பிரதமரையும் முட்டையிட வைக்க நினைக்கும் ஜனாதிபதியையும்,
தாக்கி வீழ்த்தவென பழைய ஜனாதிபதி மஹிந்த தலைமையில் இன்னொரு கூட்டம் காத்திருக்கிறது.
இந்தக் கூட்டங்களுக்கிடையில் வெளியே பொதுமுகம் காட்டி,
உள்ளே அமெரிக்கச் சார்புபட்டு நிற்கும் ஐ.நா.சபை,
தீர்வு முட்டையிலிருந்து சமாதானக் குஞ்சைப் பொரிப்பிக்க முனைந்து நிற்கிறது.

++++++++

இத்தனை கூத்துக்களும் ஒருபுறம் நடக்க,
சம்பந்தனாரைப்போலவே எதிர்ப்பாளர்களின் குரலை கண்டும் காணாமல்,
தீர்வுத்திட்டம் சரிவர அமைந்துவிடும் என்றாற்போல,
உலகநாடுகளுக்கு ஓடியோடித் திரிகிறார் பிரதமர்.
அவர் யாரோடு பேசி எவரைக்கவிழ்க்க நினைத்திருக்கிறார் என்பதை,
ஆண்டவனும் அறிவானோ என்பது ஐயமே!
எது எப்படியோ இனப்புயல்களுக்குள் அகப்பட்டு அணைந்து போகாமல்,
சமாதானதீபம் ஒளிர்ந்து இத்தேசம் தலைநிமிர,
பெரும்பாலும் இது கடைசிச் சந்தர்ப்பமாய் இருக்கும் என்பது மட்டும் நிஜம்.
அந்த யதார்த்தத்தை உணர்ந்து பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பிரிவுகளைப் புறந்தள்ளி,
இறந்தகாலத்தை மறந்து எதிர்காலத்தை இலட்சியமாக்கி,
இலங்கையர்கள் ஒன்றுபடத் தயாரானால் மட்டுமே இந்துசமுத்திரத்தின் முத்து என்ற தகுதியை,
இலங்கை தொடர்ந்து தக்கவைக்கமுடியும் என்பது சத்தியம்.
இறைவன் என்ன நினைத்திருக்கிறானோ?

★★★

# புத்தாண்டு ராசி பலன்கள் - 2017




இந்த ஆண்டின் ஆரம்பத்தில் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி கன்னி ராசியில் சஞ்சரிக்கும் குரு அதிசாரமாக துலா ராசியில் 16-01-2017 முதல் 10-03-2017 வரை சஞ்சரித்து மீண்டும் கன்னிராசியில் பின் நோக்கி வந்து சஞ்சரித்து துலா ராசிக்கு 02-09-2017-இல் (திருக் கணிதப் படி 12-09-2017) மாறுதலாகிறார்.

விருச்சிக ராசியில் சஞ்சரிக்கும் சனி இந்த ஆண்டின் இறுதியில் வாக்கிய பஞ்சாங்கத் தின்படி 19-12-2017 முதல் தனுசு ராசிக்கு மாறு தலாகிறார். (திருக்கணிதப்படி விருச்சிகராசியில் சஞ்சரிக்கும் சனி அதிசா ரமாக தனுசு ராசியில் 26-01-2017 முதல் 21-06-2017வரை சஞ்சரித்து மீண்டும் விருச்சிக ராசிக்குப் பின் நோக்கி வந்து சஞ்சரித்து, தனுசு ராசிக்கு 26-10-2017- இல் மாறுதலாகிறார்). சர்ப்ப கிரகங்களான ராகு - கேது 27-07-2017 (திருக் கணிதப்படி 18-08-2017) முதல் பெயர்ச்சியாகிறார்கள். ராகு பகவான் சிம்மராசியிலிருந்து கடகராசிக்கும், கேது பகவான் கும்ப ராசியிலிருந்து மகரராசிக்கும் பெயர்ச்சி ஆகின்றார்.



## மேஷம்: (அஸ்வினி, பரணி, கிருத்திக்கை முதலாம் பாதம்)

2017-ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆண்டுக்கோளான குருபகவான் ருண ரோக ஸ்தானமான 6 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். சனி அஷ்டமஸ்தானமாகையால் 8 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் அஷ்டமச் சனியும் நடைபெறுகிறது. இது சாதகமற்ற அனமப்பு என்பதால் இக் காலங்களில் நீங்கள் எதிலும் சற்றுச் சிந்தித்து நிதானத்துடன் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்படும். எடுக்கும் காரியங்களில் முழு முயற்சியுடன் பாடுபட்டால் நற்பலனைப் பெறமுடியும்.

27-07-2017 இல் ஏற்படவுள்ள ராகு - கேது பெயர்ச்சியின் மூலம் ராகு ஜென்ம ராசிக்கு 4 ஆம் வீட்டிலும், கேது 10 ஆம் வீட்டிலும், சஞ்சாரம் செய்ய இருப்பதன் மூலம் ஏற்ற இறக்கமான பலன்களைப் பெறுவீர்கள். ஆண்டின் தொடக்கத்தில் பல பிரச்சினைகளைச் சந்தித்தாலும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஏற்படவிருக்கும் குரு மாற்றத் தின் மூலம், 7 ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால் பொருளாதார நிலை உயர்வடையும். வாழ்வில் சிறப்பான மறுமலர்ச்சி உண்டாகும். பூர்வீக சொத்து வழியிலிருந்த பிரச்சினைகளும் ஒரு முடிவுக்கு வரும். புதிய தொழில்களில் கவனம் தேவை. செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர் பெரிய வாய்ப்பு உங்களைத் தேடிவரும். உடனிருப்பவர்களால் தேவையற்ற பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய காலம். உத்தியோகத்தர்களுக்கு ஏற்றத்தாழ்வான நிலை நிலவும். பெண்களுக்கு உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்படுவதால் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.



## ரிஷபம் (கிருத்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ஆம் பாதங்கள்)

இந்த ஆண்டின் தொடக்கத்தில் குருபகவான் உங்கள் ஜென்ம ராசிக்கு பஞ்சம ஸ்தானமான 5 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உங்கள் பலமும் வலிமையும் கூடும். பணவரவுகள் தாராளமாக அமையும். திருமணமாகாதோருக்குத் திருமணம் நடைபெறும். சனிபகவான் 7 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உற்றார், உறவினரை அனுசரித்துச் செல்வது உத்தமம்.

27-07-2017 ஆம் திகதி ஏற்படவுள்ள சர்ப்பக் கிரக மாற்றத்தால் ராகு 3 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யவுள்ளதால் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற் றியைப் பெறுவீர்கள். குரு பகவான் வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் ருணரோக ஸ்தானமான 6 இல் சஞ்சரிக்கவுள்ளார். இது சாதகமானதாக இல்லை. எனவே, பணம் கொடுக்கல் வாங்கல் போன்றவற்றில் நிதானத்துடன் செயற்படுவது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபத்தை அடைந்துவிட முடியும். வங்கிக் கடன்கள் தடையின்றிக் கிடைக்கும். செப்ரெம்பர் மாதத்துக்குப் பின் பெரிய முதலீடுளில் கவனம் தேவை. உத்தியோகத்தர்களுக்கு பணியில் ஏற்ற இறக்கமான பலன்கள் ஏற்பட்டாலும், நிம்மதியாகச் செயற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். பெண்கள் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் இதுவரை இருந்த தடைகள் விலகும். குரு 5 இல் சஞ்சரிப்பதால் உயர்கல்வி பயிலுபவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும்.



## மிதுனம்: (மிருகசீரிஷம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்)

இந்த ஆண்டில் சனிபகவான் ஜென்ம ராசிக்கு ருணரோக ஸ்தானமான 6 ஆம் வீட்டில் சஞ்சரிக்கிறார். ஆண்டின் முற்பாதி வனர ராகுவும் 3 இல் சஞ் சரிப்பது சாதகமானது. குரு 4 இல் சஞ்சரிப்பதால் தேவையற்ற அலைச்சல், உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பாதிப்புகள் தோன்றும். 27-07-2017 இல் ஏற்படவுள்ள சர்ப்பக்கிரக மாற்றத்தின் மூலம் ராகு 2 ஆம் வீட்டிலும் கேது 8 ஆம் வீட்டிலும் சஞ்சாரம் செய்ய இருப்பதால் கணவன் - மனைவி சற்று விட்டுக்கொடுத்து நடந்து கொள்வது, உற்றார் , உறவினரை அனுசரித்துச் செல்வது உத்தமம்.

குருபகவான் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் பஞ்சம ஸ்தானமான 5 ஆம் வீட் டில் சஞ்சாரம் செய்ய இருப்பது சாதகமான நிலை என்பதால் பணம் பல வழிகளில் தேடிவரும். கடன் பிரச்சினைகள் யாவும் குறையும்.

குடும்பத்தில் நிலவிய கருத்து வேறுபாடுகள் படிப்படியாகக் குறையும். பூர் வீகச் சொத்து விடயங்களில் இருந்த வழக்குகள் ஒரு முடிவுக்கு வரும். வர்த்த கர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவதில் நல்ல லாபம் அமையும். கூட்டாளிகளும் தொழிலாளர்களும் ஆதரவாகச் செயற்படுவதால் அபிவிருத்தி உண்டாகும். உத்தியோகத்தர்களுக்குப் பணியில் சற்று வேலைப் பளு அதிகரித் தாலும் உடனிருப்பவர்கள் சாதகமாகச் செயற்பட்டு உங்களுக்கு ஒத்துழைப் பார்கள். பெண்கள் உற்றார், உறவினரைச் சற்று அனுசரித்துச் செல்வது உத்தமம். குரு மாற்றத்துக்குப்பின் பொருளாதார நிலையும் சிறப்பாக அமையும். மாணவர்கள் ஆசிரியர்களின் சொற்படி நடந்து கொள்வது நல்லது.



## கடகம்: (புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

இந்த ஆண்டு முழுவதிலும் சனி பஞ்சம ஸ்தானமான 5 ஆம் வீட்டில் சஞ்சரிப்பது சுமாரான அமைப்பே ஆகும். அதுபோல் குருபகவானும் ஆண்டின் முற்பாதியில் முயற்சி ஸ்தானமான 3 ஆம் வீட்டிலும், அதன் பின்னர் சுக ஸ்தானமான 4 ஆம் வீட்டிலும் சஞ் சரிக்க இருப்ப தும் சாதகமான நிலை என்று கூறிவிடமுடியாது. எனவே, இந்தப் புத்தாண்டில் நீங்கள் நன்மை, தீமை கலந்த பலன்களையே பெறுவீர்கள். ஆடம்பரச் செலவைத் தவிர்க்கவும். வாக்குறுதி கொடுப்பதைத் தவிர்க்கவும். முன்கோபத்தைக் குறைப்பது, பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடித்தல் போன்றவற்றால் அதிக பிரச்சினைகளைச் சமாளித்து விட முடியாது.

சர்ப்பகிரகங்களான ராகு,கேது முதலில் 2,8 இல் சஞ்சரிப்பதும், 27-07-2017 முதல் ராகு ஜென்ம ராசியிலும், கேது 7 ஆம் வீட்டிலும் சஞ்சரிக்க இருப்பதும் சாத கமற்ற அமைப்பு என்பதால் உடல் ஆரோக் கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற் படும். வர்த்தகர்கள் பெரிய முதலீடுகளில் கவனம் தேவை. உத்தியோகத்தர் களுக்கு தேவையற்ற அலைச்சல், அதிகரிக்கும். பெண்கள் உற்றார், உறவினரை அனுசரித்து செல்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் சற்றுக் கவனம் செலுத்தினால் உயர் மதிப் பெண்ணைப் பெறலாம்.



## சிம்மம் (மகரம், பூரம், உத்திரம் முதலாம் பாதம்)

இந்த வருடத்தில் செப்ரெம்பர் மாதம் வரை குரு பகவான் தன ஸ்தானமான 2 ஆம் வீட்டில் சஞ்சரிக்கவுள்ளார். இது சாதகமான நிலை. இதனால் பணவரவுகளுக்குப் பஞ்சம் இருக்காது. திருமண சுபகாரியங்கள் கைகூடும். கொடுக்கல் வாங்கலிலும் சாதக நிலை ஏற்படும்.

சனிபக வான் சுகஸ்தானமான 4 ஆம் வீட்டில் சஞ்சரிப்பது சாதகமற்ற நிலை. இதனால் தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கும். தற்போது 17 இல் சஞ்சரிக்கும் ராகு,கேது 27-07-2017 முதல் ராகு 12 இல், கேது 6 இல் சஞ்சரிக்க இருப்பதால் குடும்பத்திலுள்ளவர்களிடம் இருந்த பிரச்சினைகள் ஆண்டின் பிற்பாதியில் முழுமையாகக் குறைவடையும். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஏற்பட இருக்கும் குரு மாற்றத்தின்மூலம் குரு முயற்சி ஸ்தானமான 3 இற்கு மாறுதலாக இருப்பதால் எடுக்கும் முயற்சிகளிலும் எதிர்நீச்சல் போட வேண்டியிருக்கும்.

வர்த்தகர்கள் பெரிய முதலீடுகளை ஈடுபடுத்திச் செய்ய நினைக் கும் காரியங்களில் கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் பணியில் ஆண்டின் தொடக்கத்தில் எதிர்பார்த்த சம்பள உயர்வுகளும் பதவி உயர்வுகளும் கிடைக்கப் பெற்றாலும் பிற்பாதியில் அதிக நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும். பெண்கள் எதிலும் சற்று கவனத்துடன் நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஈடுபாட்டுடன் செயற்படக்கூடிய ஆற்றலும் இருக்கும்.



## கன்னி (உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்)

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் குரு பகவான் ஜென்ம ராசியிலேயே சஞ்சரிப்பது சற்று சாதகமற்ற நிலை. இதனால் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்படுவ துடன் தேவையற்ற அலைச்சல் அதிகரிக்கும். எல்லாவசதி களும் இருந்தும் அனுபவிக்க முடியாத அளவுக்கு எதிலும் தடைகள் உண்டாகும்.

சனிபகவான் முயற்சி ஸ்தானமான 3 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் எதையும் சமாளித்து முன்னேறக்கூடிய ஆற்றல் உண்டாகும். 2007-2017 இல் ஏற்படவிருக்கும் சர்ப்பக்கிரக மாற்றத்தால் ராகு 11 இல் சஞ்சரிக்க இருப்பது சாதகமான நிலை. இதனால் உங் களுக்குள் மறைமுக எதிர்ப்புகள் யாவும் விலகும். இதுமட்டுமின்றி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஏற்படவிருக்கும் குரு மாற்றத்தின் மூலம் குருபகவான் தன ஸ்தானமான 2 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய இருப்பது நல்ல நிலைமை.

இதனால் பிரச்சினைகள் யாவும் படிப்படியாகக் குனறயும். சிலருக்கு அசையும் அசையாச் சொத்து சேர்க்கைகளும் அமையும். வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த லாபங்கள் பெருகும். எதிரிகளின் பலம் குறையும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் யாவும் கிட்டும். பெண்களுக்கு புத்திர வழியில் சிறுசிறு மனக் குழப்பங்கள் உண்டாகும். மாணவர்கள் விளையாட்டுகளில் சாதனை படைப்பர்.

# புத்தாண்டு ராசி பலன்கள் - 2017



**துலாம்:** (சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)

இந்த ஆண்டில் உங்கள் ஜென்ம ராசிக்கு 2 ஆம் வீட்டில் சனி பகவான் சஞ்சரிப்பதால் உங்களுக்கு ஏழரைச் சனியில் குடும்பச் சனி நடைபெறுகிறது. இதுமட்டுமன்றி குருபகவானும் ஆண்டின் தொடக்கத்தில் விரய ஸ்தானமான 12 ஆம் வீட்டி லும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் ஜென்ம ராசியிலும் சஞ்சாரம் செய்யவுள்ளார். இது அவ்வளவு நல்லதல்ல. இதனால் எடுக்கும் முயற்சிகளில் தடை தாமதங்கள் உண்டாகும். தொழில்ரீதியாக மேற்கொள்ளும் பயணங்களால் அலைச்சல் அதிகரிப்பதுடன் வீண்விரயங்களும் ஏற்படும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது, பிறர் விடயங்களில் தலையிடாதிருப்பது உத்தமம். சர்ப்பகிரகமான ராகு ஆண்டின் தொடக்கத்தில் 11 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதால் எதையும் எதிர்கொள்ளக்கூடிய வலிமையைப் பெறு வீர்கள். என்றாலும் 27-07-2017 இல் ஏற்பட விருக்கும் சர்ப்பகிரக மாற்றத்தால் கேது பகவான் 4 ஆம் வீட்டிலும், ராகு 10 ஆம் வீட்டிலும் சஞ்சாரம் செய்ய இருப்பது ஓரளவுக்குச் சுமாரான நிலை என்பதால் எதிலும் ஏற்ற இறக்கமான பலன்களைப் பெறுவீர்கள்.

தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பதால் அலைச் சலைக் குறைத்துக் கொள்ளமுடியும். வர்த்தகர்கள் பெரிய முதலீடுகளை பிற் போடுவது நல்லது. பணி யில் மந்த நிலையும் எனதயும் சுறுசுறுப்பாச் செய்துமுடிக்க முடியாத அளவிற்கு உடல் சோர்வும் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு உயரதிகாரிகளின் பேச்சுக்கு ஆளாகுவீர்கள். பிறர் செய்யும் தவறுகளுக்கும் நீங்கள் பொறுப்பேற்க வேண்டி வரும். பெண்களுக்கு குடும் பத்தில் சிறு சிறு பிரச்சினைகளும் தோன்றும் என்பதால் கணவன் -மனைவி விட்டு கொடுத்துச் செல்வது உத்தமம். மாணவர்கள் அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகள் சற்று தாமதப்படும். விளையாட்டுக்களில் ஈடுபடும்போது கவனம் தேவை.



**விருச்சிகம்** (விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

உங்களுக்கு ஏழரைச் சனி நடைபெற்றாலும் எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி முடிய குரு பகவான் லாப ஸ்தானமான 11 ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பது அற்புத மான நிலை. பணவரவுகள் சிறப்பாக இருப்பதால் நினைத் ததை நினைத்தபடி நிறைவேற்றுவீர்கள். திருமண சுப காரியங்களும் தடையின்றி நிறைவேறும். கொடுக்கல் - வாங்கல் சிறப்பாக இருக்கும். தற்போது 4 10 இல் சஞ் சரிக்கும் ராகு, கேது 27-07-2017 இல் ஏற்படவிருக்கும் சர்ப் பக்கிரக மாற்றத்தின்மூலம் கேது 3 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய இருப்பதால் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி பெறுவீர்கள். எதிரிகளும் நண்பர்களாகச் செயற் படுவார்கள்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஏற்படவிருக்கும் குரு மாற்றத்தின் மூலம் குரு பகவான் விரய ஸ்தானமான 12 ஆம் வீட்டுக்கு மாறுதலாக இருப்பதால் செப்ரெம்பருக்குப் பின்பு பொருளாதார ரீதியாக நெருக்கடிகள் எதிர்பாராத வீண் விரயங்கள் போன்றவை ஏற்படும். உடல் ஆரோக் கியத்தில் அதிக கவனம் செலுத்துவதும் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடித்து அனைவரையும் அனுசரித்துக் நடப்பதும் நல்லது. ஆடம்பரச் செலவுகள் குறைத்துக் கொண்டால் கடனில்லாத வாழ்க்கை வாழலாம். தொழிலதிபர்கள் கூட்டாளிகையும் அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றங்களும் பதவி உயர்வுகளும் கிட்டும். பெண்களுக்கு குடும்பத்தில் சுபகாரியங்கள் கை கூடும். பிறர் விடயங்களில் தனலயீடு செய்யாதிருப்பது நல்லது. மாண வர்கள்சில நேரங்களில் கல்வியில் மந்தநிலை ஞாபகமறதி போன்றவற்றால் தகுந்த மதிப்பெண் பெறமுடியாமல் போகும்.



**தனுசு:** (மூலம், பூராடம், உத்திராடம் முதலாம் பாதம்)

2017 ஆம் ஆண்டு உங்களுக்கு ஏழரைச் சனி தொடர்வதால் ஆண்டின் முற்பாதி வரை உங்கள் ராசி யாதிபதி குரு ஜீவை ஸ்தானமான 10 ஆம் வீட்டில் சஞ் சரிப்பதாலும் உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் எடுக்க வேண்டியிருக்கும். நெருங்கியவர்களிடையே பேசும் போது பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதும் கணவன் - மனைவி விட்டுக் கொடுத்து போவதும் நல்லது.

தொழில் வியாபார ரீதியாகப் போட்டி, மறைமுக எதிர்ப்புகள் உண் டாகும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் தாமதப்படும். பிறர் செய்யும் தவறுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டியிருக்கும். கேது 3 இல் சஞ்சரிப்பதால் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் எதிர்நீச்சல் போட் டாவது வெற்றி பெற்று விடுவீர்கள். எதிர்வரும் 27-07-2017 இல் ஏற் படவுள்ள சர்ப்ப கிரக மாற்றத்தின் மூலம் கேது 2 ஆம் வீட்டிலும் ராகு 8 ஆம் வீட்டிலும் சஞ்சாரம் செய்ய இருப்பதும் சாதகமான அமைப்பு என்று கூறமுடியாது. என் றாலும் செப் ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஏற்படவுள்ள குரு மாற்றத்தால் குரு லாப ஸ்தானமான 11 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய இருப்பதால் செப்ரெம்பருக்குப் பின்பு நீங்கள் நினைத்ததெல்லாம் நிறைவேறும். தொழில் வியாபார ரீதியாக நீங்கள் சந்தித்த போட்டி பொறாமைகள் கண்ணுக்குத் தெரியாத மறை முக எதிர்ப்புகள் யாவும் இருந்த இடம் தெரியாமல் மறையும். உத்தியோகஸ்தர்களும் திறமைக்கேற்ற உயர் பதவிகளை அடைவார்கள். உடன் பணி புரிபவர்களும் சாதகமாகச் செயற் படுவார்கள்.

குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஒற்றுமைக் குறைவுகள் உண்டாகும். ஆண்டின் பிற்பாதியில் குடும்பத்திலிருந்த பிரச்சினைகள் விலகி தடைப்பட்ட திருமண சுபகாரியங்களும் கைகூடும்.



**மகரம்:** (உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்)

2017 ஆம் ஆண்டு உங்கள் ராசியாதிபதி சனி பவான் ஜென்ம ராசிக்கு 11 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யவுள்ளார். இது அற்புதமான அமைப்பாகும். இதுமட்டுமின்றி பொன்ன வனான குருபகவானும் உங்கள் ஜென்ம ராசிக்கு பாக்கிய ஸ்தானமான 9 ஆம் வீட்டில் ஆண்டின் செப்ரெம்பர் வரை சஞ்சாரம் செய்யவிருப்பதால் நீங்கள் நினைத்ததெல்லாம் நிறைவேறும். குடும்பத்துக்கு மகிழ்ச்சி சுபிட்சம் யாவும் உண்டாகும். திருமண வயதை அனடந்தவர்களுக்கு சுபகாரியம் நடைபெற்று மகிழ்ச்சி அளிக்கும்.

பண வரவுகளுக்கும் பஞ்சம் இருக்காது. பூர்வீகச் சொத்து வழியிலும் சாதகமான பலன்கள் அமையும். உங்களைப் புரிந்து கொள்ளாமல் விலகிச் சென்ற உறவுகளும் உங்களைத் தேடிவந்து நட்பு பாராட்டுவர். தொழில் வியாபாரம் செய்பவர்களும் நல்ல இலாபத்தை அடைய முடியும். வெளியூர் வெளிநாட்டுத் தொடர்பு உடையவர்களாலும் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கௌரவமான பதவிகளைப் பெறுவர். தற்போது 2,8 இல் சஞ்சரிக்கும் கேது, ராகு வரும் 27-07-2017 முதல் கேது ஜென்ம ராசியிலும் ராகு 7 ஆம் வீட்டிலும் சஞ்சாரம் செய்ய விருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் உண் டாகும். இதுமட்டுமின்றி செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் குரு 10 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய இருப்பதால் தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு தேவையற்ற நெருக்கடிகள் ஏற்படும். என்றாலும் உங்கள் ராசியாதிபதி சனி 11 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதால் எதையும் சமாளித்து வெற்றி நடைபோடுவீர்கள்.



**கும்பம்:** (அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்)

இந்த 2017 ஆம் ஆண்டு உங்கள் ராசியாதிபதி சனி பகவான் ஜீவன ஸ்தானமான 10 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதும் ஆண்டு கோளான குருபகவானும் அஷ்டம ஸ்தானமான 8 ஆம் வீட்டில் சஞ்சரிப்பதும், சர்ப்பக் கிரகங்களான கேது ஜென்ம ராசியிலும் ராகு 7 இல் சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பாகும். இதனால் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்பட்டு எதிர்பாராத செலவுகள் உண்டாக்கும்.

சுக வாழ்வு சொகுசு வாழ்வில் பாதிப்பு உண்டாகும். நேரத்துக்கு உண்ண உறங்க முடியாத அளவுக்கு அலைச்சல்கள் ஏற்படும். எடுக்கும் காரியங்களை முடிப்பதற்கு எதிர் நீச்சல் போட வேண்டியிருக்கும். எதிர்பார்க்கும் உயர்வுகளும் தாமதப்படுவதால் பொருளாதார நிலையும் நெருக்கடிக்கு உள்ளாகும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கடன் வாங்கக் கூடிய சூழ்நிலையும் உண்டாகும்.

சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் தடைகள் நிலவும். ஆண்டின் தொடக்கத்தில் இவ்வளவு பிரச்சினைகன சந்திக்கும் உங்களுக்கு, 27-07-2017 இல் ஏற்படவுள்ள சர்ப்பகிரக மாற்றத்தின் மூலம் ராகு 6 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய இருப்பதால் எனதயும் சமாளிக்கும் வலிமையும் வல்லமையும் உண்டாகும். இதுமட்டுமின்றி செப்ரெம்பர் 2 ஆம் திகதி ஏற்படவிருக்கும் குரு மாற்றத்தால் குரு பாக்கிய ஸ்தானமான 9 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய விருப்பதால் வாழ்வில் மகிழ்ச்சி தரக் கூடிய சம்பவங்கள் நடைபெறும். தடைப்பட்ட திருமண சுபகாரியங்கள் தடபுடலாக நிறைவேறும். உறவினர்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு மறைமுக எதிர்ப்புகளும் போட்டிகளும் இருந்தாலும் வரவேண்டிய வாய்ப்புகள் வந்துசேரும்.




**மீனம்:** (பூரட்டாதி 4 ஆம் பாதம் , உத்திரட்டாதி, ரேவதி)

2017 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசியாதிபதி குரு சமசப்தம ஸ்தானமான 7 இல் அமைந்து ஜென்ம ராசியைப் பார்வை செய்வதும் பாக்கிய ஸ்தானமான 9 ஆம் வீட்டில் சனி பகவான் சஞ்சரிப்பதும் 6 இல் ராகு சஞ்சாரம் செய்வதும் சாதகமான அமைப்பு என்பதால் நீங்கள் தொட்டதெல்லாம் துலங்கும். பணம் பலவழிகளில் தேடிவருவதுடன் எதிர்பாராத திடீர் தனச் சேர்க்கைகளும் அமையும். கொடுக்கல் வாங்கல் இலாபமளிக்கும். கொடுத்த கடன்களும் திருப்திகரமாக வசூலாகும். உங்களுக்குத் தேவையற்ற இடையூறுகளை ஏற்படுத்தியவர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைவார்கள். குடும்பத்தில் சுபிட்சமும் லட்சுமி கடாட்சமும் நிலைத்திருக்கும். பூமி, மனை சேர்க்கைகளும் பூர்வீகச் சொத்துகளால் அனு கூலங்களும் அமையும். திருமண சுபகாரியங்கள் கைகூடும். குடும்பத்தில் கணவன் மனைவியிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புத்திரபாக்கியம் வேண்டுபவர்களுக்குக் கடவுளின் அருள்கிட்டும்.

கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் காப்பாற்றுவீர்கள். 27-07-2017 இல் ஏற்படவுள்ள சர்ப்ப கிரக மாற்றத்தால் கேது பகவான் லாப ஸ்தானமான 11 ஆம் வீட்டுக்கு மாறுகின்றார். இதனால் தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான லாபங்கள் அமையும். வெளியூர், வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிய விரும்புபவர்களின் விருப்பமும் நிறைவேறும். சேமிப்புகளும் பெருகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த உயர்வுகள் இடமாற்றங்கள் யாவும் தடையின்றிக் கிடைக்கும். வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஏற்படவிருக்கும் குரு மாற்றத்தின் மூலம் குருபகவான் அஷ்டம ஸ்தானமான 8 ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதும் சற்று சாதகமற்ற அமைப்பு என்பதால் பணம் கொடுக்கல் வாங்கலில் கவனத்துடன் நடந்து கொள்வதும் தொழில் வியாபாரம் மற்றும் உத்தியோகம் செய்பவர்கள் சற்று எச்சரிக்கையுடன் செயற்படுவதும் நல்லது. திருமண சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் தடை தாமதங்கள் உண்டாகும்.

# வங்கதேசத்துக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரைக் கைப்பற்றியது நியூஸிலாந்து அணி






வங்கதேசத்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் வெற்றி பெற்றதையடுத்து ஒருநாள் தொடரை 3:0 என நியூஸிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

நியூஸிலாந்துக்குச் சென்றுள்ள பங்களாதேஷ் அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. முதல் இரண்டு போட்டிகளிலும் வென்ற நியூஸிலாந்து அணி 2:0 என ஏற்கனவே தொடரைக் கைப்பற்றி முன்னிலை வகித்தது. மூன்றாவதும் கடைசியுமான ஒருநாள் போட்டி நெல்சன் நகரில் நேற்று நடந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

பங்களாதேஷ் அணிக்காக முதலில் களமிறங்கிய தமிம் இக்பால் மற்றும் இம்ருல் கெய்ஸ் ஆகியோர் நல்ல தொடக்கம் கொடுத்தனர். முதல் விக்கெட்டுக்காக 102 ஓட்டங்கள் சேர்த்த போது இம்ருல் கெய்ஸ் 44 ஓட்டங்களில் சன்றநெரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து ரஹ்மான் 19 ஓட்டங்களுடனும் மஹ்மதுல்லா 3 ஓட்டங்களுடனும் வெளியேறினர். நிதானமாக ஆடி வந்த இக்பால் அரைச்சதத்தைக் கடந்து 59 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நீம் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த அல் ஹசன் 18 ஓட்டங்களில் ரன் அவுட் ஆக ஹொசைன் 11 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யு ஆனார். தொடர்ந்து ஹைதர் 3 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் மொர்டசா 14 ஓட்டங்களுடனும் வெளியேறினர்.

கடைசி நேரத்தில் அணிக்கு ஆறுதலைக் கொடுத்து 44 ஓட்டங்களைப் பெற்ற நுருல் ஹசன் ஹென்றி வீசிய பந்தில் வெளியேறினார்.

அஹமது 4 ஓட்டங்களையும் ரஹ்மான் ஓட்டங்கள் எவற்றையும் பெறாமலும் இருந்த வேளை 50 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் அணி 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 236 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் ஹென்றி, சன்றநெர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சௌதி, பட்டேல், நேம், வில்லியம்ஸன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

237 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய நியூஸிலாந்து அணியின் தொடக்க வீரர் டாம் லதம் 4 ஓட்டங்களில் ரஹ்மானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். குப்தில் 6 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் காயம் காரணமாக போட்டியில் இருந்து வெளியேறினார். அதன் பின்னர் வில்லியம்சன் மற்றும் நில்புரூம் இருவரும் சோடி சேர்ந்து சிறப்பாக விளையாடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

அபாரமாக விளையாடிய புரூம் 97 பந்துகளைச் சந்தித்து 12 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் 97 ஓட்டங்களைக் குவித்த நிலையில் ரஹ்மானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வில்லியம்சனுடன் நீம் இணைந்தார். இவர்கள் 42ஆவது ஓவரில் வெற்றியை எட்டினர். நீம் அந்த ஓவரின் இரண்டாவது பந்தில் பவுண்டரி அடித்து வெற்றியை உறுதி செய்தார்.

நியூஸிலாந்து அணி 41.2 ஓவர்களில் 239 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வில்லியம்சன் 95 ஓட்டங்களுடனும், நீம் 28 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக வில்லியம்சன் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை நியூஸிலாந்து அணி 3:0 என கைப்பற்றியது.

# பருத்தித்துறையில் 'மாமனிதர் குமார்' வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்





பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் திக்கமுனை மைதானத்தில் விலகல் முறையில் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் கடந்த சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகியது. கழகத்துக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் இப்போட்டித்தொடர் 'அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்' ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி என சிறப்பாக பெயரிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி மாலை 4.30 மணிக்குஆரம்பமாகிய போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியும் கரவெட்டி கரணவாய் இளைஞர் விளையாட்டுக்கழக 'ஏ'அணியும் போட்டியிட்டன.

இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சமபலம் கொண்ட அணிகள் என்பதால் போட்டி விறுவிறுப்பாகவே ஆரம்பித்தது. நடுவர் ஆரம்ப விசிலை ஊதியதும் அனல் பறக்கும் வேகத்தில் ஆரம்பக் கோலை அடிப்பதற்காக இரு அணிகளும் எதிர் அணியின் கோல் பிராந்தியத்தை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தன. தற்காப்பு வீரர்களின் பலத்த தாக்குதலும் கோல்காப்பாளரின் சாதுரியமான தடுப்பும் போட்டியில் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டே இருந்தன. இரு அணிகளின் முன்கள வீரர்களின் முயற்சிகள் எதிர் அணியினரால் முறியடிக்கப்பட்டுக் கொண்டே இருந்தன. பத்து நிமிடங்கள் படபடவென பறந்தோடின. இருப்பினும் படபடப்பு குறையாது சுறுசுறுப்பு அதிகரிக்க திடீரென யாரும் எதிர்பாராத விதமாக 12ஆவது நிமிடத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியின் முன்கள 7ஆம் இலக்க வீரர் பே.நிருசன் தனக்குக் கிடைத்த அந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாது எதிர் அணியின் தற்காப்பைத் தகர்த்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

இதனால், வீறு கொண்டெழுந்த கரணவாய் இளைஞர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி எவ்வாறாயினும் ஒரு கோலைப் போட்டு போட்டியில் சமநிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற வேகத்துடன் விளையாடினர்.ஆனாலும் வீண்மீன் அணியின் தற்காப்பைத் தாண்டி அவர்களால் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை.

இறுதியாகப் போட்டி 5.17 மணிக்கு முடிவுக்கு வரும் போது பலாலி விண்மீன் விளையாட் டுக்கழக அணி ஒரு கோலைப் போட்டு வெற்றி பெற்றுத் தொடரில் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது. இறுதிவரை போராடிய கரணவாய் இளைஞர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி எந்தவித கோல்களையும் அடிக்க முடியாமல் தோல்வியுற்றுத் தொடரிலிருந்து வெளியேறியது. இப்போட்டி யின் ஆட்ட நாயகனாக விண்மீன் விளையாட்டுக்கழக அணியின் முன்கள 7ஆம் இலக்க வீரர் பே.நிருசன் தெரிவுசெய்யப்பட்டார்.

# கிளிநொச்சி ஊடகவியலாளருக்கு இனந்தெரியாத நபரால் அச்சுறுத்தல்

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

கிளிநொச்சி,ஜன.01

'சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் செய்தியை ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியிட்டவர்என்று கூறப்படும் கிளிநொச்சியைச் சேர்ந்த செய்தியாளர்ஒருவருக்கு இனந்தெரியாத நபர் ஒருவரால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த ஊடகவியலாளர் நேற்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் விஜயகலா, உலகிலுள்ள தலைவர்களுடன் ஒப்பிடுகையில் பிரபாகரன் சிறந்தவர் என்று புகழ்ந்துரைத்தமையுடன் அவர் இன்று இருந்திருந்தால் நாட்டில் பிரதமராகவோ ஓர் உறுப்பினராகவோ இருந்திருப்பார் என்றும் கூறியிருந்தார்.

இந்த விடயம் நாட்டிலுள்ள ஊடகங்களில்வெளியாகியிருந்தது. இலத்திரனியல் ஊடகங்களில்இந்த உரையின்காணொளியும் வெளியாகியது.

இந்த நிலையில், கொழும்பைத்தளமாகக்கொண்டுவெளிவரும் ஆங்கில பத்திரிகை ஒன்றில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் எஸ். என். நிபோஜன் என்பவருடைய பெயருடன் அந்தச் செய்தி பிரசுரமாகியிருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் அந்த ஊடகவியலாளருக்கு தொலைபேசி ஊடாக அழைப்பை மேற்கொண்ட இனந்தெரியாத நபர் ஒருவர் அவருக்குகொலைஅச்சுறுத்தல் விடுத்தார் எனத் தெரியவருகின்றது.

தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட அந்த நபர், பிரபாகரன் தொடர்பான செய்தி திரிபுபட எழுதப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் சில வேளைகளில் தவறாக உச்சரித்தாலும் ஊடகவியலாளர்கள் அதனைத் திருத்திவெளியிடவேண்டும்எனவும் கூறினார் எனத் தெரியவருகின்றது.

மேலும், அந்தஇனந்தெரியாத நபர், அமைச்சருக்கு நெருக்கடி ஏற்படும் வகையில் வேண்டுமென்றே அந்தச் செய்தி எழுதப்பட்டுள்ளது. இதனால் அக்காவுக்கு (விஜயகலாவுக்கு) ஏதேனும் நடந்தால் தான் கிளிப் சார்க் (கைக்குண்டுத் தாக்குதல்) செய்யவும் தயங்கமாட்டார் எனவும் அச்சுறுத்தினார் எனவும் அந்த ஊடகவியலாளர் கூறினார்.

அச்சுறுத்திய அந்த நபர், தனக்கு எல்லா ஆயுதங்களையும் இயக்கத் தெரியும் என்றும் அனைவருடனும் தொடர்புகள் இருக்கின்றன என்றும் தன்னை அச்சுறுத்தினார்எனவும்மேற்படி ஊடகவிலாளர் தெரிவித்தார்.

அச்சுறுத்தப்பட்ட ஊடகவியலாளர் நேற்று கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரியவருகின்றது. (ம-70)

# டெங்கு காய்ச்சலுக்கு விசேட தடுப்பு மருந்து தாய்லாந்திலிருந்து அவசரமாக வருகிறது

கொழும்பு, ஜன.01

நாட்டின் பல பாகங்களிலும், டெங்குக் காய்ச்சல் அதிவேகமாகப் பரவி வருவதால் அதனை விரைந்து கட்டுக்குள் கொண்டு வருவதற்கு, தாய்லாந்தில் இருந்து "டெக்ஸ்ரனன்" தடுப்பு மருந்தை அவசரமாகக் கொண்டு வருவதற்கு சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர்களுக்கு மூக்கு, தோல்பகுதிகளில் இரத்தக்கசிவுகள் ஏற்படுவதால் மரணம் சம்பவிக்கும் ஏது நிலை அதிகம் உண்டு என்று நோய் சார்ந்த வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களில் டெங்கினால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்டுவிட்டதாக அவர்கள் தகவல் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் காலி, அம்பலாங்கொடை, பலப்பிட்டிய பகுதிகளிலேயே வேகமாகப் பரவி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குறிப்பிட்ட சில நாள்களில் கிருமி இரத்தத்தில் பரவி வருவதால், நோய் வேகாரம் கொண்டு உயிர் ஆபத்தைக் கொண்டு வரும். ஆகையால் ஆரம்பத்தில் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டும் என்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# மத்திய வங்கி பிணை முறி விற்பனையின் மோசடியாளர்கள் மீது கடும் நடவடிக்கை

### *நிச்சயம் எடுக்கப்படும் என உறுதி கூறுகிறார் ஜனாதிபதி*

இலங்கைமத்தியவங்கியின் பிணைமுறிகள் விற்பனையின் போது இடம்பெற்ற மோசடியுடன் தொடர்புடைய தரப்பினர் எந்த வித பாகுபாடு மின்றித் தண்டிக்கப்படுவார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

சிங்கள தேசிய பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இலங்கைமத்தியவங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் சிலர் பிணை முறிகள் விற்பனை மோசடியுடன் தொடர்புபட்டிருந்தனர் என்ற குற்றாட்டுக்கள் முன்வைக்கட்டன.

இந்த மோசடியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தொடர்புபட்டிருந்தார் எனவும் முதலில் குற்றம்சாட்டப்பட்டது.

இந்த மோசடி காரணமாக அரசாங்கத்துக்கு ரூபா 120 பில்லியனுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனினும், இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட 'கோப்' குழு தனது அறிக்கையை கடந்த ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையின்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இந்த மோசடி நடவடிக்கைக்கும் தொடர்பில்லை என்று பரிந்துரைக்கப்பட்டது. முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கும் மேலும் 11 பேருக்கும் இதில் தொடர்பிருப்பதாகவும் 'கோப்' குழு தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும் நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் 'கோப்' குழுவின் அறிக்கை சட்டமா அதிபரிடம் முன்வைக்கப்பட்டு ஆலோசனை பெறப்பட்ட பின்னரே ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைப்பதா அல்லது குற்றவாளிகளைத் தண்டிக்க எவ்வகையானநடவடிக்கையை மேற்கொள்வது என்பது குறித்த தீர்மானம் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (உ)

# அரசை விமர்சிக்கும் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை கூறவேண்டும்

### *இப்படிக் கூறுகின்றார் மற்றோர் அமைச்சர்*

கொழும்பு,ஜன.01

அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உரிய ஆலோசனை வழங்க வேண்டும் என ஐ.தே. கட்சியைச் சேர்ந்த அமைச்சர் வசந்த அலுவிஹாரே தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டு அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் அமைச்சர்களுக்கு உரிய ஆலோசனை வழிகாட்டல்களை ஜனாதிபதியும் பிரதமரும் வழங்க வேண்டுமென கோருகின்றேன்.

இணக்கப்பாட்டு அரசாங்கமொன்றில் அங்கம் வகித்தால் அனைவரும் ஒரே கொள்கைகள் கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும். பேச்சுகளின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

இராஜாங்க அமைச்சர் டிலான்பெரேரா அரசாங்கத்தை விமர்சனம்செய்துவருகின்றார். ஜனாதிபதி , பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் ஒரு கொள்கையில் செயற்படும் போது அதனை சுதந்திரக் கட்சி விமர்சனம் செய்வது பொருத்தமற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற ஒன்று கூடலில் மாவை சேனாதிராசா சிறப்புரை நிகழ்த்தினார். அவர் அங்கு கூறியவை வருமாறு –

ஒன்றுபட்ட சக்தியாக இலட்சியத்தை வென்றெடுக்கின்ற பாதையில் மிக நீண்டகாலமாக நாங்கள் பயணிக்கின்றோம்.

தீர்வுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை எவ்வளவு தூரம் முன்னேற்றம்அடைந்திருக்கின்றன என்பது குறித்து எமக்கு ஆதங்கங்களும் கவலைகளும் உண்டு.

புலிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புரிந்துணர்வின் அடிப்படையில் கொண்டிருந்த உறவு பலமானது, அந்தப் பலம் தான் அப்போதைய பேச்சுக்களில் தாக்கங்களை ஏற் படுத்தியது.

இன்று புலிகளுடைய பலம் இல்லாமல் நாங்கள் இருப்பதால் தோற்கடிக்கப்பட்ட தரப்புக்களுடன் பேசுகிறோம் என்ற எண்ணத்தில் அரசாங்கம் இருக்க முடியாது.

இதனை ஜனாதிபதிக்கு நேரடியாக எடுத்துரைத்திருக்கிறோம். எங்களைச் சமதரப்பாக ஏற்று பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலவேண்டும்.

இதனைத்தான் உலகம் அரசுக்குச் சொல்லியும் இருக்கிறது. அரசும் அதனை ஏற்றுக் கொண்டு இருக்கிறது.

புலிகளோடு ஏற்பட்ட பேச்சுக்களில் இராஜதந்திர அணுகுமுறை காணப்படவில்லை என்று குற்றம் சாட்டுகின்ற தரப்புக்கள் எங்களுடைய இந்த முயற்சிகளில் அத்தகைய குற்றத்தைச் சுமத்த இடமளிக்க முடியாது.

நாங்கள் 'நம்ப நட நம்பி நடவாதே' என்னும் பாணியில் பயணிக்க வேண்டியிருக்கிறது.

தீர்வுக்கான முயற்சிகள் கலந்துரையாடல்களாகவும் ஆலோசனைகளாகவும் விவாதங்களாகவும் தான் இன்று வரை உள்ளன. இவை இன்னும் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை . நாங்கள் இந்த தீர்வு முயற்சிகளில் இருந்து வெளியேறவேண்டும் என்று யாரும் எண்ணுதல் அறிவுடமை ஆகாது.

ஏன் என்றால் தீர்வு நோக்கிய பேச்சுக்கள் 'ஒருநாள் முதல்வன்' திரைப்படப் பாணியில் அமைய முடியாது.

அத்துடன் எங்களை தீர்வு முயற்சிகள் நோக்கி அழைத்து வந்துள்ள சர்வதேசம் – குறிப்பாக இந்தியா, சர்வதேச மனித உரிமைகள் ஆணையகம், மேற்குலகு என்பன – தங்களுடைய பங்களிப்பைச் செய்ய வேண்டிய காலம் நெருங்கி வருகிறது.

ஆட்சி மாறினாலும் தமிழ் மக்களைக் கைவிட மாட்டோம் என்று அமெரிக்க இராஜாங்கத் தரப்பு தெரிவிக்கிறது.

எங்களைத் தீர்வு முயற்சிகளில் இருந்து வெளியேறுமாறு எங்கள் மக்கள் எமக்கு ஆணை தரவில்லை. நாங்கள் நிதானமாகச் சர்வதேச சமூகத்தோடு இணைந்து முயற்சிக்கிறோம். முடியவில்லை என்றால் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றியது என்ற செய்தியைச் சர்வதேச சமூகம் அறிவிக்கின்ற நிலையை நாம் ஏற்படுத்துவோம்.

அதுவரை வடக்கு – கிழக்கு இணைந்த வகையில் பல்லின சமூகங்களை அங்கீகரிக்கின்ற அரசமைப்பின் ஊடாகத் தீர்வு பெறும் மக்களின் ஆணையை மதித்து நடப்போம். – என்றார்.


ஈழத் தமிழரின் விழிநீர் துடைக்க
இடியென முழங்கிய எங்கள் வீரன்

ஈழத்தமிழ் மக்களுக்காய் இடியென முழங்கி
இனமானம் காத்த எங்கள் வீரனே
நாம் அடிமைகளாய் இல்லை என நிருபிக்க
ஆர்ப்பரித்து எழுந்த அரசியல் புயலே
ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தும்
ஆணித்தரமாக குரல் கொடுத்த அண்ணனே
உன் இடைவெளி நிரப்ப இங்கே
இன்றுவரை யாருமின்றித் தவிக்கின்றோம்
ஈழத்தமிழினம் மட்டும் அல்ல உலகத்தமிழர்களும்
உன் நினைவுடன் வாழ்கின்றனர்
ஒன்பது ஆண்டல்ல எத்தனை யுகம் கடந்தாலும்
உன் வழியிலே நாம் அணிதிரள்வோம்.

அமரர்
தியாகராஜா மகேஸ்வரன்
9 வது ஆண்டு நினைவுகள்
01.01.2017



வட்டுக்கோட்டை தொகுதி
வாழ் மக்கள்

காலைக்கதிர்
Kalaikkathir

## காந்தி சிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகாத்மா காந்தி இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் இலங்கைக்கு - யாழ்ப்பாணத்துக்கு - வருகை தந்து விடுதலையுணர்வூட்டியவராவார். மனித குல விடுதலைக்காகவும், இந்திய நாட்டின் விடுதலைக்காகவும் வெள்ளை ஏகாதிபத்தியத்திற்குஎதிராகவும்அஹிம்சை வழியில்போராடிய, உலகில் மிகவலிமை மிகுந்தபோராட்டதத்துவத்தை உருவாக்கிய உலகம் போற்றும் உத்தமர். அத்தகையமகாத்மாகாந்தியின்சிலைஉடைக்கப்பட்டிருப் பதற்கு எனது கண்டனத்தை வெளிப்படுத்துகின்றேன்.

எந்தஒருமானிடனும்இச்செயலைச்செய்திருக்க முடியாது. இச்செயலுக்கு எவரும் ஒரு காரணம் சொல்ல முடியாது. இச்செயலானது மனித குலத்தின் முன்னால் ஒரு இழிவுச் செயலாகும். கொடுஞ் செயலாகும்.

இச்செயல் தொடர்பில் நானறிந்தது என்னவெனில் 16.05. 2016 அன்று முல்லைத்தீவு அரச அதிபர் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் 2016 மேத்திங்களில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுமாறு கேட்டிருக்கிறார். பண்டார வன்னியன், வள்ளுவர், பாரதியார், மகாத்மா காந்தி முதலான எட்டுச் சிலைகள் அமைக்க 2016 வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட தீர்மானமாகும்.

அத்தீர்மானத்தின்படிநிறுவப்பட்டுள்ள மகாத்மாகாந்திசிலையைஉடைத்தமை உள் நோக்கம் நிறைந்த மூடர் செயலாகும் என்பது வெளிப்படை. தமிழின விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த உறவுகளின் ஆத்மாக்களின் முன் அந்த விடுதலை வீர மண்ணில் இச்செயல் நடைபெற்றமையைப் பாரதி பாடியது போல் "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்" என்று கண்ணீர் விடத்தான் வேண்டும்.

எடுத்ததெற்கெல்லாம் அறிக் கைப் போர்நடத்துபவர்கள்கூட இச்செயலைக் கண்டிக்காமல்விட்டுவிட்டார்கள் என்பது மனதை நெருடுகின்றது. - என்று தெரிவித்துள்ளார். (ம)

## காலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் 22 மற்றும் 18 வயதான இளைஞர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர். கார் சாரதி காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தஇளைஞர்களின்சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்மீமன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனா பணியாற்றியது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவெளிநாட்டுச் செய்தியாளர்ளை கடந்த வியாழக்கிழமை சந்தித்தபோது கூறியிருந்தார். (ம)

## ஆட்சியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன்,

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கருத்து அநாவசியமானது. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போதும், அதே ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போதும் மக்கள் தமது ஆணையை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்தினர்.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவை நாட்டு மக்கள் தெரிவு செய்தனர். அதேவேளை, பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவைத் தேர்ந்தெடுத்தனர்.

இந்த இரண்டு தேர்தல்களிலும் மஹிந்த ராஜபக்ஷ தோற் கடிக்கப்பட்டார். இதன் போது மீண்டும் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் வருவதற்கு முயன்ற மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களினால் தோற்கடிக் கப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய கருத்து ஜனநாயகத்தை உதாசீனப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. நல்லாட்சியை எவரும் குழப்பக் கூடாது. மக்களின் ஜனநாயகத் தீர்ப்புக்கு ஏற்றவாறு நடக்க வேண்டும். - என்றார். (ம)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்து ஆசீர்வாதம் பெற்றார்.

அப்போதே ஜனாதிபதி மேற்கண்ட கருத்தை முன்வைத்தார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மகா சங்கத்தினரின் ஆசீர்வாத மின்றி புதிய அரசமைப்பை வரைவதற்குத் தாம் தயாராக இல்லை. புதிய அரசலமைப்பு ஒருபோதும் தனிப்பட்ட கருத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படும் ஓர் ஆவணமல்ல. மக்கள்பிரதிநிதிகள், கல்விமான்கள் மற்றும் பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவு களைக் கருத்திற் கொண்டே அது தயாரிக்கப்படுகின்றது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் போது மக்களின் கருத்துக்களை கேட்டறிய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் சரியான முறையில் அறிந்திருக்கவில்லை என இச்சந்திப்பின் போது அஸ்கிரிய பீடாதிபதி ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டினார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, புதிய அரசமைப்புதொடர்பாகபொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு மீண்டும் சந்தர்ப்பத்தைத் தாம் பெற்றுக் கொடுப்பார் எனத் தெரிவித்தார்.

நாட்டின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி நாட்டுக்குத் தேவையான பல்வேறு சமூக மற்றும் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு கடந்த இரண்டு வருட காலமாக ஜனாதிபதியின் தலைமையில் நல்லாட்சி அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்த போதும் அது தொடர்பாக மக்களுக்குச் சரியாக தெளிவுபடுத்தப்படாத காரணத்தினால் பிரச்சினைகள் எழுவதாக மகா நாயக்கதேரர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொண்ட செயற்றிட்டங்கள் குறித்து மக்களுக்கு விளக்குவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் [புத்தகக் கடல்]
மலிவு விற்பனையும்

புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், பாடசாலை சீருடைத் துணிகள் என்பவற்றை ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

இல. 212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 5542, 021 567 1527, acdil@gmail.com

சிவபூமி SIVA POOMI

சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை
கோண்டாவில்

புதிய மாணவர் அனுமதி - 2017

◆ விசேட தேவையுடைய மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்
◆ வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களுக்கான போக்குவரத்து வசதி உண்டு.
◆ இலவசக் கல்வி, உணவு வழங்கப்படும்.

அதிபர்
சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.
021 222 7938

விண்ணப்பங்களை நேரில் சமர்ப்பிக்கவும்.

(R-054)

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வட மாகாணத்தில் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

கிருபா லேணர்ஸ்

No.1 Driving Training School

(அரச அங்கீகாரம் பெற்ற 'A' தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி அளிக்கப்படும்.

+ வாகனப் பயிற்சிகள் சகல கிளைகளிலும் வழங்கப்படும். குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாகசாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
+ அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகனப் பயிற்சிகள் வழங்கப்படும்.
+ தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
+ தவணை முறைக் கட்டணங்கள்.
+ வான், கார், முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
+ ரெயலில் சித்தியடையத் தவறின் தொடர்பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
+ எழுத, வாசிக்க கஷ்டமானவர்களுக்கும் மற்றும் சிறந்த சாரதிகளை உருவாக்குவதற்கும் நவீன முறை வீதிச்சட்டம் பற்றிய வீடியோ வகுப்புக்கள் நடைபெறும்.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள்

- அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதி)
- திருமண அத்தாட்சிப் பத்திரம் (பெண்கள் மட்டும்)
- சாரதி அனுமதிப் பத்திரம் (வைத்திருந்தால்)
- தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் வழங்கும் மருத்துவச் சான்றிதழ்

எமது கிளைகள்:

A9 வீதி, கிளிநொச்சி.
0212285505 0714546955

216, A9 வீதி, வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்)
0242227777. 0777100444

இல.227/6, கே.கே.எஸ்.வீதி
சுன்னாகம் (மதவடி அருகில்)
0212242022. 0714546956

கண்டி வீதி, சாவகச்சேரி.
(நீதிமன்றம் அருகில்)
0214923202. 0712270700

முதலாம் கடைச்சந்தி, பருத்தித்துறை.
0214923201. 0714546961

பிரதான வீதி, நெல்லியடி.
(பொலிஸ் நிலையம் முன்பாக)
0213006550. 0714546958

யாழ் கச்சேரியடி. இல.36.
கச்சேரி நல் லூர் வீதி, யாழ்ப்பாணம்.
0212226699. 0767225292

ஓம் பிளாசா, பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.
0212226688. 0712422622

புளியடிச் சந்தி , முல்லை வீதி,
விசுவமடு.
0213201515. 0714546955

நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி,
முழங்காவில்.
0213006544,0714546955

வாடியடி சந்தி, பூநகரி.
0213201818. 0714546955

தலைமைக் காரியாலயம்
இல.226,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே :- 021 222 4353, 021 492 3200, 077 722 5292

KIRUBA LEARNERS
Govt. Approved 'A' Grade Driving Training School

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்

வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை



எமது சேவை 365 நாட்களும்

அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
72 மணி நேரத்தில்
உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும்
(Express Service)

உங்கள் வீடுகளுக்கே வந்து
பொதிகள் ஏற்கப்பட்டு
வெளிநாடுகளில்
ஒப்படைக்கப்படும்
(Door to Door Service)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call 021 222 3536

முகவர்கள்
DHL aramex FedEx Express SKYNET

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.